
www.tamilarangam.net

# இசை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இந்த இதழில்..




* தொடரும் இனஒழிப்பு
  - அனந்தன்
* அம்புலிமாமாவிடம் போவோம்
  - லே. முருகபூபதி
* கவிதைகள்
  - சோலைக்கிளி
* இசையில் இனவாதம்
  - அசரீரி
* இரண்டாம் வீராநாய்க்கர்
  - அன்பழகன்
* கிளறல்கள்
  - துடைப்பான்
* அம்மாவும் பெரியம்மாவும்
  - புவனன்
* நான், அவனல்ல
  - வாசுதேவன்
* கவிதைகள்
  - அ. ஜ. கான்
* கலைஞர். ஏ. ரகுநாதனுடன்..
  - அ. யோகநடராசா
* புத்தளம் வரலாறும் மரபுகளும்
  - சுபனேஷ்
* தொழிலாளர் சிக்கல்கள் - 2
  - மாதவன்
* வாக்குமூலம்
  - எம். கே. எம். ஷகீப்
* தமிழக அலைவரிசை
  - இரா. நந்தன்
* இவனை அறியுங்கள் !
  - வாசு
* உலா
  - சி. சிவசேகரம்



கணனி எழுத்துப்பதிவு
ஸ்ரீஸ்கந்தராஜா
மாதவன்
வடிவமைப்பு :
புவனன்

அட்டைப்படங்கள்
நன்றி :
Images of SriLanka
Through
American Eyes.
Reporters sans
frontiers.
பிறபடங்கள் :
Liberation
Time
Le Monde
CFDT


ஓசையில் வெளிவரும் ஆக்கங்களோடு ஓசைக்கு முழுக்கமுழுக்க உடன்பாடு இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. நல்ல கருத்துக்களுக்கு வலுசேர்க்கும் நோக்குடன் ஆரோக்கியமான விவாதங்களைத் தூண்டும் வகையிலும் ஆக்கங்கள் பிரசுரமாகும். - ஓசை


# ஓசை

காலாண்டிதழ்

1993
ஆடி - புரட்டாதி

ஓசை - 4
ஒலி - 3

இதழ் 13

ஆசிரியர் குழு

தொடர்புகளுக்கு :
'OOSAI'
C. L. A. L. P
B. P : 701 - 09
75425 PARIS CEDEX.
FRANCE.


## கறுப்பு ஜூலை

நினைவு கூரல் என்பது அர்த்தமிழந்து வெறுமனே சம்பிரதாய பூர்வமான செயற்பாடாகிக்கொண்டிருப்பது கவலை தரும் விஷயம்.

83 ஜூலை,
வெலிக்கடைப்படுகொலை,
இலங்கை அரசின் திட்டமிட்ட இனக்கலவரங்களைத்தொடர்ந்து உக்கிரமடைந்த ஈழப்போராட்டம் பத்து ஆண்டுகளையும் கடந்து தொடர்கிறது.

யாழ் குடா நாட்டுள் மட்டும் 3 இலட்சம் அகதிகள் !
கிழக்கு மாகாணம் முற்றாகப்பறிபோய்க்கொண்டிருக்கிறது !
பட்டினிச்சாவுகள் தொடர்கின்றன...
வடக்கு, கிழக்கிலிருந்து மக்கள் பாதுகாப்புத்தேடி கொழும்புக்கு ஓடும் நிலை !
சர்வதேச அகதித்தெருக்களில் ஈழத்து அகதிகளின் அவலம் !

சாதனைப்பட்டியல்களை மட்டுமே நீட்டி மார்தட்டும் நாம் இவற்றிற்கு என்ன சொல்லப்போகின்றோம் ?

இந்நிலையிலாவது, கடந்தகாலப்போராட்ட அணுகுமுறைகளை மீள்பரிசீலனை செய்வதும், தவறுகளைத்திருத்திக்கொள்வதும் அனைத்துத்தரப்பு அரசியலாளர்களதும் உடனடிக்கடமையாகும். இதுவே விடுதலைக்காய் இரத்தம் சிந்திய போராளிகளுக்கும், மக்களுக்கும் செலுத்தும் அஞ்சலியுமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# தொடரும் இன ஒழிப்பு

- அனந்தன்

யூகோஸ்லாவியாவின் பிளவுக்கான காரணங்கள் பல. யூகோஸ்லாவியப் பொருளாதாரத்தின் சரிவு யூகோஸ்லாவின் முக்கிய தேசிய இனங்களிடையி லான முரண்பாடுகளைக் கூர்மைப் படுத்தியது. ஆயினும் சோவியத் யூனிய னின் பிளவு வரை யூகோஸ்லாவியாவின் தேசிய இனங்கள் யூகோஸ்லாவியா வின் பிளவு பற்றித் தீவிரமாக இருக்கவில்லை. ஸ்லாவிக் இன மக்கட் பிரிவுகளை ஒன்றுபடுத்தி உருவான இத் தேசம் பெரும்பான்மை இனமான ஸேர்பியர் மற்றும் க்றொவற், மஸிடோனியா, ஸ்லொவீனிய முஸ்லிம் மக்களையும் ஸ்லாவியரல்லாத அல்பானியரையும் வரலாற்றுக் காரணங்களால் வடகிழக்கு எல்லையில் எஞ்சியிருந்த ஹங்கேரிய மற்றும் பிற சிறுபான்மையி னரையுங் கொண்டது.

ஸேர்பிய, க்றொவற், முஸ்லிம் மக்கள் ஒரே மொழி பேசுவோர். ஸேர்பியர் ஸேர்பியா, மொன்ட்டெ நெக்ரோ அரசுகளிற் பெரும்பான்மை இனத்தவரை யும் க்றொவற் மக்கள் க்றொவாஷியாவிற் பெரும்பான்மையாயும் உள்ளனர். முஸ்லிம்களும், க்றொவற், ஸேர்பிய மக்களும் கலந்து வாழும் பகுதி பொஸ் னியா -ஹெர்ற்ஸொகொவினா (வசதிக்காக இங்கு அது பொஸ்னியா எனப்ப டும்). ஸேர்பியர் சம்பிரதாய கிறிஸ்தவர்கள். க்றொவற் இனத்தவர் கத்தோலிக் கர்; அவர்களது மதமாற்றம் வத்திக்கான் அதிகாரம் உச்சத்தில் இருந்தபோது நேர்ந்தது. மத வேறுபாடு, ஒரே மொழி பேசிய இரு பகுதியினரையும் காலப்போக்கில் வேறு தேசிய இனங்களாக்கியது. ஸேர்பியர் கிழக்கு ஸ்லாவிக் மொழிகளிற் போன்று, (ரஷ்ய மொழிக்கும் உரிய) ஸிரிலிக் எழுத்தையும் க்றொவற்றுக்கள் ரோமன் எழுத்தையும் பயன்படுத்தலாயினர். முஸ்லிம்களின் மதமாற்றம் துருக்கியின் எழுச்சியை ஒட்டியதும் காலத்தாற் பிற்பட்டதுமாகும். பெரும்பாலும் ஸேர்பியரே இஸ்லாத்தைத் தழுவினர். இவர்களில் ஒரு பகுதியினர் துருக்கிய ஆட்சியின் வீழ்ச்சியையடுத்து சம்பிரதாய கிறிஸ்தவர்க ளாக மீண்டும் மாறினர். முஸ்லிம்கட்கும் ஸேர்பியர்கட்குமிடையே அதிகம் பகைமை இருந்ததில்லை. ஸேர்பிய -க்றோவாஷிய மோதல்களுக்கு நீண்ட வரலாறு இருந்த போதும் அந்நிய ஆக்கிரமிப்பிற்கு எதிராகத் தென்ஸ்லாவிக் மக்களது போராட்டம் யூகோஸ்லாவியாவின் தோற்றத்திற்கும் தொடர்ச்சிக்கும் ஆதாரமாயிற்று.




AFP infographie - Francis Nallier

முதலாம் உலக யுத்தத்தின் முன்பிருந்து ஒஸ்ற்றிய - ஹங்கேரிய சாம்ராஜ்யமும் இரண்டாம் யுத்தத்தின் போது ஃபாஸிஸ ஜேர்மனியும் ஆக்கிரமித்த போது, ஸேர்பிய இனத்தவர் மத்தியில் இருந்து வெளிப்பட்ட எதிர்ப்பே ஆக்கிரமிப் பாளர்களின் முறியடிப்புக்கு முக்கியமான பங்களித்தது என்பதும் க்றொவற் ஸ்லொவீனியர் மத்தியில் ஆக்கிரமிப்பாளர்கட்கு ஆதரவு இருந்தது என்பதும் ஸேர்பியத் தேசியவாதிகளது வாதம். சிறுபான்மைத் தேசிய இனத்தவர் மத்தியின் சிறு பகுதியினரே இவ்வாறு நடந்தனர் என்பதும் ஸேர்பியர் நடுவிற் கூடத் துரோகிகள் இருந்தனர் என்பதும்சிறுபான்மைத் தேசிய இனங்களின் சார்பிற் தரப்படும் வாதம். எவ்வாறாயினும், இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு நிறுவப்பட்ட யூகோஸ்லாவியச் சமஷ்டிக் குடியரசில் தேசிய இனங்களுக் கிடையிலான நல்லுறவு வளரும் வாய்ப்பு இருந்தது. யூகோஸ்லாவியாவின் ஸோஷலிஸம் இரண்டுங்கெட்ட ஸோஷலிஸமாகவும் சோவியத் யூனியனுடன் முன்கூட்டியே ஏற்பட்ட முரண்பாட்டால் சர்வதேச சோஷலிஸப் போக்கி னின்று தனிமைப்பட்டதாகவும் இருந்தது. சர்வதேச அரசியலில் 1950-80 களில் யூகோஸ்லாவியா அணி சேரா நாடுகள் வரிசையில் ஒரு முக்கிய நாடாக விளங்கியபோதும், உள்நாட்டில் மோசமடைந்து வந்த பொருளாதார நிலைமை பழைய காயங்களைக் கிளறுவதற்கு வசதியாயிருந்தது.

யூகோஸ்லாவியாவின் ஐக்கியத்தைப் பேணுவதற்காகச் சிறுபான்மைத் தேசிய இனங்கட்கு அளவு மீறிய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதாக எண்ணும் போக்கு ஸேர்பிய தேசியவாதிகள் மத்தியில் ஆழமாக வேரூன்றியிருந்தது. ஆயினும் ஸேர்பியாவின் தேசிய எல்லை இன்னும் விஸ்திரமானதாக இருக்க வேண்டுமென்ற கருத்தை அவர்களால் நேரடியாக வலியுறுத்த முடியவில்லை. எவ்வாறாயினும் ஸேர்பியாவின் எல்லைக்குள் வடக்கே இருந்த வொய்வொ டினா சுயாட்சி மாகாணத்தில் இருந்த ஹங்கேரிய மற்றும் தேசிய சிறுபான்மை இனங்கள் ஏகப் பெரும்பான்மையினரான அல்பானிய மக்கள் மீதும் பகைமை உணர்வு கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, முக்கியமாக ஸேர்பியா வின் தலைமை ஸேர்பிய தேசியவாதிகளின் பிரதிநிதியான ஸ்லொபடன் மிலொஸிச் கைக்கு வந்தபோது, வெகுதூரம் வளர்க்கப்பட்டிருந்ததும் கொஸவோவின் அல்பானிய இன மக்களது உரிமை மறுப்பு, அம் மக்கள்.

யூகோஸ்லாவிய சமஷ்டியில் தமக்குத் தனியான ஒரு அரசு (பிரிவினை அல்ல) தேவை என்று கேட்க உந்தியது. வரலாற்றுக் காரணங்களால் அல்பானியாவுக் கும் யூகோஸ்லாவியாவுக்குமிடையிலிருந்த பகைமையின் விளைவாக கொஸ வோ தனி அரசாவது பற்றி ஸேர்பியாவிற் கடும் எதிர்ப்புக் காணப்பட்டது. கொஸவோ மீது கடுமையான அரச அடக்குமுறை கட்டவிழ்க்கப்பட்டது. இக் காலத்தில், சோவியத் யூனியன் இன்னமும் ஒரு வலிய நாடாகவும் கிழக்கு ஐரோப்பா அதன் செல்வாக்கிற்கு உட்பட்டும் இருந்தன. யூகோஸ்லாவியா வின் அணி சேரா நிலைப்பாடு அன்றைய நிலையில் மேலை நாடுகட்கும் வசதியாக இருந்தது. அத்துடன், பிறப்பால் இஸ்லாமியரானவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட அல்பானியா, அன்று கடுமையான இடதுசாரி நிலைப்பாட்டையுடைய நாடாகக் காணப்பட்டதால், கொஸவோ வின் அல்பானிய இன மக்கள் மீது அனுதாபம் அதிகம் காட்டப்படவில்லை.

கிழக்கு ஐரோப்பாவில் 1989 ம் ஆண்டின் ஈற்றில் ஏற்பட்ட மாற்றங்கள், யூகோஸ்லாவியா பற்றி மேலை நாடுகளின் நிலைப்பாட்டில் ஒரு திருப்பத்தை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்படுத்தின. சோவியத் யூனியனின் குலைவு, யூகோஸ்லாவியாவின் ஸ்திர மின்மையின் முக்கியத்துவத்தை முற்றாகவே வேறு வகையினதாக்கின. ஜேர்மன் வலதுசாரி அரசாங்கம், கிழக்கு ஜேர்மனியின் இணைப்பின் காரணமாக ஏற்பட்ட உற்சாகத்தால், மீண்டும் ஜேர்மன் மேலாதிக்கக் கனவுகளை ஊக்குவிக்கும் விதமாகச் செயற்பட்டது. இச் சூழலில், ஜேர்மனி, யூகோஸ்லாவியா பிளவு படுவதை ஊக்குவிக்கும் முறையிற் செயற்பட்டது. ஸேர்பிய தேசியவாதத்தின் எழுச்சி, மற்றத் தேசியவாதிகளது எழுச்சிக்கு ஒரு உந்துதலாக இருந்த போதும், ஜேர்மனியின் ஊக்குவிப்புப் பற்றிய ஸேர்பிய ஐயங்களைக் கலைக்க ஜேர்மனி எதுவுமே செய்யவில்லை.

சர்வசன வாக்கெடுப்புக்களின் அடிப்படையில் ஸ்லொவினியாவும் க்றொவாஹியாவும் பிரிவினையைத் தெரிந்தெடுத்தன. ஸேர்பியர்கள் கணிசமாக வாழும் பகுதிகளையுடைய க்றொவாஹியாவில், இது எல்லை பற்றிய மோதல்கட்குக் காரணமாயிற்று. இந்த நாடுகளின் பிரிவினைக்கு ஜேர்மனி அளித்த ஆதரவு ஸேர்பியாவில் மேலும் கசப்புக்குக் காரணமாயிற்று. இரண்டு உலகப் போர்களில் ஜேர்மன் பெருந் தேசியவாதத்தின் கொடுஞ் செயல்களை அதிகளவில் அனுபவித்த ஸேர்பிய தேசிய இனம் தன் தேசியவாதத் தலைமையின் அச்சங்களைப் பகிர்ந்தது அதிசயமில்லை. அண்மையிற்கூட க்றொவாற் தேசியவாதப் படைகள் பொஸ்னியாவின் போரிடும் போது ஃபாஸிஸ வாதிகளின் கொடிகளைத் தாங்கியவாறு சென்றமை இந்த அம்சங்கள் முற்றிலும் நியாய மற்றவை அல்ல என்றே உறுதி செய்கிறது. (இரண்டாம் உலகப் போரின் போது க்றொவாற் தேசிய வாதிகள் சிலருக்கும் ஜேர்மன் ஃபாஸிஸத்துக்கும் இடையில் இருந்த நெருக்கத்திற்கு ஹிற்லர் தொடர்பாக வத்திக்கானில் உள்ள கத்தோலிக்க அதிகாரபீடம் கடைப்பிடித்த சந்தர்ப்பவாத நிலைப்பாடும் கணிசமான பங்களித்தது).

எவ்வாறாயினும், ஸேர்பிய தேசியவாதத்தின் எழுச்சி சகல சிறுபான்மையினரையும் மேலும் பயமுறுத்தியமை உண்மை. மூன்று முக்கிய தேசிய இனங்களைத் தன்னகத்தே கொண்ட பொஸ்னியாவில் ஒவ்வொரு இனத்திற்குமுரிய எல்லைகளை வகுப்பது எளிதல்ல. பொஸ்னியாவைத் தனது அதிகாரத்திற்குட்பட்ட ஒரு பரந்த ஸேர்பியாவின் கீழ். (அதாவது ஸேர்பியா, மொன்ட்டெநெக்ரோ, பொஸ்னியா மற்றும் க்றோவாஹியாவின் ஸேர்பியப் பகுதிகளைக் கொண்ட ஒரு நாட்டின் கீழ்) கொண்டுவரும் நோக்கம் ஸேர்பிய தேசியவாதிகளாற் பகிரங்கமாகவே தெரிவிக்கப்பட்டதையொட்டி, பொஸ்னியாவின் முஸ்லிம்களும் க்றொவாற் மக்களும் தமது இருப்புப் பற்றி அஞ்சினர். இதன் விளைவாக, பொஸ்னியாவின் சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டது. அதே வேளை, ஸேர்பிய, க்றொவாஹிய ஆட்சியாளர்கள் பொஸ்னியாவைத் தம்மிடையே கூறு போடுவதற்கான திட்டங்களையுந் தீட்டிக் கொண்டார்கள். இதில் அவர்களிடையே ஒத்துழைப்பு இருந்தது.

ஸேர்பியாவின் தேசிய வாதத்தின் தீவிரம் முஸ்லிம் மக்களைத் தாம் வழமையாகச் சார்ந்து நிற்கும் ஸேர்பியர்களிடமிருந்து பிரித்தது. பொஸ்னியாவின் ஸேர்பியர்கள் தமக்கென்று ஒரு தனிநாட்டை உருவாக்கி, ஈற்றில் ஸேர்பியாவுடன் இணைக்கும் நோக்குடன் தொடக்கிய ஆக்கிரமிப்பு யுத்தத்தில், க்றொவாற், முஸ்லிம் இனங்கள் இணைந்து போராட வேண்டிய சூழ்நிலை தோன்றியது. எனினும் க்றோவாஹிய ஆட்சியாளர்களது விஸ்தரிப்புவாத நோக்கங்கள் இந்த ஐக்கியத்துக்கு ஆப்பு வைத்தன. இதன் விளைவாகப் போராட்டம் மும்முனைப் போராட்டமாகியது. இனக்குரோதமும் இன



ஒழிப்பும் "இனச் சுத்திகரிப்பு" என்ற பேரில் மக்களை தம் இருப்பிடங்களினின்று விரட்டும் கொடுமையும் மிகுந்த இப்போரில் அதிகம் இழந்தவர்கள் முஸ்லிம்களே.

ஸேர்பியா வழியாகவும் க்றொவாஹியா வழியாகவும் மற்ற இரு தேசிய வாதச் சத்திகளும் ஆயுதபாணியாக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். ஆயுதங்கள் மீது விதிக்கப்பட்ட தடை, முஸ்லிம்களை மட்டுமே பாதித்தது. நாற்புறமும் மற்றத் தேசிய இனங்களின் ஆயுதபாணிகளாற் சூழப்பட்ட முஸ்லிம் பிரதேசங்கள் அடுத்தடுத்து இழக்கப்பட்டு முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டு விரப்பட்டனர். உணவு, மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தின் மீது பகைவர்களால் எற்படுத்தப்பட்ட தடை, தனிமைப்படுத்தப்பட்ட முஸ்லிம் பிரதேசங்களின் நிலைமைகளை மேலும் மோசமாக்கியது. இந்த நிலை இன்னமும் தொடர்கிறது.

மூன்று தேசிய இனத்தவர்களும் யுத்தத்தாற் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு தேசிய இனத்தின் பேராலும் மற்ற இரண்டிற்கும் கொடுமைகள் செய்யப்பட்டுள்ளன. எனினும் ஸேர்பியாவின் ராணுவ வலிமையும் முஸ்லிம்களின் பலவீனமான நிலைமையும் ஸேர்பியர்களாலேயே அதிகளவு கொடுமைகள் நிகழவும் முஸ்லிம்களே அதிகளவு பாதிக்கப்படவும் காரணமாயின.

போரை நிறுத்தவும் சமாதான தீர்வைக் கொண்டுவரவும் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. மூன்று தேசிய இனங்களதும் பிரதேச உரிமைகளை நிலை நிறுத்தும் நோக்கில் முன்வைக்கப்பட்ட ஸைரஸ் வான்ஸ் - டேவிட் ஓவன் பிரேரணையை நிராகரித்த ஸேர்பிய தேசியவாதிகள், மேலும் பிரதேசங்களைக் கைப்பற்றி க்றொவாற் தேசியவாதிகளுடன் சிறிது சமரசம் ஏற்பட்டபின், முஸ்லிம்களை மேலும் பலவீனப்படுத்தும் வகையிலான ஒரு தீர்வை முன்வைத்துள்ளனர். ஐரோப்பிய சமூகத்தின் பூரண ஆதரவின்மை காரணமாகவும் ஐ.நா.சபையின் இயலாமையின் விளைவாகவும்துவண்டு விழுந்த வான்ஸ்-ஓவன் ஆலோசனையின் கர்த்தாக்கள், தமது ஆலோசனையைக் கைகழுவியது மட்டுமின்றிப், புதிய ஆலோசனையே நடைமுறைச் சாத்தியமானது என்று கூறி ஆதரிக்கின்றனர்.

அடுத்தடுத்து ஏற்பட்ட தோல்விகளும் பின்னடைவுகளும் காரணமாக பொஸ்னியக் குடியரசின் ஆட்சியாளர் மத்தியிலும் பிளவுகள் தோன்றியுள்ளன. அண்மையில் ஏற்பட்ட க்றொவாற் முஸ்லிம் மோதல்கள் முஸ்லிம்களின் நிலையை மேலும் பலவீனமாக்கியுள்ளது. மத்திய கிழக்கில் உள்ள வலதுசாரி இஸ்லாமிய சர்வாதிகார ஆட்சியாளர்களைத் தன் பொருளாதாரத் தேவைகட்காகத் திருப்தி செய்யும் நோக்குடன் அமெரிக்கா பொஸ்னியாவின் ஒருமைப்பாட்டிற்கும் பொஸ்னிய முஸ்லிம்களின் பாதுகாப்புக்கும் சாதகமாகச் செய்த பிரகடனங்களும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களும் பொஸ்னிய முஸ்லிம்கட்கு எதுவகையிலும் உதவவில்லை.

தமது சரியுஞ் செல்வாக்கை நிலைநிறுத்தும் நோக்கில் ஈராக் மீது தாக்குதல் தொடுக்கும் அமெரிக்க ஜனாதிபதிகளும் ஸொமாலியாவில் ஆயுத நடவடிக்கை எடுக்கத் தயங்காத ஐ.நா. சபையும் பொஸ்னிய முஸ்லிம்களின் இன அழிவைத் தடுக்கவும் அவர்களது தேசிய உரிமைகளை பொஸ்னிய தேசிய அமைப்பிற்குள் நிலைநிறுத்தவும் இயலாதிருப்பது ஏன்? இது முஸ்லிம்கட்கெதிரான மேலை முதலாளித்துவச் சதி என்ற வாதம் கொஞ்சம் கொச்சையானது தான். ஆயினும் உலக முஸ்லிம் மக்களது சந்தேகங்கள் முற்றிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையற்றனவல்ல.
பொஸ்னிய நெருக்கடி குறுகிய காலத்திலேயே ஐரோப்பாவினுள்ளும் சர்வ தேச மட்டத்திலும் முதலாளித்துவ வல்லரசுகளிடையில் உள்ள முரண்பாடு களை மேலும் கூர்மைப்படுத்தும். அதே வேளை, ஒரு சுமூகமான தீர்வுக்கான முயற்சி சாத்தியமில்லாது போனமை முன்னாள் யூகோஸ்லாவியாவின் சகல மக்களுக்கும் ஒரு பெரு நட்டத்தையே ஏற்படுத்தியுள்ளது.

சோவியத் யூனியன், அதன் சகல குறைபாடுகளுடனும் அதன் பம்மாத்துத்த னமான சோஷலிஸம் இல்லாமலுங்கூட, ஒரு வலிய சத்தியாகத் தொடர்ந்தும் இருந்திருப்பின் அண்மைக்காலத்தில் நடந்த சில உலக அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடுமோ என்ற ஐயம் நியாயமானது தான். ஆயினும் சோவியத் யூனியனின் உடைவு சாத்தியமான பிறகு, மற்றவை பற்றிய ஊகங்கள் வெறும் ஊகங்களாகவே இருக்கமுடியும். எனினும், சமீபகால நிகழ்வுகள் ஏகாதிபத்திய வல்லரசுகளின் பலவீனங்களையே மேலும் பகிரங்கப் படுத்தி வருகின்றன. அவற்றுக் கெதிரான போராட்டங்களைப் பலவீனப்படுத் துவது என்ன? ●

## அம்மாவும் பெரியம்மாவும்

குட்டித்தம்பி பக்கத்து வீட்டு பபாவோடு விளையாடிக் கொண்டிருக்கிறன்.
அவனைப்போல இருந்திட்டால் எவ்வளவு சுகம். நல்ல சந்தோசமாய் சிரிச்சு விளையாடிக்கொண்டிருக்கிறான்.
இடைக்கிடை வரும் ஷெல் சத்தத்திற்கு பயந்தோடி பதுங் குகுழிக்குள்ள இருந்து நாங்கள் முழுசேக்குள்ள மட்டும் அவனும் எங்களப்பாத்து தறுதறுவெண்டு முழுசுவான். மற்றும்படி பிரச்சினையில்லை. சாப்பாட்டுக்கஸ்டம் கூட அவ னுக்குப்பெரிசா இல்ல.

நாங்களும் எங்கட வீடுவாசலெல்லாம் விட்டுட்டு இங்க ஓடிவந்து மூண்டுமாதத்துக்கு மேலயாகுது. பெரியம்மாவைக் கும் இடைஞ்சல்தான். ஆனா அதுக்கு இப்பிடியா நடந்து கொள்றது !

இண்டைக்கு பெரியம்மாவுக்கும் அம்மாவுக்கும் பெரிய சண்டை. தனித்தனியாச்சமைச்சுச் சாப்பிடுவம் எண்டு வெளிக்கிடுகினம். ஏதோ பழையகாணிச்சண்டையாம்... திரும்பக்கிளறிக்கொண்டு...
எனக்கு ஆத்திரமாயும் அழுகைஅழுகையாயும் வருகுது.

இவ்வளவு அமளிக்குள்ளயும் அப்பா எட்டிக்கூடப்பா க்கேல்ல. பாவம் அவராலதான் என்ன செய்யமுடியும் ? சார்மனக்கதிரைக்குள்ள, அடுத்த ஷெல் எப்பவருகுதோ எண்டு அண்ணாந்தபடி கிடக்கிறார்...

- புவனன்



○ சிறுகதை ○



- லே. முருகபூபதி

## அம்புலிமாமாவிடம் போவோம்

"அப்பா... சந்திரனுக்கு முதலில் போனவர் 'ஆம்ஸ்ரோங்' தானே!" - பாட சாலைப்பாடத்தின் கேள்விக்குப் பதில் தெரிந்தும் -ஊர்ஜிதப் படுத் திக் கொள்ளும் ஆவலுடன் மூத்த மகள் காயத்திரி கேட்டாள்.

"சந்திரனுக்கு நிறையப் பெயர் உண்டுதானே அப்பா.... எங்கள் தமிழில் - ENGLISH இல் -MOON மட்டும்தான். இரண்டாவது மகள் தேவி இடையில் புகுந்து தனது தேடலை நிச்சியப்படுத்திக் கொண்டிருந்தாள்.

இவள் எப்போழுதும் இப்படித்தான், தனது படிப்பில் கருத்தூன்றமாட்டாள். அரைமணிநேரமாவது ஓரிடத்தில் நிலையாக இருந்து படிக்க அவளால் முடியாது. பல சாட்டுக்களுடன் எழுந்து..... எழுந்து திரிவாள். எனினும் - அவளின் தேடல் சரியானதுதான்.
"சந்திரனுக்கு வேறு பெயர்கள்...." கேட்டேன்.

மிகுந்த ஆர்வமுடன் எழுந்து "நிலா - மதி, அம்புலி.... எனக்கு இவ்வளவு தான் தெரியும்" என்றாள்.

"கெட்டிக்காரி... இனி... உன்ர பாடத்தை படி" அவளைக் கலைத்துவிட்டு இளையவன் மகனைப் பார்த்தேன்.

அவன் படிக்கவில்லை. 'மக்டொனல்ட்ஸ்'- ஸில் வாங்கிச் சேகரித்த MAGNETO க்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறான்.

நால்வகை MAGNETO க்கள்.
ஒவ்வொரு சீசனுக்கும் விதம் விதமாக பிள்ளைகளைக் கவரும் வண்ணம் புதிய புதிய தாயாரிப்புகள் "மக்டொனால்ட்ஸ்" ஸில் விற்பனைக்கு வந்து விடும்.

போதாக்குறைக்கு தொலைக்காட்சியில் அடிக்கொருதடவை கவர்ச்சியான விளம்பரங்கள் வேறு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீட்டில் கேட்கவா வேண்டும்.
விளம்பரம் காணும் பொழுதெல்லாம் மகனிடமிருந்து விண்ணப்பமும் வந்துவிடும்.

"அப்பா... அடுத்தமுறை "மக்டொனால்ட்ஸ் " க்குப் போகும்போது இது வாங்கித்தரவேண்டும்". அங்க விற்பனையாகும் கிழங்குப்பொரியல் அவனுக்கு மிகவும் பிடித்தமானது. நீளநீளமாக நறுக்கப்பட்ட கிழங்குத்துண்டுகள் அளவான பதமுடன் உப்பும் தூவப்பட்டு -விரும்பும் 'ஸைஸில்' மனங்கவரும் உபசரிப்போடு கொடுக்கும்போது -அதனை வாங்குவதோடு நின்றுவிடமாட்டான்.

வீட்டிலும் வெளியிலும் கொண்டுசென்று விளையாடுவதற்காக அங்கு ஏதாவது வாங்கித்தரும்படி அடம் பிடிப்பான், விடாக்கண்டன்.

"ஓமோம்.... நன்றாகப்படிக்க வேண்டும்....." குழப்படி செய்யக்கூடாது.... அப்பதான் வாங்கித்தருவேன்.
அவன் நன்றாகப்படித்ததாகத் தெரியவில்லை. குழப்படிகளும் குறையவில்லை.
ஆனால் - 'மக்டொனால்ட்ஸ்' தயாரிப்புகள் வீட்டில் குவிந்து கொண்டுதானிருக்கிறது.

அவற்றின் பெயர்களும் எனக்கோ மனைவிக்கோ தெரியாது. அவனுக்கு தண்ணீர்பட்டபாடம். பலமுறை கேட்டுத் தெரிந்து கொண்டாலும் நினைவில் தரிக்காது; மறந்துபோகும். அவனுக்கு நினைவில் தங்கிவிடுகிறது.

'பச்சைமண்' ஆழமாகப் பதிகிறதோ?

முதல் வாரம் -WOLVERINE
இரண்டாம் வாரம் - STORM
மூன்றாம் வாரம் - CYCLOPS
நான்காம் வாரம் - MAGNETO
இந்த 'சீசன்' முடிந்தால் - புதிய தயாரிப்புக்கள் தொலைக்காட்சி விளம்பரங்கள் -சுவரொட்டிகளுடன் அறிமுகமாகும்.

"அப்பா.... அம்புலிமாமா இருக்கும் இடத்தில் மக்டொனால்ட்ஸ் இருக்குதா?" வியப்புடன் மகனைப்பார்தேன். விடைதெரியாத வினாக்கள் கேட்டு திணறடிப்பவனுக்கு ஏதும் சொல்லித்தீரவேண்டும்.

"இல்லை...." என்றேன்.
காயத்திரி அக்கா சொல்லிச்சுது.... அங்கே ஆம்ஸ்ரோங் போனாராம். அந்த மாமாவுக்குத் தெரியும். உங்களுக்குத்தான் ஒண்டும் தெரியாது..... அக்கா அந்த மாமாவுக்கு ஃபோண் பண்ணு.... அம்புலி மாமாவை அந்த மாமா தானே போய் பார்த்தார்."
அவனது பேச்சை அனைவரும் ரசித்தோம். சமையலறையில் இடியப்பம் அவித்துக் கொண்டிருந்த மனைவியும் வந்து கலகலப்பில் கலந்து கொண்டாள்.



நேரம் கரைவதைப் பார்த்த மனைவி, "இங்க... இவன்... இன்னும் கொஞ்ச நேரத்தில தூங்கிவிடுவான்... இந்த இடியப்பத்தை தீத்திவிடுறீங்களே...."
மனைவி தந்த தட்டத்துடன் மகனிடம் நகர்ந்தேன்.

அவன் MAGNETO க்களை ஒன்றன்பின் ஒன்றாக இணைத்து தரையில் தள்ளினான். தரைவிரிப்பில் அவை நகரவில்லை. நகராதமை அவனுக்குக் கவலை.

"அப்பா... இங்க... இது ஓடுதில்லை. வெளியில் 'கார் பார்க்' கில்தான் ஓடும். வாங்களேன் வெளியே போவம்."

அவனுக்கு இந்த FLAT வாழ்க்கை அலுத்துத்தான் விட்டது. ஊர் வீட்டைப் போன்று இங்கு ஓடி ஆடி -பாய்ந்து -துள்ளித்திரிந்து விளையாட முடியவில்லையே என்ற கோபம்.

"FLAT வாழ்க்கை - JAIL வாழ்க்கை". யாரோ வீட்டுக்கு வந்த விருந்தினர் எப்போதோ சொன்னதை நினைவில் வைத்து, "எனக்கு இந்த வீடு பிடிக்கவில்லை...... JAIL மாதிரி.... நிலத்தில் இருக்கிற வீடு வேண்டும்.... விளையாட இடம் வேணும்.... ஊஞ்சல் கட்ட மரம் வேணும்...." என்பான்.

அவனைத் திருப்திப்படுத்தவே விடுமுறைகளில் PARK குகளுக்குப் போய் வந்தோம்.

"முதல்ல.... இதைச்சாப்பிடு... அதுக்குப்பிறகு வெளியில் போய் அதுகளை ஓடவிடுவோம்."
முடியாது.... வெளியில போய் விளையாட விட்டாத்தான் சாப்பிடுவேன்..." அடம்பிடித்தான்.
"வெளியில் வெளிச்சம் இல்லை, இருட்டு. அங்கே போய் எப்படி விளையாடுறது" -மறுத்தேன்.
"உங்களுக்கு ஒண்டும் தெரியாது. யன்னலைத் திறந்து பாருங்க... பகல் மாதிரி இருக்கு... அம்புலிமாமா வானத்தில் இருக்கிறார்."
எனக்கு சிரிப்புத்தான் வந்தது. அடக்கிக் கொண்டேன்.

"சரி... சரி.... கூட்டிட்டுப் போங்க.... பிறகு சாப்பிடமாட்டான்.... படுத்திடுவான்" -சுமந்து பெற்றமனம் கட்டளையிட்டது.

"நீதான்... இவனுக்கு செல்லம் கொடுத்துப் பழுதாக்கிறாய்..." -எரிச்சலுடன் அவளைத்திட்டி விட்டு மகனுடன் வெளியில் இறங்கினேன்.
"இப்பதான்... எங்கட அப்பா VERY GOOD" மகன் உற்சாகமாக படியிறங்கினான்.

நிலவு காய்ந்து கொண்டிருக்கிறது, அவனுக்கு உணவூட்டினேன். தரையில் MAGNETO க்களை ஓடவிட்டு... ஓடவிட்டு... ரசித்து -சிரித்து -மகிழ்ந்து- சாப்பிட்டான்.
அலுத்தபோது - "அப்பா.... அம்புலிமாமா பாட்டுப் பாடுங்கள்" -என்றான்.
"நிலா நிலா ஓடி வா.......
நில்லாமல் ஓடி வா........
மலை மீது ஏறிவா........



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மல்லிகைப் பூ கொண்டுவா.....
சேர்ந்து பாடினான். தனக்கு முழுப்பாட்டும் பாடம் என்று தனித்து பாடியும் காட்டினான். பாடியதிலும் இடியப்பம் மீதி வைக்காமல் சாப்பிட்டதும் மன நிறைவு.

"அச்சாப்பிள்ளை...." முத்தமிட்டு வாழ்த்தினேன்.
"அப்பா... அம்புலிமாமா... கதை சொல்லுங்க...."

உங்களுக்குத்தான் ஒண்டுந்தெரியாது.
அக்கா அந்த மாமாவுக்குப் போன் பண்ணு...
அம்புலிமாமாவை அந்த மாமாதானே போய்ப்பார்த்தவர்...

என்ன கதை சொல்வது, சந்திரனில் கால்பதித்து சாதனை புரிந்த ஆம்ஸ்ரோங்கைப் பற்றிச் சொல்வதா...
'ஒளவையார் அங்கே ஒரு முயல்குட்டியுடன் குடியிருக்கிறார்' - என்று அம்மா பலவருடங்களுக்கு முன்பு நானும் இவனைப்போல் இருந்தபோது இப்படியொரு நிலாக்காலத்தில் எனக்கு சோறூட்டிக்கொண்டு சொன்னதைச் சொல்வவதா....?

ஆம்ஸ்ரோங் போய் வந்தது செய்தி, கதையல்ல.
ஒளவையார் பற்றிச் சொன்னால் - இவன் நம்புவானா?

'யார் ஒளவையார்' -என்று கேட்கலாம், ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் படிக்கக் கூடியவனா இவன்.

தொலைக்காட்சியில் வரும் 'ரோபோ'வும் - சிம்ஸனும் - கொஸ்பியும் - நின்டேட்டலும் தானே இவனது நாயகர்கள். மைக்கல் ஜக்ஸன் தானே- இவனது அபிமான பாடகன்.

'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவுமா... இன்றல்ல... நாளை...

நன்னெறியும் திருக்குறளும் படிக்காது விட்டாலும் பரவாயில்லை வீட்டில் ஒழுங்காகத் தமிழ் பேசினால் போதும்.

என் மௌனம் கலைத்தான்.
அப்பா.... இங்க... அவுஸ்திரேலியாவில் இருக்கிற அம்புலிமாமாதானே... அங்கே எங்கட ஸ்ரீலங்காவில் நீர்கொழும்பில இருப்பார்,"
"ஓமோம்.... உலகத்தில் ஒரு அம்புலிமாமாதான் இருக்கிறார்."

"அங்கே... ஜனனி - சுரம்யா - சரண்யா - ராஜன் - முகுந்தன் -ஆர்த்தி - அகல்யா எல்லோரும் இப்ப.... அம்புலிமாமாவைப் பார்ப்பாங்க இல்லையா அப்பா...."

என் தங்கையின் - தம்பியின் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாட முடியவில்லையே என்ற ஏக்கம் அவன் அடிமன ஆழத்திலிருந்து மேற்கிழம்புவதை நிதானித்தேன்.




"அம்புலிமாமா.... இன்றைக்கு இங்கே இருப்பார்..... இன்னுமொருநாள்.... எங்கட நாட்டுக்குப் போவார்.... பிறகு... இன்னுமொரு நாட்டுக்கு வருவார்....."
"அப்படியெண்டா...... அவர் எல்லா இடத்துக்கும் போறாரா.... அப்ப.... நாங்கள் ஏன் அவரின்ட இடத்துக்குப்போக முடியாது...."
"போகலாம்..... நாளைக்கு நாங்களும் போவோம்...."
"செத்தாப் பிறகா....." - அவன் சொன்னதைக்கேட்டு திகைத்துவிட்டேன்.
"யார் சொன்னது......"
"அம்மாதான் அண்டைக்கு சொன்னாங்க.... செத்துப்போகிறவர்கள் எல்லாம் அம்புலிமாமாவுக்கிட்டத்தான் போவாங்களாம். ஸ்ரீலங்காவில்.... ஆர்மிக்காரன்கள் சுட்டுக்கொன்றவங்கள் எல்லாம் அம்புலிமாமாவிட்டத்தான் போனாங்களாம்.... எங்கட மட்டக்களப்புத் தம்பி ஜெகன்.... அவன்ட அப்பாவும் அம்புலிமாமாவுக்கிட்டத்தான் போயிருக்கிறார். அம்மா சொன்னாங்க...."

பிள்ளையைத் தொடரவிடாமல் தூக்கிக்கொண்டு FLAT இன் படிகளில் ஏறினேன். ■


தமிழாலயம் புத்தகசாலை

பிரபல ஈழத்து, இந்திய எழுத்தாளர்களின்
சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரைத் தொகுப்புக்கள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

70, Rue Louis Blanc, 75010 Paris. Tél : 42 05 88 67

ஈழத்தின் நாட்டுக்கூத்துக் கலைஞர்.
திரு. கிரெஹரி தங்கராஜா அவர்கள்
01. 08. 1993 ல் தனது 50 வது வயது
பூர்த்தியினையும், கலைவாழ்வில்
25 வது வருட நிறைவினையும்
பாரிஸில் கொண்டாடினார்.

இவர் தன்னை மென்மேலும்
வளர்த்துக் கலைஉலகிற்குக்
இன்னும் காத்திரமானபணி ஆற்ற
வேண்டுவதோடு 'ஓசை' தனது
வாழ்த்துக்களையும் தெரிவித்துக்
கொள்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பிச்சைக்கார வானம்

எலி கடித்து
வானம் தொங்குகின்ற சங்கிலிகள்
சாடையாய் அறுந்திருப்பதாக
கதைகள் அடிபடுகின்றன.

இங்கிருந்து எப்படி எலி துள்ளியது
அந்த இடத்திற்கு!
இரும்புச் சங்கிலியைக் கடிக்கும் பற்கள் உள்ள எலிகள்
மிக முக்கியமான அந்த இடத்திற்கு
போகும் வரைக்கும்,
அதுதான் போக;
கடிக்கும் வரையாச்சும்,
எவரும் காணாமல் இருந்தது மாபெரிய தவறு.

விரைவில்
வானம்
கூரை வந்து விழுவதைப்போல
தரையில் விழும் என்பதை
அதற்குள் இருந்து தினமும் வருகின்ற
காரமுள்ள பிறபி
சூரியன் சொன்னதாய்
நேற்று ஒரு குயில் கத்திக் கத்திப் பறந்தது
ஊரெல்லாம்.

சா..... எலிகள்,
கொடூரமுள்ள எலிகள்,
நட்சத்திரங்களைத் தானியங்கள் கொறிப்பதைப்போல்
கொறித்துப் புசித்தே
நிலவு
காதல் கடிதங்கள் வைத்திருக்கும்
பெட்டிக்குள்
படுப்பதாக
காற்று சொல்லியதாக நேற்று பூவும் பேசியது.

அதுதான், முன்போல
வானத்தில் வெள்ளிகளைக்
காணவே இல்லை.
ஒன்று.... இரண்டு.... மூன்று... ஆமாம்
எல்லாமாகப் பத்து.
அதில் ஒன்று
என்னுடைய அவள் !
போனால் ஒன்பது,
இன்றைய வானத்தில் பூத்த வெள்ளிகள்;
பிச்சைக்கார வானம்.

சோலைக்கிளி.



## இசையில் இனவாதம்:

\- அசரீரி



### "நான் குழந்தைகளை விரும்புகிறேன்" துண்டு துண்டாகவும் இதமான தசையாகவும்....."

பொருளாதார அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள வெள்ளை ஐரோப்பாவில் என்றுமில்லாதவாறு இனவாதம் தலைதூக்கியுள்ள விடயத்தை பலருக்கு விளங்கப்படுத்த வேண்டியதில்லை.
அநேகமாக அனைத்து வழிகளிலும் இனவாதம் தனது கொடிய தலையைக் காட்டியும் இன்னமும் பிரமாண்டமாகக் காட்டவும் முனைந்துவருகின்றது -குறிப்பாக ஜேர்மனியில் நவநாசிகளின் தொகை அதிகரித்து வரும் அதேவேளையில், இவர்களின் சார்பிலான பல இசைக்குழுக்களும் தாண்டவமாடுகின்றன. நாசிச வாதக் கொள்கைகளைப் பரப்பும் இவர்களின் பாடல்களில் அந்நியருக்கெதிரான கோஷங்களுக்கு எப்போதுமே குறைவிருந்ததில்லை. இவ்வாறாக ஐம்பதுக்கும் மேற்பட்ட இசைக்குழுக்கள் ஜேர்மனியில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

"அன்றைய ஜேர்மனி இன்றில்லை
எல்லா இனங்களும் எல்லாத்
திசைகளிலும் நம்மை ஆக்கிரமித்துவிட்டன
ஜேர்மனியே! விழித்தெழு!
அந்நியர்களே வெளியேறுங்கள். "

"Command-Pernod" என்ற குழுவின் பாடல்களில் சிலவரிகளே இவை. ஜேர்மனியைத் துப்பரவு செய்யும் சக்தியே நாங்கள் என்று பாடுகிறது. Storkraft (இடையூறுற்றவர்கள்) என்ற குழு.
Volksorn (மக்கள் சீற்றம்) என்ற இன்னொரு குழு; வெளிநாட்டவரைப் பற்றிப் பாடும்போது, பின்வருமாறு பாடுகிறது.

"அவர்களைச் சிறையில் அடையுங்கள்.
அல்லது எங்காவது அடையுங்கள்.
ஏன்; பாலைவனத்திற்குக் கூட அனுப்பிவிடுங்கள்
அனுப்புங்கள், அவர்களை அனுப்புங்கள். "



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கணாக்கியர்கள் என்ற தமதுபாடலில், Endsieg (இறுதிவெற்றி), என்றகுழு துருக்கியர்களைப்பற்றி பின்வருமாறு பாடுகிறது.

"உள்ளிப்பூண்டை உண்டுகொண்டு
ஜேர்மனிக்கு வருகிறார்கள்.
தொடுவதனைத்தையும் அசிங்கப்படுத்துகிறார்கள்.
அவர்களை அடியுங்கள்.
அவர்களைக் கொல்லுங்கள்.
சிறையில் தள்ளுங்கள்.
முகாம்களுக்குள் அடையுங்கள்"

1991 ல் இரண்டு லெபனீயச் சிறுமிகள் அவர்களது கட்டிலிலேயே வைத்து மோசமான முறையில் எரியூட்டப்பட்டார்கள். இரண்டு ஜேர்மனியினதும் ஒரு வருடப்பூர்த்தியைக் கொண்டாடிய மூன்று மொட்டைத்தலையர்களின் கைவரிசை. நீதிமன்றத்தில் இவர்கள் வாக்குமுறையளித்தபோது, தாங்கள் குடித்திருந்ததாகவும் Rock இசை கேட்டதாகவும் கூறினார்கள். இவர்கள் கேட்ட இசையின் சிலவரிகள்:

"நானொரு விமானமோட்டி.
ஆகாயத்திலிருந்து மரணங்களை விதைக்கிறேன்"

Bohse Onkelz (கொடிய மாமாக்கள்) என்ற இசைக்குழுவின் பாடல்வரிகளே இவைகளாகும். சிலமாதங்களுக்கு முன்னர் இவர்களின் இசைத்தட்டு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கு மேல் விற்பனையாகிச் சாதனை புரிந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது. இவர்களின் இசைதட்டுகளின் விற்பனை 1992 ல் கல்வி அமைச்சினால் தடைசெய்யப்பட்டபோதும், சட்டமுரணான திருட்டு விற்பனை தொடர்கின்றது. இந்த இசைக்குழு மட்டுமின்றி மேலும் பல குழுக்கள் இவ்வாறாகத் தடைசெய்யப்பட்டபோதும் பல்லாயிரக்கணக்கான இசைத்தட்டுகள் விற்பனையாகிக் கொண்டேயிருக்கின்றன. பேர்லினிலுள்ள இசைத்தட்டு விற்பனை நிலையமொன்றின் கணிப்பீட்டின்படி, நாசி இசை ரசிகர்களின் எண்ணிக்கை 50% வீதமாக அதிகரித்துள்ளது.
1984 ல் "Dor Nette Mann" என்ற பெயரில் இக்குழு இயங்கியபோது பின்வரும் பாடல்வரிகளைப் பாடியது.
"நான் குழந்தைகளை விரும்புகிறேன்
துண்டுதுண்டாகவும், தசையாகவும்...

கிடைக்கப்பெற்றோம்

பூவிழி
332, Aliyar Road,
Kalmunai - 06,
Shri Lanka.



## பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி ...

அந்நிய தேசத்தில் வந்து குடியேறியுள்ள நாம், எமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிப் போதியளவு சிந்தித்துள்ளோம் என்று கூறமுடியாது.

எமது அடுத்த தலைமுறையினர் நிறபேதத்தையும், நிறப்பிரச்சினையையும் எவ்விதம் எதிர்கொள்வார்கள் ? கலாச்சாரம், மொழிஅறிவு, சமயம் ஆகிய விசயங்களில் அவர்களுக்கு எத்தகைய வழி நடத்துதலை நாம் வழங்கலாம் அல்லது வழங்குதல் சாத்தியம் ? புதிய தலைமுறையினருக்கும் எமக்குமிடையே வயதினால் மட்டுமின்றி, பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறைகள், போன்ற வற்றினாலும் எழப்போகும் பெரிய இடைவெளியை நாம் எப்படி சந்திக்கலாம் ?

இந்தக்கேள்விகளுக்கும், இவை போன்ற மற்றக்கேள்விகளுக்கும் நாம் விடை காண வேண்டியது முக்கியம். எமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை பற்றிய மன அங்கலாய்ப்பும், சில வேளைகளில் ஒரு வித பயமும் எம்மவரிடையே காணப்படுகின்றன. எனினும், எமது சமூகத்தில் இவ்வித விஷயங்களைப் பற்றிய சரியான அறிவோ, போதிய பிரக்ஞையோ இருப்பதாக நாம் கருத முடியாது. இவற்றை முன்னிலைப்படுத்திய முறையான ஆய்வுகளும் போதிய அளவில் நடைபெற வில்லை.

இந்தப்பிரச்சினைகள் பற்றிய அறிவையும், பிரக்ஞையையும் விரிவுபடுத்துவதை நோக்கமாகக்கொண்டு ஒரு முன்முயற்சியாக மெல்பன் கலைவட்டம் இவ்வாண்டின் இறுதியில் ஓர் கருத்தரங்கை ஒழுங்குசெய்யத்தீர்மானித்துள்ளது. அவுஸ்திரேலியாவிலுள்ள பல்வேறு சமூக நிறுவனங்களின் பங்குபற்றுதலுடனும், சர்வதேச ரீதியிலான பங்களிப்புடனும் இதனை நல்ல முறையில் செய்யலாமென நம்புகிறோம். இப்பணியில் எம்முடன் சேர்ந்து பங்குகொள்ள விரும்பும் நிறுவனங்களும், தனிப்பட்டவர்களும் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்க.

Melborne Kalai Vattam
P. O. Box 113, Clayton, Victoria 3168,
Australia.

அவுஸ்திரேலியாவிலிருந்தும், பிறநாடுகளிலிருந்தும் இக்கருத்தரங்கிற்கு ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்க விரும்புவோரையும் தயவு செய்து தம்முடன் தொடர்பு கொண்டு மேலதிகவிபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு மெல்பன் கலைவட்டம் வேண்டிக்கொள்கிறது. (நேரடியாகக் கலந்து கொள்ள முடியாதவர்களின் கட்டுரைகள் கருத்தரங்கில் வாசிக்கப்படும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரண்டாம் வீரநாய்க்கர்

## நாட் குறிப்பு
## (1778 - 1792)

ஓர்சே மா. கோபாலகிருஷ்ணன் L. es Sc. Ph, I. R. G. (France)

*நூல் கிடைக்குமிடம்:*
*திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம்*
*154, டி. டி. கே. சாலை*
*சென்னை 18.*
*விலை இந்திய ரூபா 130/=*

*இந்நூலாசிரியர் மா. கோபாலகிருஷ்ணன் அவர்கள் புதுவையில் பிறந்தவர். புதுவையில் பிரஞ்சுக் கல்வியை தொடங்கினாலும் மேல் நிலைக் கல்விக்காக 1958ம் ஆண்டு பிரான்சு வந்தார். பிரான்சில் 1963 ம் ஆண்டு பௌதீகம், பொறியியல் துறையில் பட்டம் பெற்றபின் தென் வியட்நாமில் பேராசிரியராக க்கடமை யாற்றியவர். தற்சமயம் பாரீஸில் பணிபுரிந்து வரும் இவர் சங்க கால இலக்கியமான "பட்டினப்பாலையை" பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்திருப் பதுடன் பல ஆய்வுக் கட்டுரைகளையும் வழங்கியிருக்கிறார்.*

*18 ம் நூற்றாண்டு பிற்பகுதி யூன் 1778 முதல் யூலை 1792 வரை புதுவை (பாண்டிச்சேரி) யில் பிரெஞ்சுக் கொம்பனியாரின் நீதிமன்ற காவல் துறை இரண்டாவது நயினார் என்ற பொறுப்பான பதவி வகித்த இரண்டாம் வீரா நாயக்கரின் நாட் குறிப்பே இந்நூலாகும். இந்நூல் அக்காலத்து வாழ்வு முறைகளையும், தமிழ் நாடு, இலங்கை, ஆந்திரம், கர்நாடகம், மகாராட்டி ரம், வங்காளம் ஆகியவற்றுக்கிடையே நிலவி வந்த உறவு, பகை, பிரெஞ்சு, ஆங்கிலேய அரசு கொண்டிருந்த நிலைப்பாடு, ஐதர் அலி ஆட்சி பற்றியும், திப்பு சுல்தான் ஆட்சி பற்றியும் தகவல்களை தருகின்றது. மேலும் பிரெஞ்சு புரட்சி விளக்கம், புதுவை மக்களின் எழுச்சி, தென்னிந்திய வரலாறு, தமிழ் வரலாற்றின் இணைப்பு, ஐரோப்பிய வரலாறுகளின் பாதிப்பு பற்றிய விளக்கங் களையும் கோடிட்டு காட்டுகின்றது.*

*நூலாசிரியர் ஓர்சே. மா. கோபாலகிருஷ்ணன் அவர்களை அண்மையில் நேரில் சந்தித்துக்கொண்டபோது. . . .*

*கே:தங்களின் பெயர் முன் ஓர்சே என்று ஏன் குறிப்பிட்டுள்ளீர்கள் ?*
ப : புதுவையில் பிறந்ததனால், நான் தமிழ், பிரெஞ்சு ஆகிய இரண்டு கலாச்சாரங்களிலும் ஊறி வளர்ந்திருக்கின்றேன். கோபாலகிருஷ்ணன் என்கிற பெயரில் நிறைய எழுத்தாளர்கள் புதுவையிலும், தமிழகத்திலும் இருப்பதனால் என்பெயருக்கு முன்னால், இருக்கும் இடத்தின் பெய்ரையும் சேர்த்துள்ளேன்.



*கே: பிரெஞ்சு மொழியின் தேர்ச்சியுடன் பௌதீகம், பொறியியல் துறையில் பட்டம் பெற்ற தாங்கள் தமிழ் மொழியினுடாக வரலாற்றுத் துறையில் ஆய்வு செய்ய முற்பட்டதின் காரணமென்ன ?*
ப : எனக்கு 1965ம் ஆண்டு தென் வியட்நாமில் பேராசிரியராக கடமையாற்றக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அந்த வேளை தென் வியட்நாம், தாய்லாந்து, கம்போடியா, மலேசியா போன்ற நாடுகளையும் போய்ப் பார்க்க முடிந்தது. அந்த நாடுகளின் கலாச்சாரங்களில் தென்னிந்திய கலாச்சாரம், பண்பாடுகள் ஊடுருவி இருப்பதை என்னால் உணர முடிந்தது. சோழர்கள் பல நாடுக ளைத் தமது ஆட்சிக்குட்படுத்தி வைத்திருந்தார்கள். அவற்றில் கடாரம் என்று வரலாற்றுப் பதிவுகளில் குறிக்கப்படுவது இந்த மலேசியா நாடாக இருக்க வேண்டும் என்று யூகிக்க முடிந்தது. பிரெஞ்சு மொழியில் தேர்ச்சி பெற்றிருந் தாலும் தமிழரான நான், எனக்குக் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாட்டு வரலாறு, தமிழ் பிராமிக் கல் வெட்டுக்கள் போன்றவற்றை ஆய்வு செய்து தமிழ் நல்லுலகிற்கு தொண்டு செய்ய வேண்டு மென்ற ஆர்வமும், உற்சாகமும் என்னை வரலாற்றுத் துறையில் ஈடுபடவைத் தன.

*கே : இரண்டாம் வீரநாய்க்கர் நாட்குறிப்பு, நூலாக்கப்படவேண்டும் என்ற எண்ணம் ஏன் உண்டானது ?*
ப : வரலாற்றுத்துறையில் ஆய்வு செய்ய நான் சென்றநாடுகளின் நூலகம், ஆவணக்காப்பகம் ஆகியவற்றிலுள்ள நூல்களை வாசித்தறிந்து எனது ஆய் விற்கு தேவையானவற்றை சேகரித்தும் வருகிறேன். பற்பல நூற்றாண்டுகளில் பல்வேறு பொருள் கொண்டிருந்த "நயினார்" என்னும் சொல் கி. பி. 18ம் நூற்றாண்டில் பொலிஸ் தலைமையதிகாரி என்ற பதவிக்கும் கூறப்பட்டதாக அறிய முடிந்தது. இக்கருத்தின் ஊடாக பாரீஸ் தேசிய நூலகத்தில் ஏதாவது தகவல் கிடைக்குமா என்ற தேடலின் போது, இரண்டாம் வீரநாய்க்கர் நாட்குறிப்பு மூலப்பிரதியிலுருந்து 1848-50 ம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட முதல் கையெழுத்துப் பிரதி 320 பக்கங்களைக் கொண்ட கோவையைக்காணமுடிந் தது. இது புதுவையில் 10 வருட காலம் (1840-1850) அரசுபணியிலிருந்த எதுவர் அரியேல் (EDOUARD ARIEL) என்ற பிரெஞ்சு அறிஞர் ஒருவரால் சேகரிக்கப்பட் டவை. இதனால் புதுவைக்கும், தென்னிந்திய வரலாற்றிற்கும், தமிழ் மொழியியலுக்கும் உள்ள அவசியத்தை உணர்ந்தே எழுதினேன்.

*கே : 18 ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் புதுவையில் வாழ்ந்த ஆனந்தரங் கம்பிள்ளை என்பவரது நாட்குறிப்புகளும் பல தொகுதிகள் வெளிவந்துள்ள தாக அறியமுடிகிறது. அந்நூலுக்கும் இதற்கும் ஏதாவது தொடர்புகள் உண்டா ?*
ப . ஆனந்தரங்கம்பிள்ளையின் நாட்குறிப்பு 14, 000 பக்கங்களைக் கொண்ட தாகும். அதனால் ஆங்கிலத்திலும், தமிழிலும் பல தொகுதிகள் வந்துள்ளன. இந்த நூல்களிலிருந்து வரலாற்றுத்துறையில் ஆய்வு செய்பவர்கள் தரமான நிகழ்வுகளை பெறமுடியும். ஆனால், ஆனந்தரங்கபிள்ளையின் நாட்குறிப்பு புதுச்சேரியிலும், தென்னிந்தியாவிலும் 1736 லிருந்து 1761 வரை நிகழ்ந்த சம்பவங்களைப்பற்றியது. அது ஐதர் அலியின் பராக்கிரமம் வெளிப்படுவதற்கு முந்தைய காலம். இரண்டாம் நாய்க்கர் நாட்குறிப்போ 1778 -1792 காலத்தைப் பற்றியது. இது ஐதர் அலி, திப்பு சுல்தான் காலம். புதுவையில் பிரஞ்சுப்பு ரட்சி நடந்த காலமாகும்.

கே : இந்நூல் அப்போதைய நாட்குறிப்பிலுள்ள தமிழ் வடிவத்துடனேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*வெளியிடப்பட்டிருக்கிறது. ஏன் தற்போதைய தமிழ் நடையில் வெளியிட்டிருந்தால் வாசகர்களுக்குச் சிரமமில்லாமல் இருந்திருக்குமே ?*


ப : அதற்குக் காரணம் உண்டு. ஆனந்தரங்கம்பிள்ளையின் நாட்குறிப்பின் மூலப்பிரதியிலிருந்து எடுக்கப்பட்ட முதல் கையெழுத்துப்பிரதி புதுவையில் அழிந்து போனமையினாலும், இக்கையெழுத்துப் பிரதியிலிருந்து எடுக்கப்பட்ட 2ம் கையெழுத்து பிரதிமூலமாக எழுதப்பட்ட ஆங்கில், தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு பிரதியினூடாக எற்பட்ட குறைபாடுகளினால் இந்நூல்களில் உள்ள தவறுகளையும், இடர்பாடுகளையும் கவனத்திற் கொண்டே , இரண்டாம் வீரநாய்க்கர் நாட்குறிப்பை பழைய குறிப்பிற்கு எந்தவித குறையும் ஏற்படாவண்ணம் தரமுற்பட்டுள்ளேன். இருந்தாலும் இந்நூலின் மூலப்பிரதியில் எழுத்துக்கள் தொடராகவும் , முற்று வைக்கப்படாமலுமே இருந்தது. ஆனால் நான் வாசிக்க இலகுவாக ஒவ்வொரு சொற்களுக்கும் சிறிது இடைவெளி விட்டு, குற்று வைக்கப்படவேண்டிய இடத்திற்கு வைத்தே வெளியிட்டுள்ளேன். மேலும் இதை வரலாற்றுப் புதின நூலாக பார்க்காமல், வரலாற்று, சமுதாய ஆராய்ச்சி நூலாகவும், தமிழியல் ஆராய்ச்சி நூலாகவும் கொள்ளவேண்டும். இந்தக்குறிக்கோளை மனதில் வைத்தே பதிப்பித்திருக்கின்றேன்.

*கே : ஓசை வாசகர்களுக்கு எதாவது கூறவிரும்புகிறீர்களா ?*

ப : கடந்த 50 வருடகாலமாக கலை, இலக்கியம் தொடர்பாக ஏராளமான இந்திய, இலங்கை எழுத்தாளர்கள் உருவாகியுள்ளார்கள். இது வரவேற்கத்தக்கது. ஆனால் அவர்களது செயல்பாடுகள் யாவும் கதை, சிறுகதை, புதுக்கவிதை என்ற குறுகிய வட்டத்திற்குள்ளேயே இருக்கின்றன. இது பெரிய குறைபாடாகும். உலக, மனித, சமுதாய பண்பாடு வளர்ச்சியைக்கோடிட்டு நீண்ட காலத்திற்குக் காட்டுபவை வரலாறுகளாகும். ஆகவே, இந்த வரலாற்று ஆராய்ச்சித்துறையிலும் எழுத்தாளர்கள் ஈடுபடவேண்டும் மென்பதே எனது விருப்பம்.

*சந்திப்பு : அன்பழகன்*

## பாரிஸில் நாங்கள்




அம்மா! ஏனம்மா இந்த அன்ரி
'சலாட்'டுக்கு மேல எறிஇருந்து
கிற்றார் அடிச்சுக்கொண்டிருக்கிறா ?

- பிரான்ஸில் வசிக்கும்
ஓர் எட்டுவயது தமிழ் ச்சிறுமி -



## கிளறல்கள்

### துடைப்பான்

"முத்தம்" பாரிஸில் துடைப்பானின் மனதுக்குச் சந்தோஷம் கொள்ள வைத்த விடயங்களில் ஒன்று. கேட்ட சகாக்களுக்கும் துடைப்பானின்மீது ஓர் அருவருப்பான பார்வை. காதலின் வெளிப்பாட்டு உணர்வாக மாத்திரமே "கொஞ்சுதலை" துடைப்பானால் பார்க்க முடிகின்றது.

காதல் பாலுணர்வு கொண்டது என்கின்றது விஞ்ஞானம். காதல் என்பதே பாலியல் கவர்ச்சி உந்தலின் விளைவுகளில் ஒன்றுதானே. பாலியல் உணர்வு என்பது வெறுக்கத்தக்க காமநிலைப்பட்டதல்ல. காம நிலை என்பது வேறு. செக்ஸ்யை மென்மையாக -ஆரோக்கியமானதாக உடல் -உளம் சார்ந்த வாழ்வியல் கூறாக அனுகுவதே முறையானது. இதேவேளை பாலியல் கல்வியியல் தொடர்பான நம்மவர்களின் பார்வை. இவ் வெறுப்புநிலை எங்கிருந்து எதன் அடிப்படையில் எழுகின்றது? செக்ஸ் தொடர்பான உடலியல் கூற்று விஞ்ஞான அறிதலை ஏன் நம்மவர்கள் நிராகரிப்பதாய் நடிக்கின்றார்கள்? (இதில் துடைப்பானின் சிநேகிதங்களும் அடக்கம்)

இவ்விடத்தில் பழம்பெரும் மூத்த எழுத்தாளர் எஸ். பொ. (எஸ். பொன்னுத்துரை) அவர்கள் நினைவுக்கு வருகிறார். தீண்டத்தகாத பொருளாக ஓரம்கட்டி போர்த்தி மறைக்கப்பபட்டிருந்த பாலுணர்வை இலக்கிய வடிவமாக்கி அதற்கென சமூக குறியீட்டு முக்கியத்துவத்தைக் கொடுத்து "கலாச்சாரக் காப்பாளர்களிடம்" இருந்து விடுவித்த பெருமை எஸ். பொ. வையே சாரும். இதற்கு அழியாச் சாட்சியம் "தீ". எஸ். பொ. வைப் பற்றி எழுதும்போது சமீபத்தில் "தாயகம்" இதழ்களில் எஸ். பொ. வின் எழுத்துக்களும், கருத்துக்களும துடைப்பானுக்கு நெருடுகின்றது. எஸ். பொ. என்ற படைப்பாளி தன் படைப்புக்கள் மூலம் தர நிர்ணயம் அற்ற ஒரு வாசகர் குழாம் உருவாக்கப் பெற்றவர் என்பது தெளிவு. அதில் துடைப்பானும் அங்கம். அப்பால் இடது சாரி முக்கியத்துவம் என்பதில் எஸ். பொ. குறைநிலைத் தன்மை கொண்டு நின்றவர் என்பது கண் கூடு. "கொமினிஸ்டாக முன்னொரு காலத்தில் இருக்கப்பெற்றேன்" என்பது வெறும் சுய பிரகடணப்படுத்தல். இது அவரை அன்றைய இடதுசாரித்தனம் இருக்கப் பெற்றவராக சாட்சி மொழிய துணை நிற்காது. "சாதி அபிமானமும் இணைந்தததுதான் என் எழுத்து ஊழியம்" என்பதிலும் சாதிய மகோன்மியம் மிக்க ஏனைய அவரின் வேறு "சிந்தனைத் தெறிப்புக்கள்" மூலமும் அவரின் இன்றைய -அன்றைய கால இடதுசாரி (!) அகநிலையை புரிந்து கொள்ளமுடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

எஸ்.பொ. என்ற இலக்கிய மனிதனுக்கு அன்றைய இடதுசாரிகளாக முகம் காட்டிக் கொண்ட கைலாசபதி, சிவத்தம்பி போன்றவர்களின் புறக்கணிப்புக் கள் தாராளம் இருந்ததென்பது உண்மை. இது தவிர்க்க முடியாததும் கூட. முற்போக்கு எழுத்தாளர்களோடு கொண்ட முரண்பாட்டிற்காக இவர்கள் "நற்போக்கு" என முகாம் பிரிந்து, சமூக நலன் மிக்க இடதுசாரி சிந்தனைக் கருவூலங்களுக்கு எதிராக எவ்வித பகுப்பாய்வும் அற்று அணி திரண்டு நின்ற நிலையினை நாம் ஆய்வுக்கண் கொண்டு பரிசீலிப்பின் இதன் தாற்பரியம் அழகாய் புரியும். கைலாசபதி தொடர்பாக பல கண்டனங்கள் உண்டு. இருப்பினும் அரசியல் கோட்பாட்டு ரீதியில் ஒருங்கிணைந்த எழுத்தாளர்களைக் கொண்டு ஈழத்து ஆக்க இலக்கியத் துறையில் அவர் ஆற்றிய பங்கு என்பது கணிசமானது. ஈழத்து இலக்கியம் மக்கள் கடப்பாடு உடைய யதார்த்த படைப்பியலாய் உருமாறுவதற்கு இவர்களின் முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் ஒரு காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது என்பது துடைப்பானின் வாதம். எதிரணி அமைத்த எஸ்.பொ. போன்ற நபர்களிடையே தங்கள் முகாம் தொடர்பான தத்துவார்த்த ஆழப் பண்பு அறிவு நிலையில் குழம்பிய தன்மையே காணப்பட்டது. அத்தோடு இவர்கள் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தோடு விளம்பர இலக்கிய உலகில் தங்களை நிலை நிறுத்திக் கொள்வதில் செய்து கொண்ட ஒரு பக்க "குடுமிச்சமராகவே" இதனைக் காணமுடியும். கைலாசபதியும், முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் ஜனரஞ்சகமாவதற்கு ஏரிக்கரையையும் (தினகரன்) இளங்கீரனின் மரகதத்தையும் பயன்படுத்திக் கொண்டனர். நற்போக்கினர் பிந்திவிட்டனர் அவ்வளவே. எனினும் எம்.ஏ. ரஹ்மானின் அரசு வெளியீடும், கலைச்செல்வியும், செய்தியும் ஓரளவு கைகொடுத்தது எனலாம். ஆனால் "பிந்தல்" என்பது படைப்புலகில் "தோற்றல்" எனும் சமன்பாடு கொண்டதல்ல. அதற்காக வெற்றி என்பதும் அர்த்தமல்ல. "வீ"யும், "தீ"யும், "சடங்கும்", "நனவிடை தோய்தலும்" எஸ்.பொ. எனும் பெயருக்கு பெருமை சேர்த்தது என்பதில் பெருமை கொள்ளலாம். ஆனால் துடைப்பானுக்கு இடிக்கிற விஷயம் என்னவென்றால், புகலிட வாசகர் உலகில் "கலாச்சாரம்" பற்றி எஸ்.பொ. ரசிகர் ஒருவரின் அறைகூவல் தான்.

O

கடந்த யூன் 10 விருந்து 20 வரை 40 வது சர்வதேச விமானக் கண்காட்சி LE BOURET விமானத்தளத்தில் நடந்தேறியது. 41 வது கண்காட்சி இதே தினத்தில் இதே இடத்தில் 1995இல் நடைபெறுவதாய் இப்பொழுதே முன்கூட்டியே அறிவிப்பு. இம்முறை துடைப்பானுக்கு பத்து நாட்கள் இவ்விடத்தில் துடைக்கும் வேலை கிடைத்ததில் கும்மாளம் தான். பிரான்ஸ், ஜேர்மன், கனடா, ரஷ்யா, யப்பான், அமெரிக்கா, நோர்வே, இந்தியா, பெல்ஜியம், சீன என பற்பல நாடுகள். தங்கள் "மறைப்புக்குரிய" விடயங்களை விடுத்து ஏனையவற்றை காட்சிக்கு வைத்திருந்தன. ஈராக் புகழ் 'பெற்றியாட்' உட்பட காட்டப்பட்டவையே இவ்வளவு எனில் "மறைப்புக்கள்" எவ்வளவோ? யார் அறிவார்! ஆயுத முதலாளிகளின் கலைப்படைப்புக்கள் (!). விமான எதிர்ப்பு சாதனங்கள், கண்டம் கண்டு கண்டம் பாய்ந்திடும் ஏவுகணைகள், ரேடர்கள், தொலைநோக்கிகள், புகைப்படக் கருவிகள், போர் விமானங்கள். சிறிய ஆயுத சன்னத்திலிருந்து நவீன பெரிய டாங்கிகள் வரை. மிராஜ்ஜையும், மிக்கையுமே அறிந்த எமக்கு புதுப்புது வார்த்தைகளில் விதவித வடிவங்களில். பரஸ்பரம் மனிதன் மீதான நம்பிக்கையின்மையின் அடிப்படையின் தோற்று





வாய்தானே இவைகள். எத்தனை கவர்ச்சிகர அழகிய வர்ணங்கள். உள்ளே உயிரினை அழிக்கும் கருப்பொருள். 'அழகியல்' என்பதன் பின்னால் கொடூரம் ஒழிதல் எனபதற்கு இவைகள் குறியீடுகளோ? இவற்றை உருவாக்கும் மனிதனும் இப்படித்தானோ? அவனின் தோற்றமும் அவனது வார்த்தைகளும் அவனது செயற்பாடுகளும் இவ் நாசகார பொருட்களுக்கு உதாரணம் சுட்டிடல் தகுமோ?

அவனின் மன இருக்கைகள் அறிந்திடக் களைத்து . . . சோர்ந்து. . இங்ஙனம் ஏமாந்துள்ளோம். ஏமாறுகின்றோம்.

இப்படித்தான் இலக்கிய வித்தகர்களும் வேடம் தரிப்பவர்களோ? அழகிய ஏவுகணைகள் போல்!

O

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்றில் தோழர் கே. தாமோதரன் அவர்களின் பங்களிப்புக்கள் வரலாற்று முக்கியத்துவமானது. 1986 யூலை 7இல் வெளியாகியிருந்த அவரின் பேட்டி ஒன்றின் தமிழாக்கத்தினை அண்மையில் துடைப்பான் படித்தான். பேட்டி தன்னை சுய ஆய்வுக்கு உட்படுத்தும் வண்ணம் அமைந்திருந்தது. ஒரு கால கட்டத்தில் ஸ்டாலினே தமது பேராசான்; உலக சோசலிஸத்தின் தலைவர் அவரே என்று சொல்லப்பட்ட போதனைகளை ஏற்றுக் கொண்டு செயற்பட்டவர்களில் தோழர் தாமோதரனும் ஒருவர். தனி நபர் வழிபாட்டுத் தன்மைக்கு அப்பால் கோட்பாட்டு ரீதியான விவாதங்கள், தோழமையுடன் கூடிய தர்க்கங்களை அப் பேட்டியில் வலியுறுத்தும் அவர் வெவ்வேறு கம்யூனிஸ்ட் கட்சிகளின் அணிகளும் தம் கோட்பாட்டறிவை முயன்று உயர்த்திக் கொண்டு இப் பெரும் விவாதத்தில் பயனார்ந்த முறையில் பங்கு கொள்ள வேண்டுமென்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

ஸ்டாலின் மீதான தனி நபர் வழிபாட்டுத் தன்மை எவ்வாறு உலக சோசலிஸ கட்டுமானத்திற்கு பெரும் தடையாக இருந்ததோ அதே வரலாற்றுத் தவறை இன்று ஸ்டாலின் எதிர்ப்பாளர்களும் கைக் கொள்கின்றனர். இவர்களுக்கெல்லாம் தோழர் தாமோதரனின் படிப்பினை மிகுந்த இப் பேட்டி வழிகாட்டுகின்றது. மரபுத்தனம் அற்ற விமர்சனப் பார்வை மார்க்ஸியத்தின் வளர்ச்சிக்கு தேவை. இதை அனைத்து பொதுவுடமைவாதிகளும் புரிந்து கொள்ளல் நலம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

○

ஒஸ்லோவிலிருந்து ஒரு கடிதம். துடைப்பான் நம்பிக்கை இழந்து சோர்வு கொண்ட காலங்களிளெல்லாம் துடைப்பானுக்கு நம்பிக்கையூட்டியவன். இன்றைய கடிதமும் அப்படியே. ஈழப் போராட்டம் தொடர்பாக வார்த்தை ஜாலங்கள் செய்தவர்களிடமிருந்து தனித்து ஈழம் தொடர்பான ஆக்க பூர்வ ஆய்வுகளில், விசாரணைகளில் ஈடுபட்டவன் என்பதிலும் பார்க்க கொடுமை கண்டு கொதித்தெழும் அவன் மன உணர்வுகளுக்காய் அவன் மேல் துடைப் பானுக்கு என்றும் மதிப்பும் மரியாதையும் உண்டு. ஈழத்தில் அவன் கால் படாக் கிராமங்கள் குறைவே. இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களின் எண்ணங்களை புரிந்து கொள்வதற்காக அவன் அன்றைய காலத்தில் பேருவ லையிலிருந்து கல்முனைக்கும் திக்குவல்லையிலிருந்து யாழ்ப்பாண முஸ்லிம் தெருவுக்கும் நடையாய் நடந்து பிரயோசனமுள்ள மனிதனாய் அன்றும் வாழ்ந்து இன்றும் ஒஸ்லோவில்.

வட துருவ கடற்கரைக் கிராமங்களில் மீன் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தமிழர்கள் பற்றிய அறிதலுக்கு வட துருவம் சென்றதாய் அறிந்து அவன் இங்கும் எம் மக்களின் வாழ்வுக்காய் ஏங்கும் நிலை கண்டு துடைப்பானின் மனம் பூரிக்கின்றது. கொழும்பில் அரச பாதுகாப்பில் சொகுசாய் இருந்து கொண்டு மனித உரிமைகள் தொடர்பாய் ஆய்வுகள் செய்வதாய் கூறி அடிக்கடி வெளிநாட்டு உல்லாசம் புரியும் எமது புத்திஜீவிகளிடையே இவன் வித்தியாசமானவன் தான்.

○

நினைவு ஒன்று மீள இறால் கறி துடைப்பானின் நெஞ்சின் அடியில் சிக்கிக்கொண்டது.
யாழ்ப்பாணக்கிராமத்து வீடொன்றின் ஞாபகம்.
ஒடுக்கப்பட்ட தங்களுக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இன்னும் அவர்கள் ...

அவர்கள் தங்கள் இயலாமையையும் மீறி அன்போடு தந்த அந்த அரிசிமாப் பிட்டுக்கும் இறால்கறிக்கும் ஏது பயன் ?

நாம் சுய உழைப்பிலா வாழ்ந்தோம் ?

மக்களின் சொத்தில், மக்களின் சோற்றில்தானே கைவைத்தோம்!
இந்த வருமதிகளுக்கு அர்த்தங்களை எப்போதாவது நாம் கற்பித்ததுண்டா? கவலை கொண்டதுண்டா ?
எங்கள் தவறுகளின் மீதிலிருந்து படிப்பினை பெற பின்னோக்கிப்பார்க்க நாதியற்று.. இன்றும் சுதந்திரம் பேசும் மாந்தர்களாய், காவியம் படைக்கும் மனிதர்களாய் அந்நிய தேசங்களில்..
துடைப்பானுக்கும் உடல் கூனி வெட்கிக்கிறது.

○



# நான், அவனல்ல

- வாசுதேவன்

போர்த்துக்கேய
தேசியக்கவிஞன்

## FERNANDO PERSSOA

உடன்
ஓர் சந்திப்பில்
ஏற்பட்ட சலனம் .....
கல்லறைக்கப்பால்....

சிலவேளை ஒரு காலையாகவிருந்திருக்கலாம்.,
அன்றில் ஒரு மாலையாகவிருந்திருக்கலாம்,
காலையைப் போன்றும் மாலையைப்போன்றும் தோன்றும் ஒரு மதியப்பொழு தாகவும் இருந்திருக்கலாம்,
தகரக்கூரையில் பொழியும் அர்த்தராத்திரி மழையை வீட்டிற்குள் தனியாக விழித்திருந்து கேட்பதுபோல், ஜன்னலோரமாக்க் கதிரையொன்றில் அமர்ந்தி ருந்து, வெளிப்புறத்து மரங்களின் இலைகளில் காலம் பொழிவதைக் கண்க ளால் கேட்டவாறே, வானொலியை எதேச்சையாக முடுக்கி விட்டேன்.

கவிதை நிகழ்வு.

துணிவுடன் என்னை வாசிக்கப்போகின்றவர்களுக்கு எனது தொப்பியை அகற்றி வணக்கம் செலுத்துகிறேன்.
நான் அவர்களை வணங்குகிறேன்.
அவர்களுக்கு வெய்யிலும் தேவையானபோது மழையும் பொழியட்டும்.
எனது கவிதைகளை வாசித்தவாறு அமர்ந்திருப்பதற்கு அவர்களின் இல்லத்தில் ஒரு கதிரையும் இருக்கட்டும்,
அங்கிருந்து என்னை வாசித்தவாறு என்னை ஒரு இயற்கைப்பொருளாக எண்ணட்டும்,
விளையாடிக் களைத்து ஓய்ந்து தொப்பென்று குந்தி வியர்வை துடைத்து குழந்தைகள் இளைப்பாறும் நிழலைக்கொடுக்கும் ஒரு கிழமர்மாக அவர்கள் என்னை எண்ணட்டும்.....
கவிதை தொடர்ந்தது. திறந்த ஜன்னலருகே கதிரையொன்றிலிருந்து இக்க விதையைக் கேட்டுக்கொண்டிருந்த எனது செவிகளில் தேவையை நோக்கிய எதேச்சையின் தெய்வீக அழைப்பு தெளிவாகவும் ஆணித்தரமாகவும் வீழ்ந்தது.
தவிர்க்கமுடியாத இவனின் அழைப்பு என்மீது ஏற்படுத்திய தவிப்பினால் இவனைத் தேடினேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனக்குப் பின்னர் பிறந்த இந்த எனது மூத்த சகோதரனை நீண்ட காலமாகத் தேடி, அவனின் இறப்பின்பின் சந்தித்துக்கொண்டேன். ஏதோ ஒரு நகரின் ஏதோவொரு வீதியிலுள்ள ஒரு கடைக்குள் சென்று சிகரட்டுக்களை வாங்கி அதிலொன்றைப் பற்றவைத்துப் புகையை ஊதியவாறு கனவில் நடப்பவனைப் போல் நடந்து கொண்டிருந்தான்.
தலையில் ஒரு தொப்பி, மூக்குக் கண்ணாடி, குறுமீசை, கையில் முகவரியி டப்படாத கடிதம்.
மாடிப்படிகளில் ஏறி தனது வீட்டின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்று தாழ்ப்பாள் இட்டுக்கொண்டான். பின்தொடர்ந்த நானோ கதவின் முன்னால் நின்று தயங்கினேன்.
உள்ளே சம்பாசனையொன்று கேட்டது. ஒரே குரல் மீண்டும் மீண்டும் ஒலித்தது.
கேள்வி கேட்பவனும் பதில் கூறுபவனும் அவனாகவேயிருந்தான். பல குரல்கள்.
மனத்தின் பல வடிவங்கள், கவிஞனின் பல அவதாரங்கள்.

* வாழும் உலகில் உன்னை வரையறுக்க முடியாதவனாய் ஏன் வாழ்கிறாய்?
* ஏனெனில் வாழ்க்கையென்றொன்று நிஜமாகவில்லை.
* ஏன் கவிதையெழுதுகின்றாய்?
* கவிதையெழுதுவதென்பது என்வகையில் நான் தனியாகவிருப்பது.
* உனக்கென்றோர் பெயருண்டு ?
* PESSOA என்றால் யாருமில்லையென்று பொருள்.
* உனக்கென்றோர் நாடுண்டு ?
* எனது நாடு போர்த்துக்கீச மொழி.
* எதற்காக வாழுகிறாய் ?
* நான் வாழவில்லை. வாழ்தல் என்பது பற்றிய எனது அர்த்தத்தில், அதாவது இழத்தலில், தோற்றலில், சலித்தலில், அழுதலில் நானிருக்கிறேன்.

ஆம், இதுதான் நானிருக்கும் விதம். வாழும் விதம்,
நான் இருக்கிறேன்.
இருக்கிறேன்.....
இருக்கிறேன்.... இருக்கிறேன்...
வெளியே நின்று கேட்டுக்கொண்டிருந்த எனக்கு அவனின் அழுகுரல் கேட்டது.
ஒரு குழந்தையைப்போன்று விக்கலெடுத்து அழுதான்.
கதவைத்தட்டவேண்டும் என்று மனதில் பட்டும் தயங்கியவாறு நின்றுகொண்டிருந்தேன்,
தட்டுவதா... விடுவதா...

சில கணங்களில் அவனாகவே கதவைத்திறந்தான். ஆச்சரியத்தால் நான் கண்களைத்திறந்தபோது அவன் கூறினான்.

தட்டினால்தான் கதவை திறப்பேன் என்று அடம்பிடிக்கும் தத்துவத்தை நூற்றாண்டு காலமாக உளறுபவர்களைத்தேடாது, என் கதவின் முன் தட்டத்தயங்கிய அனைவருக்கும் என் கதவைத்திறக்கிறேன்.

மேலும் எதுவுமே கூறாமல், உள்ளே சென்று ஜன்னலின் அருகேயுள்ள இருக்கையொன்றில் அமர்ந்திருந்து மீண்டும் பேசலானான்:



ஜன்னலூடாகக் கீழே தெரியும் தெருவைப்பார். நீண்ட, கரிய, சிலேட் மட்டையைப் போன்று தென்படுகின்றது. தெருவில் திரியும் மனிதர்களைப் பார். இவர்களெல்லாம் சிலேட் அல்லது மட்டையில் எழுத்துக்களைப் போன்றுள்ளார்கள். அசையும் எழுத்துக்கள். எவ்வித வடிவத்தையோ, அல்லது வசனத்தையோ அமைக்கமுடியாத நிரந்தர அசைவுக்குள் தள்ளிவிடப் பட்ட எழுத்துக்கள். இவர்களெல்லாம் எதிர்பார்ப்புகளுடன் அலைகிறார்கள். எதிர்பார்ப்புகள். அழுகிக்கொண்டிருக்கும் மாயைகள்.

இவர்கள் மத்தியில் நானும் வாழ்கிறேன். இவர்களுக்கெல்லாம் நான் அன்னியனாகவுள்ளதை இவர்கள் அறியவில்லை. ஏன், நான் கூடத்தான் அறியவில்லை. அனைவரும் என்னைத் தன்னவன் என்று எண்ணினார்கள். எவ்விதத் தோற்ற ஒருமைப்பாடுமற்ற நான் அனைவரைப்போன்றும் தோன்று கிறேன். எந்தக் குடும்பத்திலுமற்ற நான் அனைவருக்கும் சகோதரனாயிருக்கி றேன்.

நீண்ட நேரம் அமைதியாகவிருந்தான். ஏதோ சொல்ல வெண்ணி வாயெடுத் தபோது அதையுணர்ந்து கொண்ட அவன் மீண்டும் சொன்னான்.

இல்லை, சொல்லாதே. ஒவ்வொரு சொல்லும் அளவுக்கதிகமானது. எதுவும் சொல்லாதே! ஓ! சகோதரனே, உனக்கு முன்னிருந்த ஊழி அமைதியை மட்டும் விடு. கடற்கரை மணலில் அலையடிப்பதுபோல் என்னிதயத்தில் எதற்காக வேதனையலைகள்?
என்ன வேதனை! சொல்ல அறியேன்.
தனது உணர்வுகள் என்னவென்று சரியாக அறிந்தவன் யார்?
அசையாதே!
இறப்பினிடமிருந்து எதுவும் தப்புவதில்லை.
நிலவொளியையும், கடலலையையும், காலத்தையும், கதைக்க மறந்த கதை களையும் தவிர.
வந்து போன மாலைப்பொழுதுகளுடன் மீண்டும் மீண்டும் வந்து போகும் மாலைப்பொழுதுகள். தூரத்தில் நாய்கள் குரைக்கின்றன.
நன்மையிதுவென்றும், தீமையிதுவென்றும் பார்க்கமுடியாதபோது உலகத்தை ஒரு வெளியாகப் பார்க்கிறேன்.
தூரத்தில் நாய்கள் குரைக்கின்றன.

தினமும் யன்னலில் நின்று பார்க்கும்போது தினமும் ஒரு குருடன் பாடிக்கொண்டு போகிறான். அவனது வாத்தியமும் அழுகிறது. அவனும் அழுகிறான். இரக்கத்தை மட்டும் தேடும் இந்தப் பயணியும் இவனது வாத்தியமும் வேறன்று. நானும் வீதியில் பாடும் குருடன். ஆனால் எதையும் வேண்டிப்பாடுவதில்லை.

அதோபார், தொலைவில், அந்தகார இருளில், இருளின் தனிமைக்குள், ஜன்னல்
ஒன்றின் பின்னால், விளக்கொன்றின் தீபம். நகரத்தின் மிகுதி இருளில். நானறியாத, அந்தத் தீபத்தை ஏற்றியவனுக்கும் எனக்குமிடையில் கண்டிடமுடியாத, கண்டுகொள்ளமுடியாத அம்மனிதனுக்கும் எனக்கும் இடையில் பரஸ்பர தீபத்திற்கூடாக அறியும் வாய்ப்பு இருளில் நிற்கும் எனக்கு மட்டுமேயுண்டு. இக்கணத்தில் எனது இருத்தலை உறுதிப்படுத்த தொலைவில் பிரகாசிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கும் யாரோ ஒருவன் ஏற்றிய தீபம் மட்டுமே ஆதாரம். அந்தகார இருளில் எரியும் அந்தத் தீபத்தை நான் பார்த்துக்கொண்டு நிற்பதால் மட்டுமே அந்தத்தீபம் இருக்கிறது என்று தோன்றுகிறது.

இருக்கும் ஒவ்வொன்றும் இருக்கிறது. ஏனென்றால் இன்னொன்று இருக்கிறது. எதுவுமில்லை. அன்றில், எல்லாமிணைந்திருக்கின்றது.

இருவரும் ஒருவரையொருவர் காணமுடியாத இருளுக்குள் நின்றோம்.
இருளிருந்ததால் இருவருமிருந்தோம்.
குரல்மட்டும் கேட்டுக்கொண்டிருக்கிறது.
குரலிலே சலிப்புத்தோன்றியதுபோல் பட்டது. சிகரட் பற்ற வைப்பதற்காக தீக்குச்சியை உரசினான். முன்னுக்குப் பக்கவாட்டில் சரித்து வைக்கப்பட்டிருந்த படமொன்றில் மாலுமிகளின் முகங்களும் கப்பல்களும் தெரிந்தன.
தீக்குச்சி அணைந்தபின், வெறிகொண்டவன்போல் சிரித்தான்.
மாலுமிகள்.

என்னவர்கள்.... என்னவர்கள்... என்னவர்கள்...?
ஓ! என்னவர்களே!
கொலைகாரர்களே! கொள்ளைக்காரர்களே! கொடியவர்களே! போர்த்துக்கீசர்களே!
என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்.
ஒரே நேரத்தில் உங்கள் ஒவ்வொருவருடனும் நீங்கள் சென்ற அனைத்து இடங்களுக்கும்.
நீங்கள் பொருத அனைத்து ஆபத்துக்களையும் நானும் பொருதிப் பார்க்கவிரும்புகிறேன்.
கொன்று குவிக்க விரும்புகிறேன்.
வெற்றியீட்ட விரும்புகிறேன்.
நாகரீகத்தை இழக்க விரும்புகிறேன்.
பண்பையும், இரக்கவுணர்வையும் இழக்கவிரும்புகிறேன்.
எனது மனிதத்தை மாற்ற விரும்புகிறேன்.
உங்களுடன் இணைந்து இரத்தம் பருக விரும்புகிறேன்.
நான் போட்டிருக்கும் நாகரீக ஆடையை அகற்ற விரும்புகிறேன்.

உங்களில் நானுமொருவன் என்று கருதும் ஒரு குற்றவுணர்விலிருந்து என்னை விடுவிப்பதற்காக என்னையும் அழைத்துச் செல்லுங்கள்.

இல்லாவிட்டால்....
விரும்பியோ, விரும்பாமலோ உங்களில் ஒருவன் என்று இன்னமும் என்னை நான் கருதும் குற்றத்திற்காக.....
என்னைக் கழுவிலேற்றுங்கள்.
மரங்களுடன் பிணைத்துக் கட்டுங்கள்.
உங்கள் படகுகளின் பாய்மரங்களில் தொங்கவிடுங்கள் (நானும் பயணம் செய்கிறேன் என்று பாசாங்கு செய்வதற்காக) மனிதர்களைப் பொருட்களைப் போன்று அடிமைகளாக்கி விற்றுச் சித்திரவதை செய்தவர்களே!
என்னையும் விற்பனை செய்யுங்கள்.
என்னை விற்றுத் தங்கத்தையும் முத்துமணிகளையும் மாற்றீடாகப் பெறுங்கள்.
சித்திரவதை செய்யுங்கள். காயப்படுத்துங்கள். துண்டாடுங்கள்.
உங்களின் குருதிவெறிக்குள் என் ஆத்மாவைத் தோய்த்தெடுங்கள்.



ஓ! என்னவர்களே!!
நான் பயணம் செய்கிறேன். பயணம் செய்தலென்றால்; நாடுகளையிழத்தல், நகரங்களையிழத்தல், மீண்டும் மீண்டும் இன்னொருவனாக இருத்தல், நிரந்தரமாக ஆத்மாவின் வேரைப்பிடுங்குதல்.

நான் எதுவுமில்லை. என்னால் எதுவுமியலாது. நான் எதையும் தேடவுமில்லை.
மாயைகள் நிரம்பிய ஒரு கனவைக் காவுகிறேன்.
புரிந்து கொள்ளல் என்பதை நான் புரியவில்லை.
எதுவுமில்லையென்ற நான் எதுவாகவிருக்க வேண்டுமோ,
அதுவாகவிருப்பேனோ என்பதையும் அறியேன்.
மாயைப் பூக்கள் அவற்றின் தண்டுகளிலேயே மடிந்துவிட்டன.
இருளின் மடியில் உறங்கு. ஓ! என்னிதயமே!

நினைவினூடாக ஒரு இசை கேட்கிறது.
பரிதாபமான இசை.
ஏனோ தெரியவில்லை நிலைத்துவிட்ட என்பார்வை கண்ணீரால் நிறைகிறது.
உன்னை நான் எங்கேயோ கேட்டிருக்கிறேன்.
ஓ! இசையே.
உன்னில் அடையாளம் காணும் எனது இளமைப்பருவத்திலா
உன்னை நான் கேட்டேன்?
எத்தனை வெறியுடன் என் குழந்தைப்பருவத்தை யான் நேசிக்கிறேன்.
அப்போது நான் ஆனந்தமாகவிருந்தேனா? அறியேன்.
ஆனால் இப்போது என் குழந்தைப் பருவத்தில்
ஆனந்தமாகவிருக்கிறேன்.
என்னிலிருந்து தொலைவில், குழந்தையாக, என்னில், இப்போதிருக்கும்
நானாகவற்று, நானிக்கிறேன்.
கண்ணீர்த்திரைக்கூடாக இந்த இசை அனைத்தையும்
காட்டுகிறது. அந்த நாட்களையும் அனைத்தையும்.
எனக்கொரு வீடிருந்தது. எனக்கொரு தாயிருந்தாள்.
நிலவொளியிலிருந்தது. முற்றமிருந்தது.
தாயே! அனைத்தும் மாயை என்றும், பொய்யென்றும், வெறுமையென்றும்
உணர்ந்து கொண்டு வருவதைத் தடுக்க ஒரு
தெய்வமில்லையா?
நொருங்கிப்போ என்னிதயமே! நொருங்கிச் சிதறிப்போ!

இருண்ட யன்னற் கரையில், இருளைவெறித்துப்பார்த்துக் கொண்டு
இருளுக்குள் நின்ற இவனை இருளுக்கூடாக தெளிவாகப்
பார்த்துக் கொண்டிருந்தேன்.
அலறல்கள் சங்கமித்தன.

நீண்ட நேர அமைதி.
அனைத்துச் சத்தங்களுக்கும் முன்னர் இருந்த அதே அமைதி.

திடீரெனக் கதவுகளில் யானைப்பலத்துடனான தட்டல்கள். திறக்காவிட்டால் கதவுகளை உடைத்துவிடுவேன் என்ற பயமுறுத்தலுடனான சத்தங்கள்.

டொக்... டொக்... டொக்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதவு திறபட்டுக்கொண்டது.
வந்தவன் மனிதன். தசையையும், எலும்பையும், பசியையும் தாகத்தையும் பாடும் அமெரிக்கன், மனிதனை மட்டும் பாடும் மனிதன்.
வோல்ற் விற்மன்.

இவனின் கண்களிலே சூரியன் பிரகாசித்தது.
சற்று முன்னர் இருந்த இவன் இவனாகவற்று இன்னொருவனானான்.
அவன் பிரசன்னமாகிய அடுத்த கணமே அவனின் உள்ளத்தை பெற்றுவிட்டவன் போன்று இவன் ஆனந்தமாகினான்.

"பேரன்மாருடனும், மகன்களுடனும், பரிவாரமாகப் படையெடுத்து அகன்ற தோளை நிமிர்த்தியவாறு வேலைக்குப் புறப்படும் பாட்டனைப் பாடும் பாவலனே, என் கதவுகளைத் திறந்துவிடு. வோல்ற் விற்மன் என்ற சமிக்கையைக் கூறியவுடன் என்னை இங்கு விட்டுவிட்டு என் வீட்டை மட்டும் மேலால் தூக்கி அகற்றிவிடு. நீ இங்கு வந்தவுடன் நான் தெய்வமாகிவிட்டேன். என்னைத் தவிர்ந்த அனைத்துத் தெய்வங்களையும் என் பார்வையிலிருந்து தூக்கியெறி. அரசியல் வாதிகளையும், இலக்கிய வாதிகளையும் என் கண்ணில் படாதவாறு அடித்துத் துரத்து.
நான் பறக்கவிரும்புகிறேன். உயரத்திலிருந்து பொத்தென்று விழ விரும்புகிறேன். கிரனைட்டைப்போன்று எறியப்பட விரும்புகிறேன்.
அனைத்தை நோக்கியும் போக விரும்புகிறேன். என்னைத் தூக்கிக்கொண்டு என் முடிவுக்குப் போகவிரும்புகிறேன்."

உணர்ச்சிகள் என்பவை தற்காலிக மரணங்கள்.
அவற்றைக் குப்பைத் தொட்டியில் போட விரும்புகிறேன்.
ஓ ! வோல்ற் விற்மன் !
மனிதனைப் பாடும் மனிதனே!
அனைத்துக்குமான கதவு நீ.
அனைத்தின்மீதுமான பாலம் நீ.
அனைத்துக்கும் போகும் பாதை நீ.

உன்னைத் தாண்டும் போதுதான் என்னைக் காண்கிறேன்.
ஓ சோதரனே!
அனைத்துச் சாத்தியங்களையும் அடைத்துவைத்துள்ள வட்டமே!
இவன் வெறிகொண்டவன் போல் காணப்பட்டான். தன்னிடம் இல்லாத, தனக்கு ஒவ்வாத இருப்பினும் உகந்த ஒன்றை அவனிடம் கண்டுவிட்டவன் போன்றும், தன்னுடைய தொலைந்த பாதியைக் கண்டுவிட்டவன் போன்றும் கம்பீரபாணியில் கனன்றான்.

நீடிக்கவில்லை.
வந்தவன் போய்விட்டான்.
மீண்டும் இவன் பழையவனாகினான். புயல்போல் நின்றவன் மீண்டும் பூனைபோல் ஆகினான். புரியமுடியாத புதிரொன்றைக் காண்பதுபோல் தன்னைத்தானே கண்டுகொண்டு நின்றான்.

"ஒரு தடவை கூறியபின் எனது சிந்தனையென்பது எனதல்ல. ஒரு காற்று அடித்துச் செல்லும் வரையும் எனது நினைவில் மிதக்கும் காய்ந்து உலர்ந்த மலர்.



எனது அகத்துக்கும் எனக்கும் இடையிலான வாதமும் நெருக்கடியும்
எனக்கும் எனது ஜீவனுக்கும் இடையிலான போராட்டத்தின் வெளிப்பாடு.
எவ்வாறு எப்போது எனக்கும் எனது ஜீவனுக்கும் இடையில் இசைவு தோன்றும்?
என்னை என்னிலிருந்து இடுங்கியெடுத்து என்னுள்ளே அமைதியை ஊற்றும் எனக்கும் எனக்குமிடையான இடைவெளியெங்கே?

சுயத்தின் மீதான பரிபூரணமான பிரஞ்ஞை என்பது எத்தனை கொடுமையானது.
சலனங்களின் பிரசன்னத்தில் நீந்துகின்ற வாழ்க்கையைத் தவிர்த்த என் இளமை எங்கே?
என் நகரம் எங்கே
என் வீடெங்கே?
என் தாயெங்கே?
மீண்டும் அவன் கண்களிலிருந்து கண்ணீர் உருண்டது.

இவன் எதைத் தேடுகிறான். ஏன் தேடுகிறான். எதற்காகத் தேடுகிறான் என்பதை உணரும் சக்தி என்னிடமிருக்கவில்லை.
தான் உணர்வதைச் சரியாகப் புரிந்தவன் எவனென்று இவன் கேட்பதுபோல் என்னை நானே கேட்டுக்கொண்டேன்.
ஏதோ ஒரு நகரின் ஏதோவொரு வீதியின் ஏதோவொரு வீட்டின் யன்னலிடை அவன் குழந்தையாகி அழுதுகொண்டிருந்தான்.
என்ன நகரம்?
லில்பொண்? பாரிஸ் ? யாழ்ப்பாணம் ?
ஏதோ ஒரு நகரிலிருந்து அவன் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.
(முற்றும்)

o

## நானான உருண்டை

என்னை உருட்டித் திரட்டியது
சாணமுருட்டும் கருவண்டு.
"நாற்றம்" என்று முகத்தைச் சுழித்தது.
இடுப்புக்குள் இருந்த
கைக்குட்டையால்
முகத்தைத் துடைத்தது.
திரும்பவும் உருட்டி குப்பையில் தள்ளிவிட்டு
தள்ளி நின்றது

குப்பையில் கிடந்த ஒரு தவளைப் பிணம்
வண்டு
உருட்டித் திரட்டி
தள்ளிய "நானான" உருண்டையைப் பார்த்து,
சற்று விலகிப்போய்
குப்பையின் ஓரத்தில்
குந்தி இருந்து எடுத்தது வாந்தி

தலையில் கைவைத்து.
வெறுப்போடு
காளானின் அடியிலே இளைப்பாறிக் கொண்டிருந்த
வண்டு அழுதது.
நான் இந்த நாற்ற மனிதனை
உருட்டி வந்ததே தவறு.
பல விதத்தில் கொடிய நெடி
இவர்களுக்குண்டு.
எப்போதும் நான்
சாணமே உருட்டுவேன்.
என்னசெய்ய;
ஓர் ஆசையில் உருட்டினேன்.
தாங்கமுடியாத நாற்றம்!
சொல்லிக்கொண்டே வண்டு திரும்பவும்
கைக்குட்டையை எடுத்துத் துடைத்தது முகத்தை,
மூக்கையும் சீறி.

- சோலைக்கிளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காகிதத்தில் கையெழுத்திட்ட கை


வீழ்ந்த நகரத்திற்காக காகிதத்தில் கையெழுத்திட்டது கை;
வல்லமைமிக்க ஐந்துவிரல்கள் மூச்சை சற்றே இறுக்கின,
இறப்பில் இரண்டாகிய உலகம் நாட்டைப் பிரித்தது;
ஐந்து விரல்களால் அரசன் உருவானது மரணத்திற்காகத்தான்.

சாய்ந்த புஜத்தில் தொங்கியது எல்லாம்வல்ல கை.
விரல்கள் இணைந்து பற்றியிருந்தது எழுதுகோலை;
குயிலிறகுப் பேனாவொன்று கொலைக்கு முடிவெழுதியது
பேச்சுக்கும் முடிவு கட்டியது.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட கை ஜீரத்தை ஈன்றது.
பஞ்சம் வளர்ந்தது. அழிவுகளும் வந்தன;
சத்திமிக்கது கை ஆட்சி பரவியது
கிறுக்கப்பட்ட பெயரால் மனிதன்.

அடங்காத ஐந்தரசர்களும் சாவை எண்ணினர்
ஓடுமூடிய காயங்களோ, அடிகளோ மறையாமல்;
சொர்க்கத்தை ஆளுவதுபோல இரக்கத்தை ஆள்கிறது கை;
கைகளுக்குத் தெரியாது கண்ணீர் உகுக்க.

ஆங்கிலம்: டைலன் தாமஸ்
தமிழில் : அ. ஜ. கான்
நன்றி: Beyond Darkness



# நிகழ்வு

அவனுக்குத் தெரியும் என்பெயர்
என் ஊரும், என் எல்லாமும்கூட. .
சிலபோதுகளில் சிரித்தும்
நேசமுடன் கதைத்துமிருக்கிறான்.
இன்று. .
சைக்கிளை விட்டும் இறக்கி,
அடையாள அட்டை பார்த்து,
முறைத்து, பரிசோதித்து. .
. . . . . . . . . வேறொன்றுமில்லை
'வேறு' உடை அணிந்திருக்கிறான்;
அவனுக்குப் பக்கத்திலும் 'வேறவர்'கள்!

-எம். கே. எம். ஷகீப்-



இந்தியப்படங்களை தடைசெய்யவேண்டும் !
அல்லது
இலங்கைப்படங்களும் இந்தியாவில் காண்பிக்க
வகைசெய்ய வேண்டும் !
- ஏ. ரகுநாதன்

கலைஞர். ஏ.ரகுநாதனுடன்


# நேர்காணல்

?. கலை ஆர்வம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

! நான் பிறந்தது மலேசியாவில். சொந்த ஊர் யாழ் நவாலி. மலேசியாவில் என் தந்தை இறந்து போக நான் தாயாரோடு இலங்கைக்கு வந்துவிட்டேன். ஆரம்பத்தில் கலை ஆர்வம் அப்படி என்று எதுவும் எனக்கு கிடையாது. கலைத்துறைக்குள் நான் புகுந்தது ஒரு விபத்து என்றே கருதுகின்றேன். 1947 ம் ஆண்டு. எனக்கு அப்போது வயசு 12. எங்கள் பாடசாலையில் அடிக்கடி நாடகங்கள் போடுவார்கள். நான் படித்தது மானிப்பாய் இந்துக் கல்லூரி. ஆண்களும் பெண்களும் கலந்து படிக்கும் பாடசாலையாதலால் நாடகங்களில் வில்லன் பாத்திரத்துக்கு ஆள்சேர்ப்பது சரியான கஷ்டம். எனது தோற்றம் காரணமாகவோ என்னவோ எனது நண்பன் கனகரெத்தினம் கலைஞர் கருணாநிதியின் "தூக்குமேடை" நாடகத்தில் வில்லன் பாத்திரம் ஏற்று நடிக்கக்கேட்டான். மறுக்கமுடியவில்லை, ஏனெனில் அவர் அடிக்கடி எனக்கு புத்தகங்கள் இரவல் கொடுப்பவர். எதிர்பாராதவிதமாக அந்த மேடையேற்றமும் அதில் எனக்குக்கிடைத்த பாராட்டுக்களுமே என்னை கலை வாழ்வுக்குத் தள்ளின. இதைவிடவும் எனது அம்மா அந்தக் காலத்திலேயே வயலின் வாசிக்கத் தெரிந்தவர். என் மூத்த சகோதரி இந்தியாவின் நடன வித்தகர் கோபிநாத் அவர்களிடம் பரதநாட்டியம் டிப்ளோமா வாங்கியவர். இவர்களது கலை ஈடுபாடும் என்னை மேலும் வளர்த்துக்கொள்ள உந்துதலாக இருந்தது.

?. இலங்கையில் படத்தயாரிப்பு வெற்றியளிக்க மாட்டாது என்று தெரிந்தும் இத்துறையை நீங்கள் தெரிவு செய்யக் காரணம் என்ன?

! இதைத்தான் ஆர்வம் என்று சொல்வர். பலர் சிங்களப்படம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்து காசைத் தேடிக்கொண்டு தமிழ் படம் செய் என்ற பொழுதும். இந்தியப்படங்கள் பூார்த்து ஏற்பட்ட "அலுப்பு" என்று கூடச் சொல்லலாம். நான், ஏன் இலங்கையில் படம் தயாரிக்கக் கூடாதென எண்ணினேன். ஏற்கனவே ஏனையோர் பட்ட அனுபவம் தெரிந்தும், கையைச் சுட்டேன். ஈழத்தமிழனும் தன் கலைத்திறனை வெளிக்கொணரவேண்டுமென நினைத்தேன். இது கலைத்துறையில் இருப்பவர்களுக்குரிய 'குறை'யாகவும் இருக்கலாம்.

? புதியகாற்று, நான் உங்கள் தோழன், கோமாளிகள் போன்ற வெற்றிப்படங்கள் இலங்கையில் உருவானபின்பு கூடத் தயாரிப்பில் தொய்வேற்பட்டு நின்று போனதேன்?

! இவை சுமாராக ஓடியிருக்கிக்கின்னவே தவிர பொருளாதார ரீதியில் வெற்றி காணவில்லை. 'கோமாளிகள்' தான் போட்ட முதலைத் தன்னும் தேடித்தந்தது. ஏனையவை தயாரிப்பாளர் வசதியுடையவரானபடியால் சமாளித்தார். அடுத்து மிகக் குறைந்த வீதத்தினர் மத்தியிலேயே வரவேற்பு இருந்தது. இந்தியப் படங்களுக்கு இருந்த வரவேற்பின் சில பகுதியாவது இருந்திருந்தாலும் நாம் வெற்றி கண்டிருப்போம். அப்படியான, அனுசரணை நமது நாட்டில், நமக்கு, நம் மக்களால் கிடைக்காததே நமக்கு வந்த சோதனை, தொய்வு.

? இலங்கைப் படத் தயாரிப்பில் ஈடுபாடு உடையவரென்ற வகையில் இலங்கைத் தமிழ் பட ரசிகர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! இந்தியப் பாமர ரசிகர்களுக்கும், எங்கள் ரசிகர்களில் 75% மானவர்களுக்குமிடையில் எந்த வித்தியாசமுமில்லை. 10% தரமானவர்கள் படமே பார்ப்பதில்லை. இந்த மிகுதியானவர்கள் தான் சற்று அறிவுடன் படங்களைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்.

? உங்கள் படத்துறை அனுபவத்தைக்கொண்டு, படத்தின் வெற்றி எப்படி அமைகிறது என்று கூறமுடியுமா?

! நல்ல கதை. இதுதான் பட வெற்றியின் உயிர்நாடி.... அத்துடன் நடிகர் தேர்வு, இசை, படப்பிடிப்பு, இயக்கம் என்பவையும் அதன் வாய்ப்பைக் கூட்டுகின்றன. எந்நிலையிலும் நல்ல கதையில்லாமல் வேறு எந்த அம்சங்கள் இருந்தும் வெற்றி காண்பது அரிது. எனது "நிர்மலா" படம்கூட இந்த அளவு "ஓடி"யதன் காரணம் அதில் சற்று கதை இருந்ததே! அக் கதையை அற்புதமானது என்று நான் கூறவில்லை. ஓரளவாவது இருந்ததே.......

? இலங்கைப்படங்களில் சிலவற்றையாவது பார்த்தவன் என்ற வகையில் இவற்றின் கதைகள் கூட இந்தியப்படங்களின் "கொப்பி" போல் தான் இருக்கிறது. ஆனால் இந்திய இலங்கைச் சஞ்சிகையில் வரும் கதைகள், அபாரமான வகையாக இருந்தபொழுதும் சில தவிர ஏனையவை படமாக்கப்படவில்லையே. இதற்கு தொழில் நுட்பரீதியில் ஏதாவது தடை உண்டா?

! நாவல்களை வாசிக்கும் பொழுது வாசகன், அவற்றை மனத்திரையில் உருக்கொடுத்து விடுகிறான். அதற்கு ஒப்பான நடிகர் தேர்வு வாய்க்கவில்லை என்றால் அந்தக் கதை சோடையாகிவிடும். வியாபாரம் என்ற வகையில் வரும் இக்கலை..... அந்தந்தக் காலத்தில் உள்ள பிரபல நடிகர்களை வைத்தே படமெடுக்க நினைக்கிறது. அவர்கள் சகல கதைக்கும் பொருத்தமானவர்களாக அமைவதில்லை. அதனால் தோல்வியைத் தழுவவேண்டியுள்ளது. உதாரணம் பாவை விளக்கு. 16வயது 'உலகமறியாத வெகுளிக் கதாநாயகனுக்கு சிவாஜியைப் போட்டதே அந்தப்பட தோல்விக்குக் காரணம். ஆனால் நல்ல நாவல். 'பெண்மனம்'....'இருவர் உள்ளமாக' சிவாஜி, சரோஜாதேவியால் உயிர் பெற்றது. கதாபாத்திரப் பொருத்தம் அப்படி அமைந்துவிட்டது. மலைக்கள்வன் - எம். ஜீ. ஆர். வெற்றியளித்தது. பார்த்திபன் கனவு கல்கியின் பிரபல நாவல், ஜெமினி நடித்துத் தோல்வி. காரணம் "கல்கியின் எழுத்தில் விக்கிரமன்; புஜபலபராக்கிரமவீரன். ஆனால் ஜெமினி பெண்மைத்தன்மையுள்ள முக அமைப்பு உடையவர். எடுபடவில்லை, எனவே நாவல்களைப் படமாகத் தயாரிக்கையில் கதாபாத்திரங்களுக்கு தகுந்த நடிகர்தேர்வு செய்யாவிடில் தோல்வியே! ஆனால் "கதாநாயகவழிபாடு" உடைய எமது சினிமாத்துறையில் இது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பதே என் கேள்வி. "யார் நடிக்கிறார் என்பதைவிட எப்படி நடிக்கிறார்" என்பது எப்பொழுது போற்றப்படுமோ அப்போது உங்கள் கேள்விக்கே வாய்ப்பில்லை.

? தியாகராஜ பாகவதர் காலத்தில் இருந்து இன்றுவரை இந்தியப்படங்களின் வெற்றிக்குப் பாடல்கள் மிகப் பெரிய பங்கை வகுத்துள்ளதென்பது தெரிந்தும் ஏன் இலங்கைப் படங்கள் அந்த விடயத்தில் அக்கறையே காட்டவில்லை?

! திறமையில்லாமல் என்று தவறாகக் கருதவேண்டாம். நம் நாட்டில் எவருமே திரைப்படத்துறையை முழுநேரத் தொழிலாகக்கொள்ளவில்லை. அவர்களுக்குக் கிடைக்கும் அற்பசொற்ப நேரத்தில் ஆர்வ மிகுதியால், இத்துறைக்கு வருகிறார்கள். தங்களால் இயன்ற அளவு செய்கிறார்கள்.... தொடர்ந்து இதைத் தொழிலாகக் கொள்ளும் பொழுது அனுபவம் கை கொடுத்து வெற்றியும் அடைவார்கள் அதில் எனக்கு நம்பிக்கை உண்டு. எனவே இலங்கையில் தமிழ்த்திரைப்படத்துறை வளரவேண்டுமானால், இந்தியப்படங்களை உடனே தடை செய்ய வேண்டும்... அல்லது இலங்கைப்படங்கள் இந்தியாவிலும் காண்பிக்க வகை செய்ய வேண்டும். ஒரு இலங்கைத் தயாரிப்பு இந்தியாவில் 2 நாள் காண்பிக்கப்பட்டாலும்.... அதன் தயாரிப்புச்செலவும் லாபமும் கூடக் கண்டுவிடலாம். அதற்கு இந்த நாள்வரை வழி கிடைக்கவில்லையே!

? இந்தியப் படங்களைத் தடை செய்து, இலங்கைப் படத்தை வளர்க்கவேண்டுமென்பது நல்ல படங்கள் உருவாக வழிவகுக்கு மா? போட்டியிருப்பதுதானே நல்லது.. திறமையை வெளிக்கொணர வாய்ப்பு ஏற்படுத்தும்.

! போட்டிவேண்டும்.... அதே நேரத்தில் அப்போட்டியை நடத்தும் தளம் எங்கும் இருக்கவேண்டும். இந்தியாவில் எங்கள் படம் திரையிடமுடியாது தடைசெய்து, இதைப் போட்டி என்று எப்படிக்கூறமுடியும்..... இங்கிலாந்துத் தயாரிப்பு அமெரிக்காவிலும், அமெரிக்கத் தயாரிப்பு இங்கிலாந்திற்கும் செல்கிறது. ஆனால் நமது அப்படியல்ல, கூட்டு தயாரிப்பு என்பார்கள்.... அங்கும் அவர்களது ஆதிக்கமே கூட இருக்கும். இதைப் போட்டி என்று எப்படிக் கூறமுடியும். சிவாஜி கூட ஒருநாள் அனுபவமின்றி சினிமாவுக்கு வந்தவரே, ஏன் எங்கள் கலைஞர்களுக்கும் அந்தச் சந்தர்ப்பத்தை ஒருதடவை கொடுக்கக்கூடாது. இது ஒரு தார்மீகக்கடமை என்பதையே ஏன் புரிய மறுக்கிறார்கள்... அதனால்தான் இந்தியப்படத்தை தடை செய்யெனக் கேட்கிறோம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

? இன்று... பரவலாக திரைத்துறையின் சகல பிரிவையும் ஒருவரே செய்யும் நிலை அதாவது கதை, திரைக்கதை, இயக்கம், இசை, ஒலிப்பதிவு, நடிப்பு என இது வரவேற்கத்தக்கதா?

*சுத்த முட்டாள்தனம்... ஒருசிலர் வெற்றிபெற்றார்கள் உண்மை.... அதை எல்லோருமே பின்பற்ற முற்படுவது, புலியைப் பார்த்து பூனை சூடு போட்டதற்கு ஒப்பானது. திரைத்துறை பலரின் சிந்தனையில் உருவாகும் ஒரு கூட்டு முயற்சி. சும்மா "பேர் போட ஆசைப்பட்டவர்கள் செய்யும் கூத்து இது.... நானும் செய்கிறேன் என்று ஏனோ தானோ என செய்வதிலும், செய்யாமல் இருப்பது மேல் என்பேன்.*

? நீங்கள் இந்தச் சினிமாத்துறை மூலம், நம் சமுதாயத்திற்கு ஏதாவது சொல்ல நினைக்கிறீர்களா? இல்லை இதை ஒரு தொழில் என்று கருதுகிறீர்களா?

*! இந்தச் சமுதாயம், காந்தி, புத்தன், ஜேசு சொல்லியே திருந்தவில்லை..... இந்த ரகுநாதன் சொல்லித் திருந்துமென்று நான் நினைக்கவில்லை. எனக்கு அந்த அளவுக்கு ஆற்றலும் இல்லை. இது என் தொழில். இதன் மூலம் இலங்கைத் தமிழனாலும் முடியும், அவனிடமும் ஆற்றல் உண்டு என்பதை உலகறியச் செய்ய வேண்டுமென்பதே என் அவா. இதற்கு ஏனைய தமிழரின் ஒத்தாசையும் இருந்தால், இலகுவில், விரைவில் இதைச் சாதித்துக் காட்டலாம். இன்று விரும்பியோ விரும்பாமலோ தொழில் நுட்ப வளர்ச்சி பெற்ற நாடுகள் பல வற்றில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இதை நாம் பயன்படுத்தத் தவறக்கூடாது.*

? நீங்கள் நாடக, திரைத்துறையில் நுழையக் காரணமானவர்கள் யார்?

*! சந்தர்ப்பவசத்தால் பாடசாலை நாடகம் ஒன்றில் நடிக்கத் தொடங்கி பின்பு கலையரசர் சொர்ணலிங்கம் தொடர்பினால் நாடகம் பற்றி அறிந்துகொண்டேன். "கடமையின் எல்லை" வேதநாயகம் புகையிரதத்தில் கண்டு விசாரித்து நடிக்கும்படி கேட்ட பொழுது, செய்த சில விடயங்களைப் பார்த்து, ஏன் நான் ஒரு படம் செய்யக் கூடாதென எண்ணி நிர்மலாவைத் தயாரித்தேன். அதையும் நிர்ப்பந்தத்தால் 18 நாளில் முடித்தேன். நான் விட்ட தவறுகூட அதுதான்.... படத்தின் தயாரிப்பாளர் கையில் போதிய பணமின்றித் தொடங்கியது பெரிய தவறு என்று இப்பொழுது உணருகிறேன்.*

? இங்கும் நாடகம், திரைப்படம் என பலர் ஆர்வம் காட்டுகிறார்கள். அனுபவம் உள்ள கலைஞர் என்ற வகையில் உங்கள் ஒத்தாசைகளும் ஏதாவது.....?

*! குத்து விளக்கேற்றல், தலைமை தாங்கல் தவிர எதையுமே நானறியேன், என்னிடம் ஆலோசனை கேட்பதை கௌரவக் குறைவாகக் கருதுகிறார்களோ தெரியவில்லை. எவருமே அணுகவில்லை. அந்த மனநிலை நம்மிடம் குறைவு...... நான் ஆலோசனை வழங்க என்றுமே பின் நின்றதில்லை.*

? தொழில் நுட்பத் துறையில் கேள்வி ஒன்று இரட்டைவேடம் எப்படி அமைகிறது?

*! இதை "Mask Shot" என்பர். படச்சுருளின் பாதி மறைக்கப்பட்டு ஏதாவது ஒரு நிலையான பொருளினை அடையாளமாக வைத்து, இலக்கமிட்டு Timing உடன் ஒரு பகுதி நடிக்கப்பட்டு, ஒளிப்பதிவு செய்து, பின்பு மறுபாதி இப்படியே செய்யப்படுவது. இதில் நடிப்பதற்கு நல்ல தேர்ச்சியும் அனுபவமும் வேண்டும். காரணம் Timing முக்கியமான அம்சம்.... கிட்டத்தட்ட 5 படமாவது நடித்தபின்புதான் இரட்டை வேடம் பொருத்தமாக நடிக்க முடியும்...*

? மேற்கத்தியப் படங்களின் இசையென்பது "டைட்டில்", பின்பு இயற்கைக் காட்சிகள், என்று சில இடங்களிலேயே கேட்கும் ஆனால் எமது படங்களில் தொடங்கி முடியும்வரை ஏதாவது இரைச்சல் கேட்கிறதே!

*! எமது படங்களுக்கு இசை ஒரு முக்கியமான அம்சமாக ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் அதை இன்று எப்படிக் கையாள்வதெனத் தெரியாமல் "படுக்கையறைக் காட்சிக்கும்" இசை என்று கெடுத்து விட்டார்கள். அடுத்து, ஒரு காலம் டைரக்டர் தான் படத்தை இயக்குவார். இப்போ, அப்பட கதாநாயகன் அவனது "Star Value"வைப் பொறுத்தமட்டில், இசையமைப்பாளர் செல்வாக்கைப் பொறுத்தமட்டில், நடிகை அவள் நிலையைப் பொறுத்தமட்டில் என ஒரு கேலியான நிலையில் படம் வளர்கிறது. அதனால் இயற்கைக்கு மாறானவையாக இந்தத் துறையும் வளர்ந்து கொண்டு செல்கிறது.*

? சிறந்த இலக்கியத் தரமானவர்கள் இருந்தும் இந்த திரைத்துறையின் இன்றைய ரசமற்ற போக்கின் காரணம் என்ன?

*! ரஜனியைத் திரையில் முத்தமிட்டு, குஷ்புவுக்கு சங்கிலி போடுமளவுக்கு ரசிகர்களின் தரம் அடிபட்டுப் போய்விட்டது உண்மைதான். சகலதிலும் போலியும் புழுகும், கூழுக்குப் பாடும் குணமுமே நிறைந்து ஆற்றல் மிக்கோர் மூலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள். அத்துடன் இத்துறையில் நுழைய பணம் இருந்தால் போதும். அறிவோ, அனுபவமோ தேவையில்லை என்றாகிவிடடது. டாக்டராவதற்குப் படிக்க வேண்டும். வக்கீலாவதற்குப் படிக்கவேண்டும். ஆனால் இங்கே பணம் வேண்டும். இருந்தால் சரி.. இந்நிலையில் இலக்கியத்தரம் எப்படி ஏற்படும்.*

> **விரும்பியோ விரும்பாமலோ தொழில் நுட்ப வளர்ச்சி அடைந்த நாடுகள் பலவற்றில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதை நாம் பயன்படுத்தத் தவறக்கூடாது.**

? இன்றைய பாடல்கள் மனதில் நிற்காததன் காரணம் என்ன?

*! அன்று பட்டுக்கோட்டை, வாலி, கண்ணதாசன் என்ற மேதைகள் கையாண்ட துறை பின்பு.... வைரமுத்து என்ற புலவரிடம் வந்தது.... இளையராஜாவுக்கு தனிப்பட்ட கோபம் வைரமுத்து ஒதுக்கப்பட்டார், என்று இந்தத்துறை தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கும் தனி மனித வழிபாட்டுக்கும் வழி கோலிவிட்டதோ... அன்றே இது தன் அழிவுப் பாதையை தேடிவிட்டது. இவை முற்றாக நீங்கினால்.... மனதில் பிடிக்கும் விடயங்கள் மீண்டும் உருவாகும்..... இதைச் சகலதுறையினரும் உணர வேண்டும்.*

? உங்கள் எதிர்காலம் பற்றி.....

*! இருக்கும் வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்தி சர்வதேசரீதியில் ஓர் படம் தயாரிப்பதே என் திட்டம். அதற்காக முயன்று கொண்டும் இருக்கிறேன். இலங்கைத் தமிழனாலும் முடியும் என்று காட்டவேண்டுமென்பதே என் ஆசை.*

இந்த அறுபது வயதிலும் முயற்சியுடனும் நம்பிக்கையுடனும் கலையில் தீராக்காதலுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் திரு. ரகுநாதன் அவர்களின் முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

*சந்திப்பு: யோகநடராசா*






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூல் அறிமுகம்:

# புத்தளம் வரலாறும் மரபுகளும்

ஆசிரியர் : ஏ. என். எம். ஷாஜகான்



- சுபனேஷ்

இலங்கையில் ஆதிதிராவிடர், தமிழர் வரலாறுகள் பற்றி இன்னும் முழுமையான ஆய்வுகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்பது பெரும் குறையாகும். ஈழத்தமிழர்களின் வரலாறுகள் சங்க கால இலக்கியங்களிலும், தமிழ், சிங்கள, ஆங்கில நூல்கள் மூலமும் சொற்பமான விபரங்களே கிடைக்கின்றன. மகாவம்சம் மூலம் எல்லாளனைப்பற்றியும், அகநானூறு, புறநானூறுமூலம் ஈழத்து பூந்தேவனார் பற்றியும், ஏனைய நூல்கள் மூலம் 13ம் நூற்றாண்டு தொடக்கம் 17ம் நூற்றாண்டு வரை வடபகுதிகளை ஆண்ட ஆரிய சக்கரவர்த்திகளின் தகவல்களே மட்டுமே நாம் அறியக் கூடியதாக உள்ளது. தற்போதைய நிலையில் சிங்கள பௌத்த வரட்டு வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் தமிழரும், தமிழும் இந்த நாட்டில் போருக்காக வந்ததாக மலட்டுச் சிந்தனையில் உருப்பெற்று எழுதி வருவது வேதனைக்குரியது.

இந்நிலையில் புத்தளம் நகரை மையமாகக்கொண்ட வடமேற்கு பிரதேசத்தின் வரலாற்று தகவல்களை "புத்தளம் வரலாறும் மரபுகளும்" என்ற தலைப்பில் எழுதிய ஆசிரியர் ஏ. என். எம். ஷாஜகான் அவர்களும், தமிழில் நூலுருவில் வெளியிட்ட "ஆசியா" நிறுவனத்தினரும் பாராட்டப்படவேண்டியவர்கள்.

இந்நூல் இப்பிரதேசத்தின் தமிழ் மொழி, தமிழ்க்கலாச்சாரம் , சைவசமயம் ஆகியவற்றின் தாக்கங்கள் இங்கு எவ்வளவு தூரம் ஊடுருவி இருக்கின்றது என்பதனை தெளிவு படுத்துகிறது. அல்லி, குவேனி, பல்கிஸ் ஆகிய அரசிகள் வீற்றிருந்து அரசாட்சி செய்த பிரதேச மென்றும், புத்தளம், கற்பிட்டி, குதிரைமலை, அரிப்பு, மாதோட்டம், மன்னார் ஆகிய பிரதேசங்கள் பண்டையதுறைமுகங்களை கொண்ட பிரதேசமென்றும், கடற்பயணிகளான சிந்துபாத், இபன் பதூத்தா, மார்க்க போலோ, ஆனியஸ் லோக்கமஸ், விஜயன் போன்றோர் கடல் கொந்தளிப்பினால் பாதுகாப்பாக கரை ஒதுங்கியது புத்தளம் துறைமுகமே என்றும், முத்துகுளிப்பு நடந்த சிலாபம், சிலாபத்துறை ஆகிய இடங்களைக் கொண்ட பிரதேச மென்றும் கூறுகின்றது. மேலும் அரேபியர், பாரசீகர், சீனர், ஐரோப்பியர், இந்தியர் ஆகியோரின் வர்த்தகத் தொடர்புகள் இருந்த பிரதேசமெனவும் , முக்குவர், வன்னியர், இங்கு வாழ்ந்தனர் எனவும், அவர்கள் தனித்துவமான ஆட்சி செய்தனர் என்றும் இரு அரசு செப்புப் பட்டயங்கள் மூலமும், இவ்விரு பிரிவினரிடையே தாழ்த்தப்பட்ட சமூகம் தம்மை முதன்மைப் படுத்திக்கொள்வதற்காகவே அப்பகுதியில் வியாபார நோக்குடன் வந்த அரேபியர், ஐரோப்பியர் மூலம் மூஸ்லீம்களாகவும், கிருஸ்தவர்களாகவும் மதம் மாறினர் என்றும், வட பகுதியிலிருந்து மேற்கே சிலாபம் வரை தமிழர் ஆட்சிக் குட்பட்டிருந்தது என்று குவைரோஸ் சுவாமியார் (FERANDO QUEYROZ) எழுதிய நூல்மூலமும், இப்பிரதேசத்திலுள்ள அனைத்து இடங்களின் தமிழ்ப்பெயர்கள் தற்போது சிங்களத்தன்மையான பெயர்களாக மாற்றப்படுகின்றன என்று அரிய, ஆய்விற்கு பயன் படுகின்ற தரமான தகவல்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

கணித வல்லுனர் க்ளோடியம் டொலமி கி. பி 140ம் ஆண்டு வரைந்த இலங்கையை தபரபேன் (TAPAROBANE) என்று குறிப்பிடுவதும் , தம்பபாணி, தம்பபண்ணி தம்மன்னா என்ற பெயர்கள் வழங்கப்பட்டமையினாலும், கிரேக்க அறிஞர் மெகஸ்தனிஸ் (MAGASTHA-NES) என்பவர் இலங்கையை தாப்பிரபேன் (TAPRABANE) என்று கூறுவதுடன் அது இந்தியாவினின்று தாமிரபரணி என்ற ஆற்றினால் பிரிக்கப்பட்டதென்று கூறுகின்றார். அந்த ஆற்றின் மறுபகுதியே பெருகையாறு என்றும், பொன்பரப்பி ஆறு தற்போதைய கலா ஓயா என அறியபடுகின்றது. இந்த தாமிரபரணி ஆறு பொன் பரப்பி ஆற்று (கலா ஓயா) படுக்கையின் ஊடாக நாகரிகம் அடைந்த திராவிட மக்கள் வாழ்ந்தார்கள் என்பதை வரலாறு அறுதியிட்டு கூறுகின்றன. இதை ஆய்வின் அடிப்படை யாக கொண்ட வடமேற்கு கரையும் தென் இந்திய கரையும் (தமிழகம்) இணைந்த ஒரு பூபாகமாகவே எண்ணி ஆராயப்படவேண்டும் என இந்நூல் ஆசிரியர் ஊன்றி உரைத்துள்ளார். ஆய்வாளர்கள் சிந்திப்பார்களாக

ஐயாயிரம் ஆண்டுகள் பழமைமிக்க நாகரிகம் கொண்ட மக்கள் நகரங்களான ஹரப்பா -மொஹங்சதாரோக்கள் சுமார் நூறு வருடங்களுக்கு முன்தான் புதை பொருளாய்வாளர் திரு. ஜோன் மார்ஷல்

நூல் கிடைக்குமிடம் :
ASSEAY
3, Allee Paul Leautaud
95200 Sarcelles, France.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதை குழியிலிருந்து வாய் பிளக்க வைக்கின்ற நாகரிகத்தின் அதி உயர்ந்த நிலையைக் கண்டுபிடித்தார். இது எகிப்திய, பாரசீக, பபிலோனிய, உரோம, கிரேக்க, சீன நாகரிகங்களை விட பழமையான சிறந்த நாகரிகமுடையது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மையில், சிலப்பதிகாரம் கூறும் காவிரிப்பூம்பட்டினம் கடல் ஆட்கொண்டது என்பதை உறுதிப்படுத்த தமிழ் நாடு அரசு வெளிநாட்டு ஆய்வாளர்கள் உதவி கொண்டு சமுத்திரத்தில் மூழ்கிக் கிடக்கும் அப்பட்டினத்தின் சில பகுதிகளை கண்டுபிடித்துள்ளார்கள். அவற்றுள் பௌத்த விகாரம், மாட மாளிகைகள், பெரும் தெருக்கள் என்பனவும் அடங்கும். அதே போல் இலங்கையின் வடமேற்கு பிரதேசத்தில் கடற்கோள்களினால் நீர்மூடிக்கிடக்கின்ற மேட்டுச் சமுத்திரப்பகுதியில் எத்தனை அற்புதங்கள் மறைந்து கிடக்கின்றன என்பதை மறந்து விடலாகாது. குமரிக்கண்டத்திலிருந்து நாகரிக முதிர்வடைந்த திராவிடர்களே கடற்கோளாறுகள் காரணமாக சிந்து, ஆப்கானிஸ்தான் மத்திய ஆசியாவிற்கு சென்று வாழ்ந்தனர். அதற்கு பிறகு எவ்வளவோ காலத்திற்கு பின்பே வடக்கிலிருந்து வந்த ஆரியரின் வருகையினால் இந்நாகரிகம் கொண்ட மக்கள் தென் இந்தியாவிலும், தற்போதைய இலங்கையின் வடமேற்கு கரையிலும் வாழத் தலைப்பட்டனர் என வரலாறுகள் சான்று பகருகின்றன. ஆனால் இலங்கையின் வடமேற்கு பிரதேசத்தில் விஜயனின் வருகைக்கு பின்பே நாகரிகம் கொண்ட மக்கள் வாழ்ந்தனர் என பாளி நூலான மகாவம்சகூறுகின்றது. அது தவறு என்று உணரப்பட்டதை இந் நூல் மூலம் அறியத்தருகின்றார் ஆசிரியர்.

.956 - 70 ஆண்டுகளில் இலங்கை தொல்பொருளாய்வாளர்களும், பெல்சில் வேனியா பல்கலைக்கழக தொல்பொருட் புதைபொருளாய்வுக் குழுவினரும் இணைந்து நடாத்திய ஆய்வுகளில் தம்மன்னா (இதை விஜயனின் ஞாபகார்த்தமாக புத்தளம் சீமெந்திற்கு தம்மன்னா என பெயரிடப்பட்டுள்ளது) என்னும் பொன்பரப்பி பிரதேசத்தில் விஜயன் வருகை பற்றிய தகவல்களிற்கு மாறாக, வேறு விதமாக இதுவரை பௌத்த குருமார்களால் எழுதி வைக்கப்பட்ட வரலாறுகளை மாற்றியமைக்கக்கூடிய விதத்தில் அதிசயமிக்க தகவல் கிடைத்தமையினால் ஆய்வுகள் தொடராமல் கைவிட்டது மட்டுமல்லாமல், அப்பகுதி வனவிலங்குகள் காப்பகமாக பிரகடனப்படுத்தி, குடியேற்றத்திற்கோ, ஆய்வுகளுக்கோ போக்குவரத்துகளுக்கோ இலங்கை அரசு தடைவிதித்துள்ளது.

இவ்வாய்வில் பெறப்பட்ட முடிவை இலங்கையின் புகழ் பெற்ற வரலாற்று ஆசிரியர் பரணவிதான "இது வழிந்த சிந்து வெளி நாகரிகத்தின் எச்சம்" என தட்டிக் கழித்தார். இது அவரது மகாவம்ச நோக்குகளை உறுதி படுத்த முயற்சித்துள்ளார் என தெளிவு படவைக்கிறது.

இபின் பதுதா புத்தளம் வருகையின் போது அங்கு ஆட்சி செலுத்திய மன்னர் "ஆரிய சக்கரவர்த்தி" இஸ்லாமியர் என்பது புதிய கருதுகோள். இது ஆராயப்படவேண்டியது. அந்த மன்னரின் பெயர் "தக்கியுத்தீன் அப்துர் ரஹ்மான்" எனத் தரும் ஆசிரியர் அதே அத்தியாயத்தில் அவரின் வழித்தோன்றல் புத்தளம் நகரை ஆட்சி செய்திருக்கலாம் எனவும் தருகின்றார். இது கால இடர்பாடுகளின் விளைவாக கருத வேண்டியுள்ளது. உண்மையான காலமும், சூழலும் திடமற்ற தன்மையை ஆசிரியருக்கு உண்டு பண்ணியுள்ளது. மேலும் கி. பி. 13ம் நூற்றாண்டில் மதுரையை ஆட்சி புரிந்த மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் கீழ்க்கரை முக்கிய வியாபார தளமாக விளங்கியதால், அதை பரிபாலிக்க அவனது நண்பனான அப்துல் ரகுமானை நியமித்திருந்தான் எனவும் (நானிலம் போற்றும் நன்னகர்), மற்றொரு முஸ்லீம் வரலாற்று ஆசிரியர் வாசப் என்பவர், கீழ்க்ரையில் சுங்க அதிகாரியாக அப்துல் ரஹ்மான் இருந்ததாகவும் கூறுகின்றார் (நாயக்கர் வரலாறு). இவரின் வழித்தோன்றலே வள்ளல் சீதக்காதியாகும். ஆக இவர்களது நடவடிக்கை எல்லாம் கீழக்கரை, தொண்டி, காயல் என்ற தென்னிந்திய பகுதிகளில் தான் இருந்தது. இலங்கையில் அல்ல. மேலும்இபன்பதுதாதனது நூலில் கீழ கரைதான் மூஸ்லீம்கள் அதிகமாக வாழ்ந்த நகரமென்று, நகர மத்தியில் பெரிய பள்ளிவாசல் இருந்ததையும், அங்கு சந்தித்த முஸ்லீம் பெரியார்களின் நாமங்களையும் அப்போது மதுரையை ஆட்சி செய்த முஸ்லீம் மன்னர் சுல்தான் கியாஸுத்தீன் என்றும் எழுதி உள்ளார். ஆனால் இலங்கையில் தனக்கு பாவாதமலை (சிவனொளிபாதமலை) போக விலையுயர்ந்த முத்து பரிசளித்த மன்னரின் பெயர் இஸ்லாமியப் பெயராகவிருந்தால் நிச்சயம் எழுதியிருப்பார். மேலும் அவர் அங்கு முஸ்லீம்கள் வாழ்ந்ததாக கூடக் குறிப்பிடவில்லை.

தான் பாவாதமலை போகும் போது வழியில் முஸ்லீம்கள் சமாதியை கண்டதாகவும், பெயரையும் குறிப்பிடுகின்றார். அதை விட மன்னர் அவரோடு அனுப்பிய குழுவில் நான்கு பிராம்ணர்களும் அடங்குவர், பல்லாண்டு கால அரேபிய வியாபாரத்தொடர்புகளினால் மன்னருக்கு பாரசீக மொழி தெரிந்திருப்பதில் வியப்பில்லை. இதைக் கொண்டு அவர் இஸ்லாமியர் என்று நிறுவிட முடியாது. இருந்தாலும் இந்நூலில் இன்னும் ஏராளமான தகவல்கள் ஏதோகாரணம் கொண்டு தவிர்க்கவோ, மறைக்கவோ பட்டிருப்பது மிக தெளிவாக தெரிகிறது. சிலவேளை நூலாசிரியரின் நோக்கத்திற்கு இவை உகந்தவை அற்றனவையாக இருந்திருக்கலாம் என்றும் எண்ணத்தோன்றுகிறது. இலங்கையில் வடமேற்கு கரையின் முக்கியத்துவத்தின் கீழ்கண்ட விபரங்களையும் சேர்த்திருந்திருக்கலாம்.

இப்பகுதியில் சைவமும், தமிழும் செங்
கோலோச்சிய சிறப்பை எப்படி மறைக்கமுடியும் ?. விஜயன் வருகைக்கு முன்பே வடமேற்கு பிரதேசத்தின் எல்லைகளாக, கி. மு. 1000 ஆண்டு முற்பட்ட வடக்கே திருக்கேதீஸ்வரர் ஆலயமும், தெற்கே முன்னேஸ்வரர் ஆலயமும் நாயன்மார்களால் பாடல் பெற்ற திருத்தலங்களாகும். மேலும் 25க்கு மேற்பட்ட முத்துமாரியம்மன், கண்ணகி அம்மன் பத்தினி அம்மன் ஆலயங்களும் இருந்தன. இவ்வாலயங்கள் யாவும் போர்த்துக்கேயர் வருகைளின் பின்பே சேதமாக்கப்பட்டன. அந்த இடங்களில் கிருஸ்தவ ஆலயங்கள் எழுந்தன. திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் கருங் கற்களைக் கொண்டே யாழ்ப்பாண கோட்டை கட்டப்பட்டது என யாழ்ப்பாணச் சரித்திரம் கூறும். அதன்பின் ஆங்கிலேயர் ஆட்சியின் போது தென்னிந்திய பகுதியிலிருந்து வந்த நாட்டுக்கோட்டைச் செட்டிமாரினால், சேதமடைந்த இந்து ஆலயங்கள் மீண்டும்எழுந்தன. நகர ஆலயங்கள் தவிர்ந்த கிராமங்களிலுள்ள ஆலயங்களில் இன்றும் நாக வழிபாடு நடக்கின்றது. இது பண்டைய நாகர் வழித் தோன்றலின் வெளிப்பாடே. இரண்டாவது உலகமகாயுத்தத்தில் ஜப்பான் யுத்தவி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மானங்கள் இலங்கையில் கொழும்பு, திருகோணமலை, புத்தளம் போன்ற துறைமுகங்களுக்கு குண்டுகளைப்போட்டதைத் தொடர்ந்து பண்டையகாலத்தில் புத்தளம் துறைமுகம் எவ்வளவு செல்வாக்கு மிக்கது என்பதை உய்த்துணரலாம். மேலும் புத்தளம் நகர மத்தியிலும், சில இடங்களில் வாழ்கின்ற முஸ்லிம்களின் மரபுகளே தரப்பட்டுள்ளன. ஆனாலும் அதில் தமிழ் இந்து கலாச்சாரங்களின் ஆரம்ப அடி நிலைப் பண்பாடுகள் ஊடுருவி உள்ளதைக் காணக்கிடக்கிறது. இருந்தாலும் அங்கு வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற இந்து, கிருஸ்தவ, பௌத்தர்களின் மரபுகள் தரப்படவில்லை. மேலும் தமிழர்கள் மத்தியில் வடமேற்குப் பிரதேசத்தின் பாரம்பரியம் பற்றிக் கவனம் செலுத்த முற்படாமையினால் சிங்கள ஆட்சியாளரின் கடுமையான சிங்களக் குடியேற்றத்தினால் சிங்களப் பிரதேசமாக மாறிக்கொண்டிருக்கிறது. எந்த வரலாற்று நூலும் முழுமையாக அமைந்ததாகச் சரித்திரம் இல்லை. அந்த வகையில் எல்லா நூலிலும் தவறுகள் ஏற்படுவது இயல்பானதே. மொத்தத்தில் இந்நூல் தமிழ் மக்கள் ஒவ்வோருவரும் வாங்கிப்படிக்கவேண்டிய நூலாகும்.

பிரதேசத்தின் பதிவுகளே நாட்டின் வரலாறாகவும், நாட்டின் பதிவுகளே உலகவரலாறாகவும் மாறுகின்றன. இன்றைய சூழலிலும் ஏராளமான கலை, இலக்கிய சஞ்சிகைகள் வெளிவருவது வரவேற்கத்தக்கது. ஆயினும் வரலாற்றுத்துறையின்பால் எவரும் ஆர்வமில்லாமலும், அதன் பக்கம் பார்வையைச்செலுத்தாமலும் இருப்பது எமது சமூகத்திற்கும், நாட்டிற்கும் ஏற்பட்டுவரும் பெரும் பாதிப்பாகும் என்பது உணரப்படல் வேண்டும். ●

## ஓசைக்கு !

அன்புடையீர்,

தாங்கள் மேற்படி சஞ்சிகை வெளியிடப்படுவதாக அறிந்து சரிநிகர் பத்திரிகை ஆசிரியருடன் தொடர்பு கொண்டு பெற்றோம். சிறந்த அமைப்பிலும், காத்திரமான படைப்புக்களை உள்ளடக்கியதாகவும் உங்கள் சஞ்சிகை காணப்படுகிறது. தங்கள் பணிக்கு எமது மனமுவந்த பாராட்டுக்கள்.

புலம் பெயர்ந்த புத்தி ஜீவிகளின் ஆற்றல், திசைமாறிப் போகும் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தில் நியாய பூர்வமாக பங்களிப்புச் செய்ய வேண்டிய தேவை இன்று தவிர்க்க முடியாதாகிவிட்டது. இதற்கு சிறந்த களமாக தங்கள் சஞ்சிகை காணப்படுகின்றது. மேலும், ஒடுக்கு முறைக்கு எதிரான விடுதலை உணர்வுகளை ஒழுங்கமைப்பதிலும் தங்களது சஞ்சிகை வரலாற்றுப் பங்களிப்பை ஆற்ற முடியும், எனவும் நாம் நிஜமாகவே நம்புகிறோம்.

எமது அமைப்பு முற்போக்கு கருத்துத் தேடல்களில் ஆர்வமுள்ள இளைஞர்களைக் கொண்ட சமூக சேவை அமைப்பாகும். அவ்வாறான சஞ்சிகைகள், நூல்கள் எமது பிரதேச இளைஞர்களின் சிந்தனா விருத்திக்கும், செயற்பாட்டிற்கும் பெரும் தீனியாக அமையும் என நாம் நம்புவதால், தயவு செய்து தங்களது சஞ்சிகை மற்றும் முன்னைய பிரசுரங்களையும் எமது நூல் நிலையத்திற்கு தொடர்ந்து அனுப்பி உதவுவீர்களென பெரிதும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கின்றோம். நன்றி

"Igbal Community Centre" Jumma masjid Cross Road, Valaichchchenai, Sri Lanka.



. . . படைப்புக்களைவிட விமர்சனங்கள் கூடிவிட்டமையாலேயே பல அநர்த்தங்கள் தமிழ் இலக்கியத்திலும் அரசியலிலும் நிகழ்ந்ததைக்காணலாம். நல்ல படைப்பாளிகளையும் படைப்புக்களையும் உருவாக்குவதுதான் சிறுபத்திரிகைகளின் இலக்கியதர்மம் என நினைக்கிறேன். புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் ஏராளமான பத்திரிகைகள் ஏனோதானோ வென்று தோன்றியும் மறைந்தும் கொண்டிருக்கின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் வெளிவந்த பு. பெ. சிறுபத்திரிகைகளில் வெளியாகிய 'ஒறிஜினாலிட்டி' கொண்ட நல்ல சிறுகதை, கவிதை, நாவல் எவையென விரல்விட்டு எண்ணிச்சொல்ல முடியாதளவு எமது படைப்பாற்றல் இருக்கிறது. என்ன செய்வோம்.
அப்போ இந்தப்பத்திரிகைகளில் வந்தவைதான் என்ன ?
விமர்சனங்கள் - துதிபாடல்கள் - தனிப்பட்ட தாக்குதல்கள்தான்.
'பேசிப் பேசியே பொழுதுகள் போயின' என்றொரு கவிதைவரி ஞாபகம் வருகின்றது.

நீண்ட நாட்களின் பின் என் இனிய நண்பர் வண்ணநிலவனின் 'அம்மா' வுடன் ஓசையின் மூலம் பேசக்கிடைத்தது. அவரது எழுத்தின் இறுக்கமும் எளிமையும் தமிழ்ச்சிறுகதைக்கு என்றும் மெருகூட்டுவன. . . . .

- க. ஆதவன் (டென்மார்க்)

ஆசிரியர், ஓசை,

"ஓசை" போன்ற புலம் பெயர்ந்தவர்களால் வெளியிடப்படும் சஞ்சிகைகள் பரவலாக ஈழத்தில் வாசிக்கப்படவேண்டும், ஏனெனில் கெடுபிடிகளுக்கு அப்பாலான சுதந்திர, நிதானித்த கருத்துப்போக்கையும், மாற்றுக் கருத்துக்கு மதிப்பளிக்கும் பண்பினையும் அவை கொண்டுள்ளன.

'ஓசை' ஏன் எரியும் ஈழத்து நிகழ்வுகளைவிட்டு ஒதுங்கியதாய் உள்ளது. கலை இலக்கிய வாசகர் வட்ட வெளியீடு என்பதாலா?

'இலங்கையில் தமிழ்த்திரைப்படங்கள்' பற்றிய கட்டுரைமூலம் 'நான் உங்கள் தோழன்' மட்டுமே பார்க்கக் கிடைத்த என்னைப் போன்ற இளையவர்களுக்கு, இன்னும் எத்தனையோ படங்கள் தயாராகியிருந்திருக்கின்றன என்பதை அறியும் போது திருப்தியாய் இருக்கிறது., எடுத்த 'இளைய நிலா'வும் காணாமல் போய்விட்டது, இப்போது ஷர்மிலாவின் 'இதய ராகம்' கடும் விளம்பரமாகிக்கொண்டிருக்கிறது. கட்டுரையில் வெளியாகியிருக்கிறது என்றிருக்கிறது. எங்கே..? அங்கேயா...? வெளிவர இருக்கின்றது என்றுதான் இலங்கையில் பத்திரிகைகளின் விளம்பரம். சிங்கள திரைப்படக் கலைஞர்களைக் கொண்டு எடுத்திருக்கிறார்களாம், உயிரோட்டமாய் இருக்குமோ தெரியாது.. ஏனென்றால் அவர்கள் நடித்த சிங்களப் படங்கள் பார்த்திருக்கிறேன். வெறும் செயற்கைத்தனம்தான் அதிகம். T. V நாடகங்கள் பிரமாதம். கலைசார் படங்களும் பிரமாதம்! தொலைக்காட்சி தமிழ் நாடகங்கள் (இலங்கை) இதுவரையும் எந்தத் திருப்தியும் அளிக்கவில்லை.

எம். கே. எம். ஷகீப்(திருகோணமலை)

. . . . . . பத்திரிகையாளர் தாக்கப்பட்டதற்காக நீங்கள் பிரசுரித்த கருத்துப்படம் பிரமாதம். என்னை மிகவும் கவர்ந்தது. அது கூட ஒரு கவிதைதான். ஆம்! எல்லாக்கலையுமே மிக உணர்வு பூர்வமாக வந்தால் அது கவிதைதான். ஒருவனின் உண்மையான போலியற்ற வாழ்க்கை கூட கவிதைதானே!

- சோலைக்கிளி(கல்முனை)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொழிலாளர் சிக்கல்கள் - தொடர் 2



- மாதவன்

இடம்: உணவு விடுதி (restaurant)

தொழிலாளர் தொகை : 9

ஒரு நாள் அமுதனும், செல்வனும் முதலாளியால் அழைக்கப்பட்டனர். கண்டிப்பான தொனியில் எச்சரிக்கப்பட்டனர். தொழிலில் கவனமெடுக்கவேண்டுமெனவும், வாடிக்கையாளர்களுடன் கண்ணியமாகப் பழகவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப் பட்டனர். 'என்ன? ஏது? எதுவும் புரியவில்லை இருவருக்கும். முதலாளியின் திடீர் கோபமும் கண்டிப்பும் அவர்களை நிலைகுலைய வைத்ததாயினும் தருணமறிந்து-அவர்களும் எந்தவித மறுப்பும் பேசாமல் தம் வேலையைத் தொடர்ந்தனர்.

அடுத்தவாரம் இருவருக்கும் தனித்தனி பதிவுத் தபால்கள் வந்திருந்தன. கடுங்குற்றம் தொடர்பான -வேலைநீக்க விசாரணைக்கான அழைப்புக்கடிதங்கள்.

முதலாளியின் முன் நின்றபோது அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றம் 'கடந்தவாரம் திங்கள் காலை 10.30 மணியளவில் வாடிக்கையாளருக்காக வைக்கப்பட்டிருந்த EVIAN தண்ணீரைக் குடித்துவிட்டு அப்போத்தலில் 'பைப் ' தண்ணீரை ஊற்றி வைத்து...... இதனால் வாடிக்கையாளரை ஏமாற்றி..... தாபனத்தின்பெயருக்குக் கெட்ட.......... ஆகவே கடுங்குற்றம் கருதி வேலை நிக்கம் செய்யப்படுகின்றீர்கள்' சாட்சிகள் அவ்விடத்தில் வேலைசெய்யும் முதலாளியின் உறவினர்களே. இருவருக்கும் தனித்தனியே வேலைநீக்கக் கடிதங்கள் கொடுக்கப்பட்டு முறைப்படி ஒப்பங்கள் வாங்கப்பட்டன.

வேலை பறிக்கப்பட்டது. நண்பர்கள் புதிய வேலைகள் தேடலில், அல்லது உதவிப்பணம் பெறும் விடயத்தில் கவனத்தைச் செலுத்தினார்கள்.

என்ன ஆச்சரியம். மூன்று வாரங்கள் கூட ஆகவில்லை. அந்த உணவுவிடுதி புதிய பெயரில் காணப்பட்டது. விசாரித்ததில் தொழிலில் நட்டம் எனக்காரணம் கூறி விடுதியைமூட ஏற்கனவே திட்டமிட்டு நடைபெற்ற நடவடிக்கைகளில் ஒன்றுதான் தம்மை வேலையால் நிற்பாட்டிய வேதனையான உண்மை என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள்.



இடம்: வர்த்தக நிலையம்

தொழிலாளர் தொகை : 38

அருணன் ஐந்து வருடங்களாக அங்கு வேலைசெய்து வந்தான். எந்த உயர்வும் கிடைக்கவில்லை. சம்பளத்திலும்தான். மனச்சோர்வுடன் காலத்தை ஓட்டிவந்தான். இதே நிலையில்தான் இவனது நண்பன் அகிலனும். அகிலன் சற்று வித்தியாசமானவன். தற்போது தன் சம்பள உயர்வுபற்றி அடிக்கடி பேசிக்கொள்வான். தன் மேலாளனுடன் இது பற்றிப் பேசியதினால் குழப்பக்காரன் எனப் பெயரும் பெற்றிருந்தான். இதன் காரணமாக எச்சரிக்கைக் கடிதம் ஒன்றையும் பெற்றிருந்தான். அதில் பொய்யான குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது.

ஒருநாள் வேலையில் இருக்கும்போது தொலைபேசி அழைப்பு வந்திருப்பதாக அகிலனிடம் தெரிவிக்கப்பட்டது. அவனது மனைவியின் தாயார் மறுமுனையில் பேசகிறா. கடுஞ்சுகவீனம் காரணமாக மகளை-மருத்துவமனையில் சேர்ப்பித்திருப்பதாக-செய்தி. உடன் வருவதாகக்கூறிவிட்டு தன் மேலாளனைத் தேடி ஓடுகிறான் அகிலன். தொலைபேசிச் செய்தியைத் தெரிவித்து மருத்துவமனைக்கு உடன் செல்லவேண்டிய அவசியத்தைக் கூறுகின்றான். அவனின் அனுமதியுடன் அருணனிடமும் செய்தியைக் கூறிவிட்டு அகிலன் வேளியேறுகின்றான். அப்போ பகல் 11.30. அன்று ஞாயிற்றுக் கிழமை. திங்கள் அவனது வாராந்த விடுப்பு. செவ்வாய் மீண்டும் வேலைக்கு வந்த அகிலனுக்கு அங்கே அதிர்ச்சி காத்திருந்தது. விசாரணைக்கென அழைக்கப்பட்டடான். 'ஞாயிறு பகல் 11.30 மணிக்கு மேலாளரின் அனுமதியின்றி தானாகவே கடமையை விட்டு வெளியேறியதால் ... வேலை ஒழுங்குகளைச் செய்வதற்கு இடைஞ்சலாக இருந்திருக்கிறீர். இக்குற்றம் கடும் குற்றமாகக் கணிக்கப்பட்டு........ வேலைநீக்கம். செய்யப்படுகின்றீர்' அகிலன் நடைபெற்றதை விளக்கினான். மேலாளனின் அனுமதியுடன்தான் தான் வெளியேறியதாகத் தெரிவித்தான். தன் நண்பன் அருணனையும் சாட்சியாக அழைத்துவந்தான். எதுவுமே எடுபடவில்லை. வேலை போயிற்று.

அருணன் கவலையோடு வேலையைத் தொடர்ந்து வந்தான். அகிலன் விடயத்தில் சாட்சிக்குச் சென்றபடியால் இப்போதெல்லாம் அருணன்மீது மேலாளன் அடிக்கடி எரிந்து விழுந்தான். கடும்வேலைகளை ஒப்படைத்தான். தன்வேலையையும் இழக்கவிரும்பாத அருணன் வேர்க்க விறுவிறுக்க தன் கடமையில் ஈடுபட்டுவந்தான்.

ஒரு நாள் வேலையின்போது வழமைபோல தண்ணீர் போத்தல் ஒன்றைத்திறந்து குடித்துவிட்டு தன் பெயரையும் அதில் எழுதி தன் பக்கத்தே வைத்துக்கொண்டு வேலையில் ஈடுபடலானான். மேலாளன் வந்து பெயர் சொல்லி அழைத்ததும்தான் நிமிர்ந்து பார்த்தான். "வேலை செய்யும் இடத்தில் சாப்பிடுவது, குடிப்பது நடைமுறைவிதிகளின்படி குற்றமாகும். ஆகவே நீர் செய்தது பெரும் குற்றம்" எனக் கூறினான் மேலாளன். "அப்படியாயின் வேலை செய்பவர்களுக்கு குடிநீர் வசதி செய்து தரவேண்டியது உங்கள் கடமை" என்றான் அருணன்.

மாலை வேலை முடியும் வேளையில் மேலாளன் மற்றும் இருவர் அருணனை மறித்து காலையில் குடித்த தண்ணீர் போத்தலின் பெறுமதி 1F. 50 காசாளரிடம் செலுத்திவிட்டுச் செல்லுமாறு வற்புறுத்தினர். பணத்தைச் செலுத்திவிட்டு கவலையுடனும், அவமானத்துடனும் நடந்தான் அருணன். அடுத்தநாள் காலையில் வேலைக்குச் சென்ற அருணன் வாசலிலேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தடுக்கப்பட்டான். வேலை நீக்கக்கடிதம் வழங்கப்பட்டது.
தண்ணீர் குடித்தது கடுங்குற்றமாம். ஆகவே சேவைக்காலப் பணம், முன்னறிவித்தல் எதுவுமின்றி வேலை நீக்கம் செய்யப்பட்டார்.
மேற்தரப்பட்ட உண்மைச்சம்பவங்களில் தொழில் கொள்வோரின் வஞ்சகமும், தொ்ழிலாளர்களின் பலவீனமும் வெளிப்படையாகத் தெரிகின்றது.

உணவுவிடுதியில் அமுதன், செல்வன் பாதிக்கப்பட்டபோது தமக்கு என்ன நடைபெற்றதென்பதையே அவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை. அத்துடன் அவர்கள் அநியாயமாக பாதிக்கப்பட்ட போதும் -ஆலோசனைகூறி உரியமுறையில் நடவடிக்கைகள் எடுக்க எவரும் வழிகாட்டவில்லை. அவர்கள் தமக்குத் தெரிந்த பாதைகளில் சென்றார்கள்.

வியாபார நிலையத்தில் கடமையாற்றிய அருணன், அகிலன் சற்று வித்தியாசமானவர்கள். அகிலன் தன் நிலைக்காக வாதாட அருணனை அழைத்தான். ஆனால் முதலாளியால் வைக்கப்பட்ட விசாரணை அகிலனையே குற்றவாளியாக்கியது.
அதுபோலவே அருணன் வழமையாக தண்ணீர் குடிக்க அனுமதிக்கப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டினான். தொழில் செய்யும் இடத்தில் குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கவேண்டும் என்ற சட்டவிதிகளையும் தெரிவித்தான். எனினும் மேலாளன் கேட்டக்கொண்டதினால் தான் குடித்த தண்ணீருக்கு பெறுமதியையும் செலுத்தினான். ஆனால் தொழில் கொள்வோனோ அன்று அகிலனுக்குச் சாட்சியாக அருணன் வந்ததை நினைவில் வைத்து அன்றாட நிகழ்வை கடுங்குற்றமாக்கினான்.
எப்படியிருப்பினும் மேற்காட்டிய சம்பவங்களால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தமக்குரிய நியாயத்தைத் தேடவில்லை. அது பற்றிய பின் முயற்சியும் செய்யவில்லை. காரணம் அவர்கள் உதிரிகளாக அங்கொன்றும்-இங்கொன்றுமாக தொழிலாளர்கள் என்ற எவ்வித இணைப்புமின்றி இருந்தது தான்.

நாங்கள் உருக்குலைந்திருக்கிறோம். உண்மைதான். ஆனால் உரிமைகளை வென்றெடுக்க எங்களிடமும் சக்தியுண்டு.

## பாரிஸில் நாங்கள்

நாள் முழுவதுமே தூறிக்கொண்டுதானிருந்தது.

இந்தச்சிணுங்கலைப் பார்த்ததால் அலுவல் ஒன்றும் முடியாது.

நானும் நண்பனும் ஓடத்தொடங்கினோம்.

சிறிது தூரம் ஓடியபின் திருப்பிப்பார்த்தேன்.
நண்பனைக்காணவில்லை.

தூரத்தே நடப்பதற்குச்சிரமப்பட்டுக்கொண்டிருந்தான்.
நெருங்கிப்பார்த்தேன்.
முகத்தில் அசடு வழிய என்னைப் பரிதாபமாகப்பார்த்தான்.

அவனது பிய்ந்து போன சப்பாத்திற்கு பூசியிருந்த சுண்ணாம்பு மழைக்குக்கரைந்து கொண்டிருந்தது.

சௌமி



- எம்.கே.எம். ஷகீப்

# வாக்கு மூலம்

எனது பெயர் இப்போதைக்கு "மனிதன்" என்றிருக்கட்டும்.

குடும்பத்தில் மூத்தவனாகப் பிறந்து முடியுமானவரையில் படித்துவிட்டு, இப்போது கொழும்புக்கு வேலை தேடிவந்திருக்கிறேன்.

ஏதோ ஒரு புண்ணியத்தால் கட்டணமில்லாமல் கிடைத்த வசதியான அறை, என்றாலும் மழைவந்தால் கொஞ்சம் ஈரலிப்புத்தான். அதற்கு, வெளியே மட்டும் மழைபெய்வது விருப்பமில்லை. எப்படியாவது உள்ளுக்குள்ளும் பெய்ய விட்டுட்டுத்தான் அனுப்பும்.

நான் ரூமுக்கு வந்து பல நாட்களாகிவிட்டன. வந்ததிலிருந்து ஒரே மழைதான். சரியான "கூதல்" வேற, போர்த்துவதற்கென்று எதுவும் கொண்டுவந்திருக்கவில்லை. சரியான கஷ்டமாய் இருக்கிறது.

வரும்போது ஒரு சிறுதொகைப்பணமே கொண்டுவந்தேன், அதுவும் என்னில் இருக்கின்ற எனக்கேயில்லாத நம்பிக்கையால் என்தாய்தான் எங்கேயோ கடன்பட்டு வாங்கித் தந்திருந்தார்.

முன்னரைப்போல் இல்லாமல், இப்போது மிகவும் சிக்கனமாய் இருக்கவேண்டுமென்று ஒரு பொறுப்புள்ளவனாய் நினைத்துக் கொண்டு வந்தேன். அதுபோல்தான் இதுநாள் வரையில் சாப்பாட்டு விஷயத்தில் மாத்திரம் இருந்து வருகிறேன்.

காலைச் சாப்பாட்டுச் செலவைக் 'கவர்'பண்ண காலையில் நீண்டநேரம் தூங்கிவிடுகிறேன். நல்ல தூக்கத்தில் பசி தெரியாது, நல்ல பசியில் தூக்கமே வராது. ஆனால் எல்லா நாளிலும் இப்படித் தூங்கிக் கழிப்பதில்லை. சாப்பிட வேண்டும் போலிருந்தால் பக்கத்திலிருக்கும் சைவ ஹோட்டலுக்குப் போகிறேன். குறைந்த தொகையில் நிறையச் சாப்பிடக் கிடைக்கிறது.

இந்த சைவ ஹோட்டல் விஷயத்தில் என்னிடம் ஒரு தப்பான எண்ணம் இருந்தது. அதாவது எல்லா சைவக்கடைகளிலும் மலிவாய்ச் சாப்பிடலாமென்று, இது பிழையென்று பின்னர்தான் தெரியவந்தது. முழுக்க முழுக்க கண்ணாடி சூழ்ந்த பார்வைக்கு படத்தக்கமாதிரி புதிசாய் ஒரு ஹோட்டல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திறந்திருந்தார்கள். அதுவும் சைவ உணவகம்தான். அந்த ஹோட்டலுக்கு ஹோவென்று விரிந்த வாசல் இருக்கவில்லை, தள்ளித்திறக்கின்ற கண்ணாடிக் கதவு போட்டிருந்தார்கள்.

சாப்பாட்டை மாற்றாமல் ஹோட்டலை மட்டும் இன்று மாற்றிப் பார்ப்போம் என்று கதவைத் தள்ளிக்கொண்டு நுழைந்தேன். மற்றக் கடைகளைப் போல் ஆர்ப்பாட்டமான ஆரவாரமோ, ஒருவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே அவன் பின்னால் கதிரைக்காக காத்திருக்கும் நிலையோ அங்கிருக்கவில்லை. உள்ளே போய் ஓர் ஓரமாய் உட்காந்தேன். சர்வர் கையில் புத்தகத்தோடு வந்தான். என்ன ஆர்வம் என்று வியந்தேன். அதற்குள் அதை எனக்கு முன்னால் விரித்து வைத்தான். சாப்பாட்டு விபரமும், விலையும் எழுதப்பட்டிருந்தன. "மெனு" என்று முன்னரெல்லாம் கேள்விப்பட்டிருக்கின்றேன்தான். இன்றைக்குத்தான் பார்க்கக் கிடைத்தது. அதைப் பார்த்து, 'ஓர்டர்' பண்ணிச் சாப்பிடும் நிலையிலெல்லாம் நானில்லை. இந்தக் கடையும் அப்படியான கடையென்று தெரிந்திருந்தால் வந்திருக்கவும் மாட்டேன்.

அதைப்பார்க்காமலேயே வழமையான என் உணவைச் சொன்னேன். கொண்டுவந்தான் கொஞ்சம் தாமதித்துத்தான். என்றாலும் சூடாய் இருந்தது. முடிந்ததும் 'பில்' வந்தது, வழமையாக எங்கும் வாறதுதான். ஆனால் அந்தத் தொகைதான் எங்கும் வராதது. ஒவ்வொன்றின் விலையையும் கேட்டு தொகையை ஊர்ஜிதப்படுத்த வேண்டும்போல் இருந்தது. வெட்கம் தடுத்தது. 'டிப்ஸ்' கூட வைக்காமல் வந்துவிட்டேன். அதன் பிறகு அந்த ஹோட்டல் ஹில்டன் ஒபரோய் சமாச்சாரங்களாய்த் தெரிந்தது. சாப்பாட்டுச் சங்கதி அப்படிப்போனாலும், நான் வந்த விஷயத்தில் அதிகமாய் இருந்த ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தினேன். 'ஓஸி'யில் பார்க்கக் கிடைக்கும் தின, வாரப் பத்திரிகைகளிலெல்லாம் என் தகுதிக்கான வேலை தேடிக்கொண்டிருந்தேன். ம்ஹூம் இல்லவே இல்லை. அவ்வப்போது ஒன்றிரண்டு இருந்தாலும், பல வருட அனுபவம் கேட்கிறார்கள்.
நானாக மாத்திரம் காதலித்து தோல்விகண்ட அனுபவம் இருக்கிறது.
"ரவுண்ட் - அப்" என்று அடிக்கடி நிகழும் ராணுவக்கெடுபிடிக்குள் அகப்பட்டுத் தத்தளித்த அனுபவம் இருக்கிறது. இன்னும் என்னவெல்லாம் அனுபவமிருக்கிறது. இதையெல்லாம் எவனும் வேலைக்குரிய அனுபவங்களாய் ஏற்கிறான்களில்லை.

தொழில் செய்தவனுக்குத்தான் தொழிலனுபவம் இருக்கிறது. தொழில் இருக்கும் ஒருவன் அனுபவத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு ஏன் வரவேணும்? இங்குள்ள வேலை கொடுப்பவங்களும், வேலை செய்கிறவன்களும் மடையன்களாய்த் தெரிகிறான்கள்.

'நான் போடுவேன்' என்று எதிர்பார்ப்பால் வீட்டிலிருந்து கடிதமும் வரவில்லை. 'வேலைப்பழுவோ' என்று கூட வீட்டார் நினைத்திருப்பார்கள்.

ஒன்றுமே சரிப்பட்டு வராத நிலையிலும் கொழும்பில் பொழுது ஒரு மாதிரியாய் போய்க்கொண்டிருந்தது. கையிலிருந்த காசின் கனமும் குறைந்து கொண்டு வந்தது. அலுப்பு அதிகமானதால் ஒரு நாளைக்கு இரண்டு படம்கூட பார்க்கலானேன்.



படம் பார்ப்பதென்றால் ஆமர் வீதிக் கொட்டகைகளுக்குத்தான் போவேன். அங்கு போறதும் இப்போது சரியான பயம். அந்த வீதியில் ஊர்வலம் போனபோதுதான் நிறைவேற்றதிகாரம் கொண்ட எங்கள் பிரேமதாசவை கொன்றார்கள். அதிலிருந்து அந்தப் பக்கமெல்லாம் ராணுவத்தினருக்கு வேலையாய்த்தான் இருக்கிறது.

ஒரு கிழமைக்கு முதல் படம்பார்க்கப் போயிருந்தேன். 'அமராவதி' என்ற புதுப்படம். அதுவும் மசாலா வகையானதுதான். நான் என்ன கலைநோக்கோடா படம் பார்க்கப்போனேன்...! சும்மா ஒரு பொழுது போக்குத்தானே...! என்னைவிட வயதில் குறைந்த ஒரு பொடியன் நடித்திருந்தான் - பெட்டையும் பரவாயில்லை. தூரத்தில்தான் வடிவாயிருந்தாள். இங்கு எழாம், எட்டாம் வகுப்பில் படிக்கும் வயதில் இருந்தாள். "பாவம் எந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து இழுத்து வந்தான்களோ".

'அமராவதி'யில் எல்லாம் நல்ல பாடல்களாய் இருந்தன. விஷேட ரசனையுடன் நான் கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் பலர் பாடல் காட்சியின் போது இருக்கையைவிட்டு எழுந்து செல்வதும் பின்னர் வருவதுமாய் இருந்ததை அவதானித்தேன். கடைசிப் பாட்டின் போது அவர்களுக்குப் பின்னால் நானும் போனேன். எல்லோரும், -நானும்தான். மேல்ரூமுக்குப் போனார்கள். அங்கேயும் சிலர் படம் பார்த்துக்கொண்டிருந்தனர். நானும் போய்ப் பார்த்தேன் -படம்தான் -ஆனால் நடிக, நடிகையர் எவரும் உடுப்பணிந்திருக்கவில்லை! பார்க்கவேண்டும் போலிருந்தது. கொஞ்சநேரம் நன்றாகவே பார்த்துவிட்டுக் கீழே சென்றேன். நான் இங்கு வந்தபோது யாரோ 'அமராவதி'யைக் கடத்திக் கொண்டுபோயிருந்தார்கள். நான் மேலே போனது தான் தப்பு என்று 'செந்தில்' தனமாக நினைத்துக் கொண்டேன்.

படம் முடிந்து பஸ்ஸில் ஏறி பம்பலப்பிட்டி சந்தியில் வந்து சாப்பிடுவதற்காக இறங்கினேன். கடும் மழையும் பெய்து கொண்டிருந்தது. எல்லோரும் கடையோரங்களில் சுருங்கிக் கொண்டிருந்தார்கள். நானும்போய் மூடிய கடையொன்றின் முன்னால் நின்றேன். கொஞ்சம் தள்ளி ஒருத்தி குடைபிடித்துக்கொண்டு நின்றிருந்தாள். இன்னும் சற்றுத்தூரத்தில் இரு ஆண்கள். பெண்ணைத்தான் நோட்டமிட்டேன். வித்தியாசமானவளாய் இருந்தாள். அதற்கிடையில் கொஞ்சமாய்ப் பார்த்த அந்தப்படம் மனத்தில் தோன்றியது. ஏதோ துணிவில் அவளருகே நகர்ந்தேன் -சிரித்தாள். அவளின் குடைக்குள்ளேயே போய்விட்டேன் -எனக்குத் தெரிந்த தேசிய மொழியில் எங்கே.. எவ்வளவு என்று கேட்டேன். ஹோட்டலுக்குத்தான் போகவேணும்.. முன்னூறு ரூபாய்.. என்றாள். உடனே மழையையும் பார்க்காமல் ஹோட்டலுக்குள் ஓடி விட்டேன். வேறொன்றுக்குமில்லை சாப்பிடத்தான்!

இப்போதெல்லாம் கொழும்பில் அடிக்கடி தேடுதல் வேட்டை நடக்கிறது. இரவிலும், பகலிலும் ஆண்களையும் பெண்களையுமாக அள்ளிக்கொண்டு போகிறார்கள். விசாரணை விசாரணை என்று அடித்து சரியாகத் துன்புறுத்துகிறார்கள். பெண்களை இரவில் தனியே அழைத்துச் செல்கிறார்கள். தமிழ்ப்பத்திரிகைகளெல்லாம் தினமும் பக்கம்பக்கமாய் இதுபற்றித்தான் மிகவும் ஆதங்கத்தோடு எழுதிக் கொண்டிருக்கின்றன. இருந்தும் எதுவித பயனுமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரோட்டில் திரியும்போது அடிக்கடி இந்தப்பயமாய்த்தான் இருக்கிறது. ஐடின்டிகார்ட்டை எப்போதும் போல் பொக்கெட்டிலேயே வைத்திருக்கிறேன்.

நேற்றும் கூட ஒரு பொலிஸ்காரன் எல்லாம் பார்த்துப் பரிசோதித்துவிட்டு அனுப்பிவிட்டான். எங்கே கூட்டிக்கொண்டு போய்விடுவானோ என்றும் பயமாய்த்தான் இருந்தது. நல்லவேளை அப்படி எதுவும் நடக்கவில்லை.

மரத்தால் விழுந்தவனை மாடு குத்திற கதைதான் நடக்கிறது. ஊரில் இருக்கேலாதென்று புறப்பட்டு வந்தவர்கள்தான் இங்கேயும் கஷ்டப்படுகிறார்கள். மற்றவர்களெல்லாம் அவர்கள் பாட்டில் வழமைபோல் எந்தப் பிரக்ஞையுமின்றி சொகுசாய்த்தான் இருக்கிறார்கள் என என் அவதானத்துக்குப் படுகிறது.

"செய்ததன் பலனை அனுபவிக்கட்டும்" என்ற போக்கில்தான் நகரத்தில் வாழ்பவர்கள் நடந்து கொள்வதாய்த் தெரிகிறது.

எல்லாம் தேவைதான் எங்களுக்கு. ■


"ஆசியா" வின் வெளியீடுகள்

சூரியனோடு பேசுதல் - வ. ஐ. ச. ஜெயபாலன்
(கவிதைத் தொகுதி)

இரண்டாவது பிறப்பு - அருந்ததி
(கவிதைத் தொகுதி)

கட்டிடக்காட்டுக்குள் - செல்வம்
(கவிதைத்தொகுதி)

The Eluding Peace - Taraki
(An insider's political analysis of the ethnic conflict of Srilanka)

புத்தளம் வரலாறும் மரபுகளும் - ஏ. என். எம். ஷாஜகான்
(வரலாற்று நூல்)

எரிந்து கொண்டிருக்கும் நேரம் - சேரன்
(கவிதைத்தொகுதி)

ஆணிவேர் அறுந்த நான் - சோலைக்கிளி
(கவிதைத்தொகுதி- அச்சில்)

*Asseay, 3, Allee Paul Leautaud, 95200 Sarcelles, France.*




# தமிழக அலைவரிசை

சுபமங்களா இதழும் ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸும்(!) இணைந்து நாடக விழாவும், பகலில் கருத்தரங்கத்தையும் நடத்தினர். இதில் பார்க்கத்தக்கதாக இருந்தது ஞாநி இயக்கிய விஜய் டெண்டுல்களின் கமலா, தஞ்சை முருகேசன் குழுவினரின் நிலைத்துக் கலையான "தம்பட்டம்" (பறையடிப்பு); ஐக்யா குழுவினரின் -சுரேந்திரவர்மா இந்தியில் எழுதிய 'சூரியனின் கடைசி கிரணத்திலிருந்து முதல் கிரணம் வரை' என்ற நாடகம். கைலாசத்தின் - முத்துமாரியம்மன் நாடகமன்றத்தின் -பகடைத் துயில் (மகாபாரதத் தெருக் கூத்து) பாண்டிச்சேரி தலைக்கோல் குழுவினரின் "கருஞ்சுழி" பிரளயனின் 'புரட்சிக்கவி' முதலியவை. மற்றவை அம்மாமித் தமிழில் கனஜோராய் நடந்தது.

சுரேந்திர வர்மாவின் நாடகம் ஏற்கனவே ராஜீ குழுவினரால் அரங்கேற்றப்பட்டது. நாடகத்தின் தன்மையே அதன் அர்த்தம் செறிந்த சொற்களிலில் இருந்து வெளிப்பட்டபோது அற்புதமான நிகழ்வாக காட்சியளித்தது.

ஆண்மையற்ற மன்னன் ஆகவே மந்திரி, தளபதி, ராஜகுரு மூவரும் கூடி சந்ததி வேண்டும் என்பதற்காக மகாராணி சூரியனின் முதல் கிரணத்திலிருந்து கடைசி கிரணம் வரை வேறொரு ஆடவனுடன் இருந்து பிள்ளைப்பேறைப் பெறலாம் என்று மன்னனையும், மகாராணியையும் சம்மதிக்க வைக்கின்றனர். இதற்கிடையில் மன்னன், அரசி, பிரதானிகளுக்கு இடையில் நடக்கும் உரையாடலே நாடகத்தை கச்சிதமாக இழுத்துச் செல்கிறது. சுரேந்திரவர்மாவின் பேனா இந்துத்துவத்தையும், ஆணின் மேல்நிலை ஆதிக்கத்தையும் அணுஅணுவாக சிதைக்கிறது.

வ. ஆறுமுகத்தின் 'கருஞ்சுழி' இன்றைய மனிதனின் இருத்தல் எவ்வளவு கஷ்டமானது என்பதை பாறை, பெரிய போர்வையின் மூலம் பல வடிவங்களை கொண்டுவந்து காண்பித்தார். இதுவரை தமிழ் நாடகங்களில் பயன்படுத்தாத அற்புதமான இசை அமைப்பில் டெல்லிப் பேராசிரியர் இரவீந்திரன் திறம் பட செய்திருந்தார். இதன் எழுத்து வடிவம் "காலச்சுவடு" மலரில் இடம்பெற்றது. நடித்த மாணவர்கள் தமிழ் நாடக உலகிற்கு புதிய வரவு.

காலையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றும் சொல்லும்படியாக இல்லை. இலக்கிய உலகின் முந்திரிக் கொட்டையும் சுந்தர ராமசாமியின் வெற்றுப் பெட்டியுமான ஜெயமோகன் தமிழர்களுக்கு இலக்கிய பாரம்பரியமே கிடையாது என்று பேத்தினார். அடுத்த நாள் இதற்கு பதிலளிப்பது போல தமிழவன் தொல்காப்பியமும் அமைப்பியலும் எவ்வளவு புதுமையானவை என்பது பற்றி பேசினார்.

○

இன்டியா டுடே இதழ் வெளியிட்ட 'இலக்கிய சிறப்பிதழ்' பார்ப்பணீயமாக இருக்கிறது, எனக்கூறி நிறப்பிரிகை ரவிக்குமார், மார்க்ஸ், வேலுச்சாமி, பொதியவெற்பன் கூட்டிய கூட்டத்தில் இவ்விதழை இனி "மலம்" துடைக்க பயன்படுத்துவது என தீர்மானித்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரொம்ப காலத்திற்கு பிறகு சென்னையில் பிலிம் சொசைட்டி போரின் கொடுமையை விளக்கும் ஐந்து படங்களை வெளியிட்டது. பீட்டர் டேவிஸ் இலக்கிய 'Hearts and minds' என்ற படம் எல்லோர் மனதையும் உலுக்கி விட்டது. வியட்நாமில் புகுந்த அமெரிக்க இராணுவத்தின் கொடுமைகளை அப்படியே டாக்குமென்டரியாக தந்திருந்தார்கள். நேபாம் குண்டுபட்டு ஓடிவரும் பெண்குழந்தையைக் கண்டு பலரும் மனம் தாங்காமல் வெளியே சென்றனர். இதுதவிர வியட்நாமிற்கு சென்று அடிபட்டு வந்த வீரர்கள் பேட்டி வெள்ளை மாளிகையை நிர்வாணமாக காட்டியது. இது தவிர Hisoshima My love. Murial. The war is over. Love and Death போன்றவைகள் சொல்லும்படியாக இருந்தன.

- இரா. நந்தன்-


## றஜனி பதிப்பகத்தின் வெளியீடுகள்

கலை இலக்கியமும் வர்க்க நிலைப்பாடும் - எஸ். அகஸ்தியர்

சிகரம் - வி.ரி. இளங்கோவன்
கரும்பனைகள் - வி. ரி. இளங்கோவன்

ஊரடங்கப்பாடல்கள் - சில்லையூர் செல்வராசன்
தலைவர்கள் வாழ்க மாதோ - சில்லையூர் செல்வராசன்

உணர்வுகள் - ரி. தயாநிதி
விடிவை நோக்கி - வண்ணைதெய்வம்

கடலில் ஒரு படகு - காசி. வி. நாகலிங்கம்
அழாத உலகம் - காசி. வி. நாகலிங்கம்

இனப்பிரச்சினை - ஒரு உலகவலம் - வி.ரி. தமிழ்மாறன்
தவறுகள் - றஜனி குகநாதன்

ஒரு மனிதன் - சு. கருணாநிதி
கலைப்பாதையில் இவர் - வண்ணைதெய்வம்

*79, Ave. Des. M. de Chateaubriant,*
*93700 Drancy,*
*France.*

றஜனி பதிப்பகம்






அருகே உள்ள புகைப்படத்தில் இருக்கும் அந்த அந்த அழகிய நங்கை யாரெனத் தெரிகிறதா?

சென்ற இதழ் அட்டையைத்தட்டிக் கொள்ளுங்கள்!

1972. வியட்நாமியப்போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தகாலம். TRANG BANG என்ற கிராமத்தில் அமெரிக்க நேபாம் குண்டுக்கு இலக்கான மக்கள் உயிரைக் கையில் பிடித்தபடி சிதறி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுள் ஒருத்திதான் முதுகில் பலத்த எரிகாயங்களுடன், நிர்வாணமாக ஓடிக்கொண்டிருக்கும் அந்தச் சிறுமி, PHAN THI KIM PHUC .

NICK UT என்ற புகைப்படக் கலைஞரின் புகைப்பட கருவிக்குள் அகப்பட்டுக்கொண்ட இந்த படம் உலகப்புகழ் பெற்ற பல பரிசில்களைத் தட்டிக்கொண்டது.

PHAN THI KIM PHUC ற்கு இப்போது வயது 33. கவானாவில் மருத்துவத்துறையில் பயின்று கொண்டிருக்கிறார். 1989'ல் அதே புகைப்படக்கலைஞரை சந்தித்தபின் அவருடன் ஒன்றாகவே வாழ்ந்துவருகிறார்.

நடந்தது நடந்தது தான் எனச்சலித்துக்கொள்ளும் PHAN THIKIM PHUC-UC, தோற் சிகிச்சையின் பின், குண்டுவீச்சுத் தாக்குதலினால் உண்டான வெளிக்காயங்கள் ஆறினாலும் அதனுடைய வேதனை இன்னும் தொடரத் தான் செய்கிறது என்கிறார் கவலையுடன்.

தகவல் : எஸ். சபாலிங்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தொலை பேசி

### பாரிஸில் நாங்கள்

- சௌமி

'பொழுது போகாட்டால் பேசாமல் இருக்கவேண்டியதுதானே! என்னத்துக்கு அடுத்தவனை இழுத்து வைச்சு அறுத்துக்கொண்டிருப்பான். அவனவன் என்னென்ன பிரச்சனையில இருக்கிறானோ !'

ஆனாலும் உருத்திரனால் முடியவில்லை.

ரெலிபோனின் பில் போன மாசமும் ரெண்டாயிரத்தி இருநூறு பிராங். இன்ரநஷனல் அறுவை நாயகன். எட்டால பெருக்கிப்பார்த்த காலங்களும் எல்லாம் மலையேறிப்போய்விட்டது.

ரெலிபோனின் குறிப்புப்புத்தகத்தை எடுத்துப் புரட்டத்தொடங்கினான்.

'ஆனந்தன்..... அம்பிகைபாகன்...... பாலசிங்கம்..
ம்ஹூம்.. இவங்கள் ஒருதரும் நிக்கமாட்டன்கள்.
..ம்.. சுந்தரலிங்கம்! சுந்த..ர..லிங்கம் !!'

றிசீவரைக் கையிலெடுத்து நம்பரைச் சுழட்டத்தொடங்கினான்.

'இண்டைக்குப் பார் விளையாட்டை...'

"ஹ.... லோ.....!

"யார் பேசிறது ?" மறுபுறத்திலிருந்து அமைதியாக குரல் வந்தது.

'மாட்டிக்கொண்டார். முறையா மாட்டிக்கொண்டார்'
உருத்திரனுக்குச் சரியான சந்தோசம்.
முதல்ல தன்னை ஆர் எண்டு காட்டிக்கொள்ளாமல் 'சஸ்பென்ஸில' கொஞ்ச நேரம் விளையாட்டுக்காட்டி, பிறகு தான் பகிடி எண்டு நினைக்கிறதையெல்லாம் நீட்டுக்கு அவிழ்த்துவிட்டு ஐந்து நிமிடத்துக்கு மேல அறுத்தபிறகுதான் சந்தோஷம் கோபமாக மாறியது.

"என்னடா! என்னையென்ன விசரனெண்டு நினைச்சுக்கொண்டியோ? நானும் இவ்வளவு நேரமாய் கதைச்சுக்கொண்டு நிக்கிறன் நீர் என்னடாண்டா எல்லாத்துக்கும் ..ம்... போட்டுக்கொண்டு..... உங்களுக்கெல்லாம்.."

றிசீவரை அடித்து வைக்கப்போன உருத்திரன் தொலைபேசி மறுமுனையில் விசும்பல் ஒலிகேட்டுத் திகைத்து நின்றான்.
காலையில் தான் சுந்தரலிங்கத்திற்கு நியூஸ் கிடைத்ததாம். நடந்து ரெண்டுகிழமையாச்சு. எப்பிடி யாழ்ப்பாணத்தில இருந்து நியூஸ் வரும்? இதுவும் யாரோ கொழும்புக்கு வந்த இடத்தில சொல்லிவிட்டு அவர்கள் போனின் பண்ணித்தான்....
சுந்தரலிங்கம் தொடர்ந்து கதைக்க முடியாமல் விம்மிக்கொண்டிருந்தான்.


உருத்திரன் கையிலிருந்த றிசீவர் விறைத்துப் போய்க்கிடந்தது. ■



## இவனை அறியுங்கள் !

# LEO FERRE

- வாசு



சுறுசுறுப்பான காலை.
ஏதேதோவெல்லாம் நடக்கின்றது.
யார் யாரோவெல்லாம் போகின்றார்கள்.
வருகின்றார்கள்.
பாரிஸ் நகரின் நிலத்திற்குள் மண்புழுக்களைப்போல் ஒரு இடத்தில் நுழைந்து இன்னோரிடத்தில் வெளியேறுகின்றார்கள்.
நிலத்தின் கீழ் இன்னொரு உலகம்,
பகலில் ஒன்று. இரவில் ஒன்று.
ஏறுபவர்களை ஏற்றிட இறங்குபவர்களை இறக்கிச் சலிப்பற்று ஓடிக்கொண்டிருக்கும் மெற்றோவிற்குள் நெரிசலுக்குள் அகப்பட்டுத் திணறிய என் கண்கள் நிலக்கீழ் நிலையங்களின் சுவர்விளம்பரங்களில் பதிந்த போதுதான் பார்த்தேன்.
அவன் காலமாகிவிட்டான்.
மாதாந்த சஞ்சிகைகளின் முன் அட்டைகள் அவனை அலங்கரிக்கின்றன.

LEO FERRE இறந்துவிட்டான்.
சீறும் சிங்கம் மறைந்துவிட்டது.

வெளுத்துப் பஞ்சாகிய சிகையைச் சிவப்பூட்டிய ஒரு வயதுபோன உருவம்.
கண்களில் வெறி.
தொடையைக்காட்டிப் பல்லையிளிக்கும் நளினங்களை மட்டுமே பிரசுரிக்கத் தெரிந்த சஞ்சிகைகள் இறந்தவுடன் அவனின் படத்தை அட்டையில் போட்டதைப் பார்க்க வாயில் வராத வார்த்தைகள் தான் வந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புனிதனின் இறப்பைப் புத்தகமாக்கி விற்கும் பொறுக்கிகள்.

LEO FERRE இறந்துவிட்டான்.
கவிஞன் இறந்துவிட்டான்.
கவிதையை கதாய்கமாக மாற்றித் தனியே நின்று போரிட்டு தனியே மடிந்த ஒரு தனிக்கவிஞன்.
இவன் போட்ட தணலை அநீதிகள் அணைத்துவிட்டன.
ஜனாதிபதியும் அமைச்சர்களும் பிரலாபம். நூற்றாண்டுக் கவிஞன் காலமாகி விட்டானாம். பிரஞ்சுப்பாடலின் ஆத்மா பிரிந்துவிட்டதாம்.
(ni Dieu ni Maitre) "கடவுளும் இல்லை, குருவும் இல்லை" என்று கதறி அடக்கப் பட்டவர்களை, கவிதையால் தட்டியெழுப்பியவன்.
கவிதைகளில் குண்டெறிந்து உறங்கிக்கிடக்கும் பிரஞ்ஞைகளை உயிர்க்க வைத்தவன்.
அனைத்து அதிகாரங்களையும் அனைத்து ஆட்சிமுறைகளையும் கவிதைகளால் நொருக்க முனைந்தவன்.
நாற்றமெடுப்பவை எனது சொற்களல்ல உங்களது சிந்தனைகள்தான் என்று அறைந்து கூறிய
அனார்ஸிஸ்ட்.

தொழிலாளர் வர்க்கத்தின் பிரஞ்ஞையாக பிரதிபலித்தவன் போய்விட்டான்.
கர்ஜிக்கும் குரலில் நின்று கதறவும், உருகும் குரலில் நின்று அழவும் உணர்ச்சியைத் தொட்டு உணர்த்தவும் தெரிந்தவோர் உத்தமப் பாடகன்.
"கொடுக்கப்பட்ட சொற்களை மட்டும் வைத்து கொடுக்கப்பட்ட கருத்துக்களுக்கு மட்டும் கவிதை எழுதுபவன் கவிஞனல்ல. அவன் தட்டெழுத்துக்காரன், அடிமை."
"கவிஞனுக்குக் கட்சியில்லை"

"கவிதைக்குக் குரல் கொடுத்துக் கதற வை"

"கவிதை பாடசாலையில் கற்பதில்லை. போராடவேண்டும்"
(A l'ecole de la poesie, on n'apprend pas on se bat)

"வாழும் கவிஞன் வாழ்ந்த கவிஞனுக்குக் கடன்பட்டவன்", தீர்க்கவேண்டும் என்றெல்லாம் பாடிய LEO FERRE.
கண்கள் பனித்தன.
இவனை அறியுங்கள் என்று கூக்குரலிடுவதையாவது நிறைவேற்றி என் வணக்கத்தை அவனுக்குத் தெரிவிக்கிறேன்.




எழுத்துலகில்
ஐந்தாவது தசாப்தத்தை
நெருங்கிக்கொண்டிருக்கும்
ஈழத்தின் மூத்த தலைமுறை எழுத்தாளர்
எஸ். பொ. அவர்களுடனான
நேர்காணல்.
அடுத்த இதழில்.. சந்திப்பு : முருகபூபதி



- சி. சிவசேகரம்

சென்ற வருட முற்பகுதியிற் பிரசுரமான சட்டநாதனின் இந்த இரண்டாவது தொகுதிக்குச் சரிநிகரில் ஒரு சுருக்கமான விமர்சனக்குறிப்பு வந்தது. அதில் சட்டநாதன் கதைகளின் சிறப்பைச் சரியாகவே அடையாளங்காட்டிய விமர்சகர் சட்டநாதன் கதைகளில் வரும் ஆண்களைவிடப் பெண்கள் மன உறுதி அதிகம் உடையோராகத் தெரிவது ஏன் என்று ஒரு கேள்வியையும் எழுப்பியிருந்தார். சட்டநாதன் எழுதியது குறைய. அவர் தரமாக எழுதவேண்டும் என்றாலோ என்னவோ எழுதிக் குவிப்பதில்லை என்ற என் ஊகத்தை இரா. சிவச்சந்திரன் நூலின் பின் அட்டையில் வரும் விமர்சனக்குறிப்பில் உறுதிசெய்கிறார். அவரது ஆக்கத்திறன் பற்றி நூலின் முன்னுரையில் ஏ. ஜே. கனகரெத்தினா எழுதியவற்றுடன் யாரும் கருத்து முரண்படுவதற்கு இடமில்லை.
அவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான 'மாற்றம்' 1980ல் வந்தது. அதில் வந்ததாக நானெண்ணும் இரண்டு கதைகளை வாசித்ததாக நிச்சயம். பெண்ணுரிமைக்குச் சார்பான அவரது நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்திய ஒரு கதை இப்ஸனின் 'பொம்மைவீடு' நாடகத்தை நினைவூட்டினாலும் பாத்திரப்படைப்பும் கதையமைப்பும் கதைசொல்லும் நேர்த்தியும் மனதில் ஒரு ஆழ்மான தாக்கத்தை ஏற்படுத்தின. நண்பர்கள் எஸ். வி. காசிநாதனும் திரு. கந்தையாவும் சேர்ந்து இக்கதையை ஆங்கிலத்துக்கு மொழிபெயர்ப்பதற்காகத் திட்டமிட்டனர். அக்காரியங் கைகூடுமுன் பல இடையூறுகள் ஏற்பட்டு அம்முயற்சி நிறைவேறவில்லை. (Journal of South Asian Studies எனும்) தென்னாசிய இலக்கியச் சஞ்சிகையில் அவரது கதைகள் பற்றிய ஒரு குறிப்பு வந்ததாகப் பின் அட்டையிலிருந்து தெரியவருகிறது.




**உலா**

(சிறுகதைத் தொகுதி)
க. சட்டநாதன்

வெளியீடு :
க. சட்டநாதன்
21, சட்டநாதர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
1992
133ப. விலை ரூ. 60/-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சட்டநாதனின் எழுத்தில் எந்தவிதமான ஆர்ப்பரிப்பும் இல்லை. மெல் லெனப்பாயும் ஆழநதியின் உறுதியான கம்பீரமான பாய்ச்சல் அவரது. எழுத்துக்குரியது. சொற்தெரிவும் வாக்கிய அமைப்பும் தெளிவுக்கு முதன்மை கொடுப்பன. அன்றாட வாழ்க்கையின் சாதாரணமானதும் அசாதாரணமான துமான நிகழ்வுகள்மூலம் மனித உறவுகளை அனுதாபத்துடன் சித்தரிக்கும் அவரது கதைகளில் பாலுறவு தொடர்பான விஷயங்கள் வருகின்றன. ஆனால் எவ்வகையிலும் அருவருப்புக்கு இடமில்லாதவிதமாக அவை எழுதப்பட்டுள் ளன.

சட்டநாதனுடைய கதைகளில் கோஷங்கள் இல்லை. சுலோகங்கள் இல்லை. ஆயினும் அவை பிரசாரம் செய்கின்றன. சமுதாயம் பற்றியும் குழந்தைகளின் உரிமை பற்றியும் சட்டநாதனுடைய நிலைப்பாடு அழகாகவும் தெளிவாகவும் கதைகளூடு வருகின்றன. எது சரி, எது பிழை என்று, தன்னை நீதவானாக்கித், தீர்ப்பு வழங்காமற், கதைப்போக்கில், நியாய அநியாயங்களை அழகாக உணர்த்துகிறார்.

'தரிசனம்' கதையில் சந்தேகம் காரணமாக மனைவியையும் மகளையும் கைவிட்டுப்போன கணவர் திரும்பி வந்து மனைவி தன்னை ஏற்பாள் என எதிர்பார்க்கிறார். எந்த ஆணையும் சார்ந்திருக்க ஆயத்தமாக இல்லாத மனைவி அவரைப் பண்பாகவே நடத்தி நிராகரித்து விடுகிறார்.

'பக்குவம்' மரணச்சடங்குக்குச் சுடலைக்குப்போய் மனவிரக்தியுடன் வருகிற ஒருவருக்கு முன்பின் தெரியாத ஒரு சிறுமி காட்டும் அக்கறையால் மனநிலை யில் ஏற்படும் மாற்றத்தைச் சித்தரிக்கிறது.

'தளம்பல்' ஆண் துணையின்றி வாழும் ஒரு ஏழைப்பெண்ணுடைய அனுபவம். கணவனை இழந்த பெண்ணை நாடிவரும் ஒருவனது துரோகமும் ஒரு காமுகனின் பார்வையும் அப்பெண்ணுக்குத் தன் குழந்தை மட்டுமே ஆதாரம் என்று உணர்த்துகின்றன.

'அரும்பு' ஒரு குழந்தைக்குக் கல்வியில் ஏற்படக்கூடிய ஆர்வத்துக்கு ஒரு ஆசிரியை காட்டும் பரிவின் முக்கியத்துவத்தை ஒரு சிறு சம்பவத்தின் மூலம் காட்டுகிறது. 'உலா'வில் வரும் குழந்தை மூலம் தமிழ்ச்சமுதாயம் தன்னுள் இல்லை என்று பாசாங்கு செய்ய விரும்பும் தகாத உறவு ஒன்றைக் கூறுகிறது. கோயிற்திருவிழாவுக்குப் போன குழந்தையின் நடத்தையில் அக்குழந்தை முன்னர் கண்ட சம்பவம் ஏற்படுத்தும் சிறிய பாதிப்பைக் கதை விவரிக்கிறது.

'வித்தியாசமானவர்கள் ' நமது சமுதாயத்திற் கற்பு, ஒழுக்கம் என்பன பற்றிக் கட்டிக்காக்கப்படும் பிறழ்வான நியாயங்களை அடையாளங்காட்டி இந்த வக்கிரத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழும் நிலைக்குத் தள்ளப்பட்ட ஒரு பெண்ணின் கதை. கனகரெத்தினா முன்னுரையில் குறிப்பிட்டது போல உலாவும் வித்தியாசமானவர்களும் சிலருக்கு முகச்சுழிப்பை ஏற்படுத்துவது தவிர்க்கவியலாததுதான்.

'ஒதுக்கம்' வேலைநிறுத்தத்திற் பங்குபற்றாத 'கருங்காலி' ஒருவர் பற்றி யது. குற்ற உணர்வு, மனித உறவுகளில் ஏற்படுத்தும் மாற்றத்தைக், கதைமு டிவில் வரும் இலேசான நகைச்சுவை உணர்வுடன், பலப்படுத்தும் கதை இது.



'கவளம்' இந்திய 'அமைதி காக்கும்' படையின் அடாவடித்தனத்துக்குப் பலியாகும் ஒரு கிழவர் பற்றிய கதை. இன்று இந்தியா வந்து இன்னோருகால் இரட்சிக்க வேண்டும் என்று சிலர் ஏங்கத் தொடங்குகிற நிலையில், சில வருடங்கள் முந்திய வரலாற்றை அமைதியாக நினைவூட்டுகிற இக் கதை ஒரு பயனுள்ள ஞாபக மாத்திரை.

சட்டநாதனுடைய உரைநடையில் மாதிரிக்குச் சில பகுதிகள் கீழே உள்ளன.

பிரதான வீதிக்கு வந்ததும் அவன் பசுபதியிடம் விடைபெற்றுக் கொண் டான்.
சைக்கிள் ஞாபகம் வந்தது.

'காற்றுக் கீற்றுப் போய்க் கிடக்குமோ...? அந்தப் பிள்ளை.....அவளது தம்பி.....வால்வ்ரியூப்பைத் தொட்டுக்கிட்டுப் பார்த்து....'
. ஏதோ கனவு கலைந்தது போலவும், மீண்டும் இயல்பான சூழலில் காலூன்றியது போலவும் அவனுக்கு இருந்தது.

சோர்வு நீங்கிய பாடாய் இல்லை. சைக்கிள் வைத்த வீட்டை அடைந்த போது அங்கு அவனுக்கு அதிசயம் காத்திருந்தது.
சைக்கிள் மழையில் நனையாதபடிக்கு, பக்குவமாய் 'ஸண்சேட்டின்' கீழ், முன்புறமாக எடுத்து வைக்கப்பட்டிருந்தது.

'யாருடைய வேலை இது....அந்தக் குழந்தைதான் எடுத்து வைத்திருப் பாளோ....? சிரமமாக இருந்திருக்குமே....சைக்கிளை எடுக்கும்போது எதிர்ப்பக்கமாகச் சரிந்து அவளுக்கு அடிகிடி பட்டிருந்தால்....அல்லது உருட்டும்போது உடம்பில் உரசல் எதாவது...'

இவன் சைக்கிளை எடுத்தபோது, ஈரக்கையைத் தனது சீத்தைச் சட்டையில் துடைத்தபடி ஓடிவந்தாள்.

" மழை பெய்தது....அதுதான்...."

" மழை பெய்தால் என்னம்மா..? உனக்கு ஏன் இந்தத் தொந்தரவு...."
" தொந்தரவா....எனக்கா...?".
அவள் உதடு நெகிழச் சிரித்தாள்.
உடைந்து போன உள்ளம் நிரவல் பெற்றுப் பரவசம்கொள்ள, அவளை வாஞ்சையுடன் பார்த்தான்.

வாழ்வின் அர்த்தமே அவள் என்பத போலவும், உயிர்ப்பசையின் தொடர்ச்சியை ஒரு சுடராய் அவள் தாங்கி நிற்பது போலவும் அவனுக்குத் தோன்றியது.

**(பக்குவம்)**

"படுத்திட்டு வாறன்... யேஸ் ஐ சிலெப்ற் வித் ஹிம்...". அவள் பேசி முடிப்பதற்கு முன்பாகவே பதில் தந்தாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவளது அந்தப் பதிலை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அது அவர்களை அதிரவைத்தது.

அக்கா கூச்சத்துடன் கேட்டாள்: "என்னடி இது வெக்கங்கெட்ட பேச்சு... மட்டு மரியாதையில்லாமை".

"என்ன வெக்கமிதிலை... அண்ணை செய்யிறதை, அப்பா செய்ததை நான் செய்தாப் பிழையே? "

"உண்மையிலை அந்த லாப் அசிஸ்டென்றிலை உனக்கு விருப்பமா? வெளியிலை தலை காட்ட முடியாமை கதையடிபடுகுது. எனக்கு நாக்கைப் பிடுங்கிச் சாகலாம் போலை இருக்கு. "

"விருப்பம்.... காதலெண்டில்லை... வெறும் உடல் சம்பந்தப்பட்ட... பச்சையாச் சொன்னா செக்ஸ் விசயம்தான்".

அவர்களை மேலும் சீண்டி வேடிக்கை பார்க்கவே அவள் அப்படிச் சொன்னாள்.

அண்ணைக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. உடல் பதற எழுந்தவன் அவளது தலைமயிரைப் பிடித்து இழுத்துச் சுவருடன் மோதினான். பலமான அடி தலையில் பட்டதால் நிலைகுலைந்தவள், சுவரோடு உட்கார்ந்து கொண்டாள்.
அந்த நிலையிலும் அவள் அவனைப் பார்த்து நிதானமாக, அவனது 'நானை'க் காயப்படுத்தும் தோரணையுன் கேட்டாள்:

"அண்ணி சுகமா இருக்கிறாளா? என்ன... நான் கேக்கிறது விளங்கேல்லையே? சின்னண்ணிதான். கராஜ்சிலை இருக்கிறவளும் பிள்ளைகளும்தான் இடஞ்சலாக்கும்.... "

அவனது பலவீனமான பகுதிகளை இவள் சுண்டியதும் அவன் உன்மத்தனாய் அவளது முகத்தில் எட்டி உதைத்தான்.
அத்தானும் அவசர அவசரமாகத் தன் பங்கிற்குக் கையோங்கியபோது அவள் ஏளனமாகச் சிரித்தபடி:
"பாவம் அத்தானுக்கும் அந்தச் செல்லப் பூனை விளையாட்டு ஞாபகம் வந்திட்டுதுபோலை.... அதுதான் இந்தச் சுறுசுறுப்பாக்கும்.....!"
"உவளுக்குச் சரியான ஹிஸ்ரீரியாதான். உவளின்ரை அமரடங்க உதையுங்கடா! அந்தக் கோவியனிட்டை அப்பிடி என்ன இனிப்பைக் கண்டிட்டாள் இந்தப்பரத்தை". -அம்மா
"கோவியனோ?" இது அப்பா.

"அவன்ரை அப்பன்ரை அப்பன்ரை அப்பன் சிறுபுலப்பக்கம். அம்மா தாவடிக்காரி" இப்படித்தான் அவளால் பேச முடியுமென்பது இவளுக்குத் தெரியும்.

அவள் அவர்களது முகத்தையே பார்க்கவிரும்பாதவளாய், பாத்ரூமுக்குள் சென்று சவரைத் திறந்து விட்டாள். உணர்ச்சிகள் சமனாகும்வரை சவரில் நின்றவள், குளித்து முடிந்ததும் அறையை அடைந்து, கதவை மூடிக்கொண்டாள். தனிமை அவளுக்கு அப்பொழுது தேவையாக இருந்தது.

**(வித்தியாசமானவர்கள்)**

"என்ன... என்ன... ஏன் இப்படிச்சிரிக்கிறை? "
"இல்லை... மலர் உங்கடை பெண்ணெண்பதை நிச்சயப்படுத்தியாச்சுப் போலை.... அதுக்கு, உங்களுக்கு ஏழு வருஷம் "பிடிச்சிருக்கு... "
"ஏன்... ஏன் அப்பிடிச் சொல்லிறை?"
"அந்தச் சந்தேகம்தானே நம்மைப் பிரிச்சு வச்சது.... அது கூட ஒரு வகையிலை நல்லதாய்ப் போச்சு.... கனவுகள் கலைய இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைப்பது நல்லதுதான்.
"நான் கனவிலை நினைக்காத ஒரு வாழ்வை நீங்கள் கற்பிதம் செய்து... என்னை விட்டுப் பிரிந்த பின்பு.... கற்பிதமானதே நிதர்சனமாகி விடுவது எவ்வளவு துயரம் தருகிற விஷயம்".

" என்ன .... துயரமா? நீ நகுலேசோடை சந்தோஷமாக இருக்கேல்லையா?"
"எதற்குமே ஆணில் சார்ந்திருக்கும் பெண்ணுக்கு... மகிழ்ச்சி, சந்தோஷமென்பதெல்லாம் கைகூடுமா? உங்களைப் பிரிந்த பின்பு... எனக்கு வயிறு இருந்ததே.... மலர், அந்தப் பிஞ்சு... துடித்திருக்க என்னாலை பொறுத்திருக்க ஆகுமா? சரியோ தப்போ, நீங்கள் தான் எனது முதல் காசுமரம். பாதுகாப்பு. வாழ்க்கை. கன்னி கழித்த உத்தமர். தெய்வம்".
குரலில் ஏளனம் இழைய, அவள் தொடர்ந்தாள்:

**(தரிசனம்)**

இரவு பட்டினி, காலையில் ஒரு சொட்டு நீர் வாயில் ஊற்றுவதற்குக் கூட வழியில்லாமல் போய்விட்டது.
வாய் ஊறலெடுத்தது. ஒரு துண்டுப் புகையிலைக் காம்பாவது கொடுப்பினுள் அதக்கினால்தான் அவருக்குப் பத்தியப் படும்போலிருந்தது.
'வயிற்றுக்கே கிடையாதபோது புகையிலை ஒரு கேடா' என நினைத்துக்கொண்டவர், தன்னை மறந்தவராய், வாய் விட்டுக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.
நேற்றுக்காலை நித்திரைப் பாயால் எழுந்த பொழுது 'பென்சனியர்' கந்தசாமி பட்ட அவஸ்தைதான் அவரை அப்படிச் சிரிக்க வைத்தது.
ஒரு 'குறள்' சுருட்டைப் பற்ற வைப்பதற்கு அவர் பட்டபாடு. கைத்தடியை ஓரமாய் வைத்தவர், நிலத்தில் உட்காரமுடியாமல் தவழ்ந்து நெருப்புக் கொள்ளியைக் குனிந்து ஊதிக் கனிய வைத்தபடி, சுருட்டை எடுத்து வாயில்வைத்து, தணலை வாய்வரை கொண்டு வந்து, நிமிர்ந்தபொழுது, பின்பக்கத்தால் குடை சாய்ந்து விழப்போனார். இவரது சமயோசிதம் அவரைக் காப்பாற்றியது. தாங்கிக் கொண்ட இவரை அந்தக் கிழவர், பீளை சாறிய கண்களால் நன்றி தெரிவித்துக் கொண்டது இவருக்கு இன்னமும் ஞாபகம் இருந்தது.
'கிழவன் பிடரி அடிபட விழுந்திருந்தால்....' அவருக்கு நினைக்கவே பயமாக இருந்தது.
'உடல் ஆட்டங் கண்டுவிட்ட இந்த நிலையிலும் இந்தப் பலவீனமா? மனிதர்கள் திருந்தவே மாட்டார்களா....? சுருட்டுப் பற்றாமல் விட்டால் குடியா முழுகிவிடும்.... ?
அவருக்கு எல்லாமே புரியும்படியாய் இல்லை.
வெற்றிலை, சுருட்டு, பீடி, கசிப்பு, கள்ளச்சாராயம், என்று எல்லா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வியாபாரமும் வீதியில் நடைபெறுகின்றது. ஆனால் ஒரு பருக்கை அரிசியோ, பருப்போ மட்டுந்தான் எங்கும் கண்ணில்படமாட்டேன் என்கிறது.

**(கவளம்)**

சட்டநாதனுடைய உரையாடற் தமிழ் சற்றே செப்பனிட்ட யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழை ஒட்டியதேயாயினும், (அடிக்கடியல்ல) இடையிடையே தமிழகத்துப் பத்திரிகைகளும் சினிமாவும் நம் எழுத்தாளர்களின் சொற் தெரிவில் ஏற்படுத்திய தாக்கத்தைக் காண நேர்வது ஒரு சிறிய குறைபாடு. ஆங்கிலச் சொற்களின் பிரயோகம் அளவுடன் தேவையையோட்டி அமைவது ஒரு சிறப்பு. தமிழகத்தின் சில முன்வரிசை எழுத்தாளர்கள், இவ்வகையில் சட்டநாதனிடம் கற்கச் சிறிது உள்ளது.

இரண்டு மாதங்கள் முன்பு 'உலா' என் கைக்குக் கிடைத்தபோது அதைப் படித்து முடித்துவிட்டுச் சரிநிகரில் வந்த கருத்தைப் பற்றி யோசித்தேன். சட்டநாதன் சமுதாயத்தில் இருக்க முடியாத, இல்லாத ஒரு பாத்திரத்தையும் படைக்கவில்லை நடக்கமுடியாத, நடக்காத எதையுமே சொல்லவில்லை. வலிமையான பெண் பாத்திரங்களை அவர் உலாவவிடுவது ஏன், இது தேவை கருதிச் செய்யப்பட்டதா? எப்படியாயினும் அவர் செய்தது மெத்தச் சரி என்றே நினைக்கிறேன்.

இறுதியாகச், சுய விளம்பரமும் விமர்சன வெறுப்பும் புகழுரைகள்பெறும் சுயதிருப்தியும் வயதுவேறுபாடின்றிப் பல எழுத்தாளர்களைப் பிடித்துள்ள ஒரு சூழ்நிலையை நாம் காணலாம். இச்சூழலில் இந்த அடக்கமான மனிதரின் எழுத்தின் தெளிவும் ஆழமும் ஈழத் தமிழ் இலக்கியத் துறையின் எதிர்காலம் பற்றிய ஒரு நம்பிக்கைச் சுடரை ஏற்றுவன. ■


16 வது

இலக்கியச்சந்திப்பு மலர்

அஆஇ

புகலிடச் சிறுகதைகள் சிறப்பிதழ்

தொடர்புகட்கு :

*A AA IE*
*Post bus 85326*
*3508 AH Utrecht*
*Netherlands*



கலை பற்றிய கட்டுரைகள்

தமிழ் அழகியல்

வெளியீடு :
தாமரைச்செல்வி பதிப்பகம்
16, நான்காவது தெரு,
டாக்டர் சுப்பராயன் நகர் ,
கோடம்பாக்கம், சென்னை 600 024.




## என் முடிவு

என் அறையைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா?
அது சுவர்களுக்குப் பதில் நான்கு கதவுகளைக் கொண்டது.
இம்முறை எல்லோருக்கும் சந்தேகத்தைக் கிளப்பியது-
நாலுபேர் வந்து போகட்டுமென நான்தான் வைத்தேன்.

"தமிழா விழித்தெழு" என்ற குரல் கதவைத் திறக்க
தன்மானம் பற்றி நிறையப் பேசினார் தமிழர் ஒருவர்.


'மனிதனே சிந்தி' என்ற மற்றொரு கதவைத் திறக்க
மனித வாழ்க்கையைப் பற்றி ஆதங்கப்பட்டார் ஒரு தோழர்.

'இந்துவே எழு' என்ற குரல் இன்னொரு கதவைத் திறக்க
மதம் பற்றி புலம்பிச் சென்றார் யாரோ ஒருத்தர்.

பின்னிருவர்கள் மூலம் நிறை விஷயங்களை
சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில்-

யாரோ ஒருத்தரின் வருகையால்
ஏதோ ஒன்று களவாடப்பட்டது என்னிடம்
போனபின் நானும் தேடினேன் பலநாள்.

இன்றுதான் தெரிந்தது
களவாடப்பட்டது என் மனிதாபிமானம் என்று.



என் அறையைச் சீரமைத்துவிட்டேன்
இனி
ஒரு கதவு - நான் போகவர,
ஒரு ஜன்னல் - காற்று உள்ளே வர.
போதாதா காற்று உள்ளே வந்தால்?

- அ. ஜ. கான்.
சென்னை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

